# அரசிறை முகாமைத்துவ அறிக்கை 2023

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**
**இலங்கை**

2022 நவம்பர் 14

# அரசிறை முகாமைத்துவ அறிக்கை 2023

**ரணில் விக்கிரமசிங்க**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்**

**இலங்கை**

2022 நவம்பர் 14 ஆம் திகதி

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தின் கீழ் , அரசிறை உபாயக் கூற்று - 2023 (4,5 மற்றும் 6 ஆம் பிரிவுகளுக்கிணங்க) வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2023 (7,8 மற்றும் 9 ஆம் பிரிவுகளுக்கமைவாக) கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுகிறது.

**ISBN** 978-624-5674-12-1

கொழும்பு 8, இல 118, டாக்டர் டானிஸ்டர் சில்வா மாவத்தையில் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு, இலங்கை, கொழும்பு 01, செயலகத்தில் அமைந்துள்ள நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டது.

**உள்ளடக்கம்**


| | பக்கம் |
|---|---|
| பிரதான பொருளாதார குறிகாட்டிகள் | vii |
| 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் | viii |
| இணக்கப்பாடு - 2022 | ix |
| **பகுதி I** | |
| அரசிறை மூலோபாயக் கூற்று - 2023 | xiii |
| 01. நடுத்தரக் கால அரசிறை மூலோபாயம் | |
| 1.1 மேன்நோக்கு | 3 |
| 1.2 நடுத்தரக் காலத்தில் அரசிறை உபாயம் | 5 |
| **பகுதி II** | |
| வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2023 | 11 |
| 01. அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு | |
| 1.1 மேன்நோக்கு | 15 |
| 1.2 அரசாங்க வருமானம் | 19 |
| 1.3 அரசாங்க செலவினம் | 31 |
| 1.4 திறைசேரி செயற்பாடுகள் | 34 |
| 1.5 வெளிநாட்டு நிதியளிப்பு | 39 |
| **02. பொருளாதார முன்நோக்குகைகள்** | |
| 2.1 மேன்நோக்கு | 43 |
| 2.2 பொருளாதார வளர்ச்சி | 44 |
| 2.3 நாணயத் துறை அபிவிருத்திகள் | 52 |
| 2.4 பங்குச் சந்தை | 53 |
| 2.5 வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் | 54 |
| 2.6 உலக பொருளாதார நோக்குகைகள் | 57 |
| **03. அரசுடமை நிறுவனங்களின் செயலாற்றுகைகள்** | |
| 3.1 மேன்நோக்கு | 63 |
| 3.2 10 பிரதான அரசுடமை நிறுவனங்களின் மீளாய்வு | 63 |
| **04. 2023 வரவு செலவுத் திட்ட தயாரிபபிற்கு் பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள்** | 75–77 |

## அட்டவணைகள்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| **பகுதி I** | | |
| அட்டவணை 1.1 | நடுத்தரக்கால பேரண்ட அரசிறைச் சட்டகம் : 2022 - 2027 | 8 |
| **பகுதி II** | | |
| அட்டவணை 1.1 | அரசிறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம் | 17 |
| அட்டவணை 1.2 | மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2022 | 18 |
| அட்டவணை 1.3 | அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம் | 19 |
| அட்டவணை 1.4 | பெ.சே.வரியின் செயலாற்றுகை | 20 |
| அட்டவணை 1.5 | உற்பத்தி வரியின் செயலாற்றுகை | 21 |
| அட்டவணை 1.6 | மோட்டார் வாகன இறக்குமதி மற்றும் புதிய வாகனப் பதிவு | 22 |
| அட்டவணை 1.7 | சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதி ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி | 23 |
| அட்டவணை 1.8 | சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் | 23 |
| அட்டவணை 1.9 | முத்திரை வரி மற்றும் மோட்டார் வாகன பதிவுக் கட்டணம் ஆகியவற்றின் செயலாற்றுகை | 24 |
| அட்டவணை 1.10 | அரசாங்க வருமானத்தின் மாற்றல் பகுப்பாய்வு (சனவரி - செப்தெம்பர் 2022) | 25 |
| அட்டவணை 1.11 | அரசாங்க செலவினங்களின் செயலாற்றுகை | 31 |
| அட்டவணை 1.12 | அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2021 - 2022 | 32 |
| அட்டவணை 1.13 | நலனோம்பல் செலவினம் | 33 |
| அட்டவணை 1.14 | அரசாங்க திறைசேரி காசுப் பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று | 35 |
| அட்டவணை 1.15 | சாதன ரீதியான மொத்த உள்நாட்டுப் பெறுகைகள் | 35 |
| அட்டவணை 1.16 | நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புக்கள் - (சனவரி - செப்தெம்பர் 2022) | 37 |
| அட்டவணை 1.17 | வெளிநாட்டு கடன்கள் மற்றும் நிதி உதவிகளின் பகிர்வுகள் - 2022 சனவாி - செப்தெம்பர் வரையில் | 38 |
| அட்டவணை 2.1 | மொ.உ.உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்) | 44 |
| அட்டவணை 2.2 | சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள் | 49 |
| அட்டவணை 2.3 | சுற்றுலாத் துறையின் செயலாற்றுகை | 50 |
| அட்டவணை 2.4 | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%) | 51 |
| அட்டவணை 2.5 | தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம் மற்றும் உணவுப் பணவீக்கம் (அடிப்படை : 2013 = 100) | 53 |
| அட்டவணை 2.6 | மூலதனச் சந்தை அசைவுகள் | 54 |
| அட்டவணை 2.7 | வெளிநாட்டு வர்த்தகம் | 56 |
| அட்டவணை 2.8 | உலகப் பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் - 2022 (கணிப்பு) | 58 |
| அட்டவணை 3.1 | மின்னுற்பத்தி கொள்ளளவு வகுதி | 64 |
| அட்டவணை 3.2 | 52 பிரதான அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் இலாபமீட்டல் தன்மை | 68 |
| அட்டவணை 3.3 | அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் அறவீடுகள் / பங்கிலாபம் | 69 |

## வரைபுகள்


பக்கம்

### பகுதி II

| | |
|---|---|
| வரைபு 1.1 மொத்த வருமானத்தின் வகுதிகள் (சனவரி - செப்தெம்பர் 2022) | 19 |
| வரைபு 1.2 வருமான மூலங்கள் அடிப்படையில் வரி வருமானம் (சனவரி - செப்தெம்பர் 2022) | 19 |
| வரைபு 1.3 உற்பத்தி வரியின் செயலாற்றுகை (சனவரி - செப்தெம்பர் 2022) | 21 |
| வரைபு 1.4 சாதன அடிப்படையில் மொத்த உள்நாட்டு பெறுகைகள் (சனவரி - செப்தெம்பர் 2022) | 36 |
| வரைபு 1.5 ஒவ்வொரு துறைக்குமான பகிர்வுகள் (சனவரி - செப்தெம்பர் 2022) | 39 |
| வரைபு 1.6 கடன் வழங்குனர் ரீதியான (2022 செப்தெம்பர் 30 அன்று உள்ளவாறு) கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பயன்படுத்தப்படாதவை | 39 |
| வரைபு 1.7 துறைரீதியான அபிவிருத்தி கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பகிரப்பட்டு பயன்படுத்தப்படாதவை (2022 செப்தெம்பர் 30 வரை) | 39 |
| வரைபு 2.1 மொ.உ.உற்பத்தி வளர்ச்சி | 43 |
| வரைபு 2.2 மொ.உ.உ வகுதி - முதல் அரையாண்டு 2022 | 44 |
| வரைபு 2.3 விவசாயத்துறை வகுதி - முதல் அரையாண்டு 2022 | 46 |
| வரைபு 2.4 கைத்தொழில் துறை வகுதி - முதல் அரையாண்டு 2022 | 47 |
| வரைபு 2.5 உற்பத்தித்துறை வகுதி - முதல் அரையாண்டு 2022 | 47 |
| வரைபு 2.6 சேவைகள் துறை வகுதி - முதல் அரையாண்டு 2022 | 49 |
| வரைபு 2.7 தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம் | 51 |
| வரைபு 2.8 நாணய சராசரி, தனியார் துறை கடன் வளர்ச்சி, விளைவு விகிதங்கள் | 52 |
| வரைபு 2.9 தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப் பணவீக்க அசைவுகள் (அடிப்படை : 2013 = 100) | 52 |
| வரைபு 2.10 வர்த்தக மீதி, நாணயமாற்று வீத அசைவுகள் | 54 |
| வரைபு 2.11 ஏற்றுமதிகளின் வகுதி | 55 |
| வரைபு 2.12 இறக்குமதிகளின் வகுதி | 57 |

### கட்டங்கள்

| | | |
|---|---|---|
| கட்டம் 2.1 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் (சனவரி - செத்தெம்பர் 2022) | 28 |

### பின்னிணைப்பு

| | | |
|---|---|---|
| பின்னிணைப்பு | I பொதுத் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட உத்தரவாதங்களின் விபரப் பட்டியல் - 2022.09.30 அன்றுள்ளவாறு | 78 |
| பின்னிணைப்பு | II பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகள் | 80 |
| பின்னிணைப்பு | III வருமான மதிப்பீடுகளுக்கான ஊகங்கள் - 2023 | 88 |

## பிரதான பொருளாதாரக் குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | 2021 | 2022 |
| **மெய்த் துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதல் அரையாண்டு | % | 9.3 | -4.8 |
| விவசாயம் | முதல் அரையாண்டு | % | 8.8 | -7.6 |
| கைத்தொழில | முதல் அரையாண்டு | % | 12.4 | -7.1 |
| சேவைகள | முதல் அரையாண்டு | % | 5.6 | -0.6 |
| பணவீக்கம்(புள்ளிக்குப் புள்ளி) - CCPI | ஒக் இறுதி | % | 7.6 | 66.0 |
| பணவீக்கம் (சராசரி) - CCPI | ஒக் இறுதி | % | 4.8 | 38.3 |
| வேலையின்மை வீதம் | இரண்டாம் காலாண்டு | % | 5.1 | 4.6 |
| தொழிற்படைப் பங்கேற்பு வீதம் | இரண்டாம் காலாண்டு | % | 49.8 | 50.1 |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன - செப் | ரூபா. பில். | -1,328 | -1,244 |
| மொத்த வருமானம் | சன - செப் | ரூபா. பில். | 1,051 | 1,448 |
| வரி வருமானம் | சன - செப் | ரூபா. பில். | 952 | 1,283 |
| வரியல்லாத வருமானம் | சன - செப் | ரூபா. பில். | 99 | 165 |
| மொத்த செலவினம் | சன - செப் | ரூபா. பில். | 2,380 | 2,695 |
| மீண்டெழும் செலவினம் | சன - செப் | ரூபா. பில். | 2,087 | 2,300 |
| அரசாங்க முதலீடு | சன - செப் | ரூபா. பில். | 305 | 418 |
| அரசாங்க படுகடன் | யூன் இறுதி | ரூபா. பில். | 16,565 | 24,264 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில். | 8,938 | 9,981 |
| விவசாய ஏற்றுமதிகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில். | 1,987 | 1,940 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில். | 6,903 | 8,001 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில். | 3,893 | 4,577 |
| ஏனையவை | சன - செப் | ஐ.அ.டொ.மில். | 3,010 | 3,424 |
| இறக்குமதிகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில். | 14,938 | 14,085 |
| நுகர்வுப் பொருட்கள் | சன - செப் | ஐ.அ.டொ.மில். | 2,890 | 2,147 |
| இடைநிலைப் பொருட்கள் | சன - செப் | ஐ.அ.டொ.மில். | 8,791 | 9,497 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன - செப் | ஐ.அ.டொ.மில். | 2,597 | 3,694 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன - செப் | ஐ.அ.டொ.மில். | 3,249 | 2,433 |
| வர்த்தக மீதி | சன - செப் | ஐ.அ.டொ.மில். | -5,999 | -4,104 |
| சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை | சன - ஒக் | எண் | 60,695 | 568,258 |
| சுற்றுலாத்துறை சம்பாத்தியங்கள் | சன - ஒக் | ஐ.அ.டொ.மில். | 158.2 | 1,022 |
| தொழிலாளர்களின் பண அனுப்புகை | சன - ஒக் | ஐ.அ.டொ.மில். | 4,895 | 2,929 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | சன - ஆக | ஐ.அ.டொ.மில். | -181.3 | 97.2 |
| மொத்த சென்மதி நிலுவை (BOP) | சன - செப் | ஐ.அ.டொ.மில். | -2,573 | -2,927 |
| மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் | செப் இறுதி | ஐ.அ.டொ.மில். | 2,704 | 1,777 |
| நாணய மாற்று விகிதம் (இறுதி மாதம்) | ஒக் இறுதி | டொலர் ஒன்றிற்கான ரூபா | 201.9 | 363.3 |
| நாணய மாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | சன - ஒக் | டொலர் ஒன்றிற்கான ரூபா | 201.1 | 363.1 |
| **நாணயத்துறை** | | | | |
| நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) | ஒக் இறுதி | % | 5.00 | 14.50 |
| நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) | ஒக் இறுதி | % | 6.00 | 15.50 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | செப் இறுதி | % | 4.00 | 4.00 |
| அடிப்படை கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கிச் சராசரி (AWPLR) | செப் இறுதி | % | 6.42 | 25.95 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகதம் (91 நாட்கள்) | செப் இறுதி | % | 6.70 | 31.94 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகதம் (364 நாட்கள்) | செப் இறுதி | % | 7.01 | 29.85 |
| நாணய வழங்கல் வளர்ச்சி ($M_{2b}$) | செப் 2021/செப் 2022 | % | 18.2 | 14.9 |
| தனியார் துறை கடன் வளர்ச்சி | செப் 2021/செப் 2022 | % | 13.8 | 11.0 |

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்**

| பிரிவு | தேவைப்பாடு | உள்ளடக்கங்கள் | இணக்கப்பாடுகள் |
|---|---|---|---|
| பிரிவு 4, 5 மற்றும் 6 | அரசிறை உபாயக் கூற்று சமர்ப்பிப்பு* | அரசின் அரசிறைக் கொள்கைகளின் பால் மக்கள் விழிப்புட்டலை அதிகரிப்பதற்கு அரசிறை உபாயக் கூற்று மற்றும் அரசாங்கத்தின் அரசிறை உபாய மதிப்பீட்டுச் செயற்பாட்டு நியமங்களின் ஸ்தாபிப்பு | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் 2 ஆவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| பிரிவு 7,8 மற்றும் 9 | வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கான வரவு செலவுத்திட்டம், பொருளாதாரம் மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை. | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் 2 ஆவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| பிரிவு 10, 11 மற்றும் 12 | நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக, ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளும்வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நிறைவேற்றுகையின் திகதியிலிருந்து 6 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் அல்லது யூன் மாதம் இறுதித் தினம் வருடாந்தம் வெளியடப்பட வேண்டியுள்ளதுடன் இத்திகதிகளில் எத்திகதி பிந்தியதாக இருந்தபோதும் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 2 வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 13, 14 மற்றும் 15 | இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அதேபோல் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளக் கூடிய வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) | நிதி ஆண்டு முடிவடைந்ததிலிருந்து 5 மாதங்களுக்குள் பொது மக்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 16,17,18 மற்றும் 19 | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு ** | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை நாட்டின் அரசிறை நிலைமை பற்றிய தகவல்களை இற்றைப்படுத்தி வழங்குகின்றது. | பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துவதாக அறிவித்த திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும். |

* நிதி அமைச்சரினால்
** நிதி அமைச்சின் செயலாளரினால்

| இணக்கப்பாடுகள் - 2022 |
|---|
| • **இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை - நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் வருடாந்த அறிக்கை - 2021**<br><br>இவ்வறிக்கையானது 2021 ஆம் ஆண்டின் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையினைக் குறிப்பிடுவதுடன் 2022 மே மாத இறுதியில் பொது மக்களுக்காக வெளியிடப்பட்டு, 22 யூன் 2022 இல் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்பட்டது. |
| • **அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை - 2022**<br><br>2022இன் முதல் நான்கு மாதங்களின் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமை, 2022 யூன் இறுதியில் மக்களுக்காக வெளியிடப்பட்டதுடன், 2022 யூலை 21 ஆம் திகதியில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. |
| **இந்த அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2023 இல் அடங்கியுள்ள விடயங்கள்**<br><br>• **அரசிறை மூலோபாயக்கூற்று - 2023**<br><br>முழுமையான அரசிறை கொள்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசாங்கத்தினால் கருதப்படும் பிரதான அரசிறை நடவடிக்கைகளை குறித்துக்காட்டும் பரந்த மூலோபாய முன்னுரிமைகளை அரசாங்கத்தின் இவ் அரசிறை மூலோபாய சுருக்கம் குறிக்கின்றது. மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்புத் தினத்தன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.<br><br>• **வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2023**<br><br>அரசாங்கத்தின் வருமானம், செலவுகள் மற்றும் அரச படுகடன்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய மதிப்பீடுகளுடன், அதன் அரசிறை மூலோபாயத்திற்கெதிரான அரசாங்கத்தின் அரசிறை செயற்திறனை மதிப்பிடுவதற்கான அடிப்படைகளை இப்பகுதி விபரிக்கின்றது மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்படவுள்ளது. |

# பகுதி I

**அரசிறை மூலோபாயக் கூற்று - 2023**

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் வெளியிடப்பட்டது.**

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4,5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ் அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயக் கூற்று அறிக்கையினை பொதுமக்களுக்கு சமர்ப்பிப்பதுடன் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் நிதி அமைச்சர் கேட்கப்பட்டதற்கிணங்க இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது அமுல்படுத்தப்படவிருக்கும் முழுமையான அரசிறை கொள்கை மற்றும் மூலோபாய நோக்கில் அரசாங்கம் முக்கியமானதாகக் கருதும், பிரதான அரசிறை நடவடிக்கைகளைக் குறிப்பிடும் அதேவேளை வரவு செலவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பரந்த மூலோபாய முன்னுரிமைகளை விளக்குகின்றது.

# நடுத்தர கால அரசிறை மூலோபாயம்

# 01

## 1.1 மேன்நோக்கு

இலங்கை தற்போது முன்னெப்போதும் இல்லாத அளவிலான பெரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருகிறது. “இரட்டை பற்றாக்குறை நோய்க்குறி” உட்பட பல சிக்கல்களால் பொருளாதாரம் முடக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவு மீதியில் சமகாலத்தில் நீண்டகால நடப்புக் கணக்கு பற்றாக்குறை மற்றும் அரசிறைத் துறையில் அரசிறைப் பற்றாக்குறை மற்றும் பெரியளவு நிதிப் பற்றாக்குறையால் வற்புறுத்தப்பட்ட மற்றும் 2019 இல் அசாதாரண வரிக் குறைப்புகளின் விளைவாக பண நிதியளிப்பு, ரஷ்ய - உக்ரைன் மோதலால் தூண்டப்பட்ட உலகளாவிய பொருளாதார கொந்தளிப்புடன் சேர்ந்து கொவிட்-19 தொற்று நோயின் பின்தங்கிய விளைவினால் சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பணம் அனுப்புகைப் போன்ற தீர்ந்துபோன கடன் அல்லாத உள்ளீடுகள், வரலாற்றில் என்றுமில்லாதவாறான பணவீக்கம் மிக அதிகளவிலான ரூபா பெறுமதி இறக்கம் மற்றும் பொருளாதாரத்தில் கட்டமைப்பு ரீதியான பாதிப்புகள் என்பவற்றினால் பொருளாதாரம் முடக்கப்பட்டது. இந்த நெருக்கடிகளின் காரணமாக பொருளாதாரம் சமூகத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் வறியவர்களை வெகுவாகப் பாதித்த 2021 இன் அரையாண்டில் காணப்பட்ட 9.3 சதவீத நிலையான வளர்ச்சியிலிருந்து 2022 இன் முதல் அரையாண்டில் 4.8 சதவீதமாக காணப்பட்டது. இந்த மோசமான பொருளாதார நிலைமையினால் வறியவர்கள் மற்றும் பலவீனமானவர்களே அதிகளவு பாதிக்கப்பட்டனர்.

ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்ட மட்டங்களைத் தாண்டிய படுகடன் அதிகரிப்பின் விளைவாக அரசாங்கத்தை நிர்ப்பந்தித்த வருமானத்தை விஞ்சிய செலவினம் காரணமாக அரசாங்கத்தின் காசுப் பாய்ச்சல் பலவீனடைந்தது. கடன் ஒழுங்குபடுத்தலினை முறையாகக் கையாளுவதற்கு கடன் வழங்குநர்களுடன் வெளிநாட்டுக் கடன் கடப்பாட்டு மீள் கொடுப்பனவினை இடைநிறுத்துவதாக (debt standstill) அரசாங்கம் அறிவிக்குமளவு அரசாங்கத்தின் படுகடன் தொடர்ந்து நிலையற்றதாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், பொருளாதாரத்தினை முதல் முன்னுரிமையாக ஸ்திரப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான கொள்கை முன்னெடுப்புகளினால் 2022 இன் இரண்டாவது அரையாண்டில் பொருளாதார மீள் எழுச்சியின் அடையாளங்கள் வெளிப்பட ஆரம்பித்துள்ளது. எவ்வாறாயினும், அதிகரித்து வரும் சந்தை வட்டி வீதங்கள் காரணமாக தனியார் துறைக்கான கடன் வீழ்ச்சியடைந்துள்ளது. கேள்வி மற்றும் வழங்கல் இரண்டிலும் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக ஒக்டோபரில் பண மதிப்பிழப்பு அவதானிக்கப்பட்டுள்ளதுடன், நாணய நிதியளிப்பு தொடர்ந்து காணப்படுவதுடன், இறக்குமதிகளை உள்ளடக்கிய முன்னேற்றகரமான கொள்கையினூடாக வெளிநாட்டுத் துறையானது உறுதிப்படுத்தப்பட்டது.

மிக நீண்ட காலம் கவனிப்பாரற்றிருந்த மிகவும் அவசியமான அரசிறைத்துறை மறுசீரமைப்புகளை அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசாங்கத்தின் செலவினத்தினை குறைக்கும் அதேவேளை வரி வீதங்களில் அதிகரிப்பும் வரி அடிப்படைகளை விரிவுபடுத்தல் என்பன அவற்றில் சிலவாகும். பொருளாதாரத்தின் ஒவ்வொரு பகுதிக்குமான மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கட்டமைப்பு மறுசீரமைப்புகளுடன் பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான தன்மைக்கு அடித்தளமிடும் வகையில் நீடிக்கப்பட்ட நிதி வசதியளிப்பு (Extended Fund Facility-EFF) என்பதினூடாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கம் உதவியினைக் கோரியுள்ளது. பேரண்டப் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் பதவியினர் மட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கை ஒன்று 2022 செப்டெம்பரில் கைச்சாத்திடப்பட்டது. பொருளாதாரத்தினை ஸ்திரப்படுத்துவதற்கு எதிர் காலத்தில் சில மறுசீரமைப்புகள் செயற்படுத்த சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வரி திருத்தங்கள் உள்ளடங்களாக பல்வேறு பிரதான முக்கிய மறுசீரமைப்புகளை அரசாங்கம் ஏற்கனவே செயற்படுத்தியும் அறிவித்துமுள்ளது.

இலங்கையின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2022 இல் 8.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும் எனவும் 2023 இல் மேலும் 3.0 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக சர்வதேச நாணய நிதியத்தினால் 2022 ஒக்டோபரில் வெளியிடப்பட்ட உலக பொருளாதார நோக்கு தெரிவிக்கின்றது. சீனப் பொருளாதாரத்தின் மந்தகரமான தாக்கம் தொடர்ந்து காணப்படுதல், ரஷ்யா மற்றும் உக்ரேன் நாடுகளுக்கான பிணக்கு மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு என்பன உள்நாட்டுப் பொருளாதார மீள் எழுச்சியில் அழுத்தத்தினை ஏற்படுத்தும். 2022 இல் உலகப் பொருளாதார வளர்ச்சியானது 3.2 சதவீதத்தினை அண்மித்திருக்கும் எனவும் 2023 இல் 2.7 சதவீதமாக மேலும் குறைவடையும் எனவும் சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கின்றது.
2020 மற்றும் 2021 இல் 10 சதவீதத்துக்கு அதிகமான அரசிறை வளர்ச்சி பதிவானதன் பின்னர் 2022 ஜூன் மாதம் முதல் ஆரம்பமான அரசிறை வளர்ச்சி முன்னெடுப்புகளினை அடிப்படையாகக் கொண்ட வருமானத்துடன் 2022 இல் மொ.உ. உற்பத்தி ஏறக்குறைய 8.0 சதவீதத்தினால் ஒற்றை இலக்க மட்டத்தில் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை தொடர்ந்து பேணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2021 இல் மத்திய அரசாங்கத்தின் படுகடன் ரூபா 17,590 பில்லியனாக அல்லது மொ.உ. உற்பத்தியில் 99.5 சதவீதமாக காணப்பட்டதுடன் அதில் 36.9 சதவீதம் வெளிநாட்டு நாணய படுகடனாகக் காணப்பட்டது. நிலுவையிலுள்ள மத்திய அரசாங்கப் படுகடன் 2021 இன் இறுதியில் உள்ளவாறு ரூபா

17,589.4 பில்லியனிலிருந்து 2022 ஜூன் இறுதியளவில் ரூபா 24,264.4 பில்லியனாக 37.9 சதவீதத்தினால் அதிகரித்தது. 2022 ஜூன் இறுதியில் நிலுவையான உள்நாட்டுப் படுகடன் ரூபா 12,738.5 பில்லியனாக 14.8 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை மொத்த நிலுவை வெளிநாட்டுப் படுகடனின் ரூபா பெறுமதி ரூபா 11,525.9 பில்லியனாக 77.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

2022 மார்ச்சு 07 ஆந் திகதியன்று இலங்கை மத்திய வங்கியினால் நிலையான நாணய வீதத் தளர்வு அறிவிக்கப்பட்டதன் பின்னர், 2022 சனவரி - மே மாதங்களின்போது இலங்கையின் ரூபா பெறுமதி 70 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நாளுக்குள்ளான செலாவணி வீதத்தில் தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு 2022 மே 13 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வங்கிகளுக்கிடையிலான நிறையேற்றப்பட்ட சராசரி உடனடி செலாவணி வீதத்தின் நடு வீதமொன்றையும் மாறுபாட்டு எல்லையினையும் மத்திய வங்கி அறிவித்தது. உத்தியோகபூர்வ மற்றும் கண்காணிக்கப்படாத செலாவணி வீதங்களுக்கிடையிலான இடைவெளியினை குறைப்பதற்கு இது உதவியது.

2022 நடுப்பகுதியில் அரசிறைப் பற்றாக்குறையில் அவதானித்த அழுத்தங்களைத் தணிப்பதற்கு அரசாங்கம் பல்வேறு வருமான அடிப்படையிலான அரசிறை திரட்சிப்படுத்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. அண்மைய மாதங்களில் வருவாய் சேகரிப்பில் சில மேம்பாடுகள் காணப்படுகின்ற போதிலும், வருமான வழிமுறைகள் பலவற்றின் சாதகமான பெறுபேறுகள் இனிமேல்தான் செயல்வடிவம்பெறும். மிகை அறவீட்டு வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு அறவீடு ஆகியவற்றை விதித்தல், நிதியியல் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி வீதத்தினை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்துக்கு அதிகரித்தல் மற்றும் நியம பெறுமதிசேர் வரி வீதத்தினை 2022 ஜூன் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்துக்கும் 2022 இல் நடைமுறைக்குவரும் வகையில் 15 சதவீதத்துக்கும் அதிகரித்தல், தொலைத்தொடர்பு அறவீட்டினை 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்துக்கு அதிகரித்தல் உள்ளடங்கலாக வருமான அதிகரித்தல் வழிமுறைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது. 2022 ஒக்டோபர் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் முன்னேற்றகர வரி சீர்திருத்தப் பொதியொன்றினை அரசாங்கம் அறிவித்தது. இப்பொதி உள்ளடக்குவன (i) உச்ச எல்லை வீதத்தை 36 சதவீதத்திற்கு உயர்த்தி அத்துடன் வரி மதிப்பீட்டு ஆண்டொன்றுக்கு வரியற்ற அடிப்படை அளவினை, ரூபா 1.2 மில்லியனுக்குக் குறைத்து, இத்தொகைக்கு மேல் ஒவ்வொரு ரூபா 500,000 இற்கும் இவ் வீதம் வரை 6 சதவீதப் புள்ளிகளால் வரி வீதத்தை உயர்த்தி, தனிப்பட்ட வருமானவரி வீத எல்லை அட்டவணையை அதிகரித்தல், (ii) பங்கிலாபங்கள் தவிர அனைத்துக் கொடுப்பனவுகள் மீதும் இறுதியற்ற பிடித்து வைத்தல் வரிகளை மீள அறிமுகப்படுத்தல் மற்றும் பங்கிலாபங்களுக்காக இறுதி பிடித்துவைத்தல் வரியினை அறிமுகப்படுத்தல், (iii) 30 சதவீதம் கொண்ட நிறுவன வருமான வரியை ஒன்றுசேர்க்கின்ற அதேவேளை அனைத்துத் துறைக்கும் குறிப்பான நிறுவன வருமான வரி விலக்களிப்புகளை நீக்குதல் அத்துடன் (iv) பெறுமதிசேர் வரி பதிவுசெய்யும் அடிப்படை அளவை ஆண்டுக்கு ரூபா 300 மில்லியனிலிருந்து ஆண்டுக்கு ரூபா 80 மில்லியனுக்குக் குறைத்தல்.

உயர்வான பணவீக்கத்தினதும் ரூபாவின் சடுதியான பெறுமானத் தேய்வினதும் சாதகமான வருவாய் தாக்கங்களுடன் ஒன்றிணைந்து 2022 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பல கொள்கை சார்ந்த வழிமுறைகளைப் பிரதிபலித்து 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்க வருவாய் அதிகரித்தது. 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த அரசாங்க வருவாயானது 2022 இன் அதேகாலப்பகுதியின் ரூபா 1,050.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 1,448.5 பில்லியனாகக் காணப்பட்டது. வரி மற்றும் வரியல்லா வருமானம் இரண்டிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகளில் இருந்து நன்மையடைந்து 37.9 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. 2022 ஆம் ஆண்டுக்காக ரூபா 2,084 பில்லியன் கொண்ட வருடாந்த வருமான மதிப்பீட்டின் 69.5 சதவீதத்தினை இது பதிவுசெய்கின்றது. 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில், வரி வருவாய் ரூபா 1,283.4 பில்லியனுக்கு 34.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை வரியல்லா வருவாய் ரூபா 165.1 பில்லியனுக்கு 66.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

வருவாயினை அதிகரிக்கின்ற வழிமுறைகளுக்கு சமாந்தரமாக, சுற்றறிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய வழிமுறைகளுக்கிடையில் அவசரமற்ற மூலதனச் செலவினம் மற்றும் புதிய ஆட்சேர்ப்புகள் அத்துடன் மேலதிக நேரக் கொடுப்பனவு மீதான மீண்டெழும் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு 2022 ஏப்ரலில் 04/2022 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையினை வெளியிட்டதன் மூலம் அரசாங்கச் செலவினத்தை சீரமைத்தல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. 2022 இன் முதல் 09 மாதங்களில் அரசாங்கச் செலவினமானது 2021 இன் அதே காலப்பகுதியின் ரூபா 2,380.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 2,694.8 பில்லியனுக்கு 13.2 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தது. மீண்டெழும் செலவினமானது 2021 இன் அதே காலப் பகுதியில் ரூபா 2,087.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இன் முதல் 09 மாதங்களில் 2,300.2 பில்லியனாக 10.2 சதவீதத்தினால் அதிகரித்தது. சமூகத்தின் வறுமையான மற்றும் பாதிக்கப்படக்கூடிய வகுப்பினருக்கு நிவாரணம் வழங்குவதற்கான மேலதிய நலனோம்புகைச் செலவின வழிமுறைகளில்

அதிகரிப்பின் காரணமாக நடைமுறைச் செலவினம் இக்காலப் பகுதியில் கணிசமாக அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக, அதிகரித்த உள்நாட்டு வட்டி வீதங்களை பிரதிபலித்து வட்டிச் செலவினம் அதிகரித்த அதேவேளை, உயர்வான பணவீக்கமும் ரூபாவின் பெறுமானத் தேய்வும் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான செலவினத்தின் உயர்வுக்கு வழிவகுத்துள்ளன.

இக்காலப்பகுதியில் வருமான வளர்ச்சி செலவின வளர்ச்சியினை விஞ்சியதிலிருந்து நன்மையடைந்து அரசிறைப் பற்றாக்குறையானது 2022 இன் முதல் 09 மாதங்களில் பெயரளவு நியதிகளில் 2021 இன் அதே காலப்பகுதியின் ரூபா 1,328.2 பில்லியனிலிருந்து ரூபா 1,244.4 பில்லியனாக கட்டுப்படுத்தப்பட்டது. ஆகையினால், முதலாந்தர பற்றாக்குறையானது 2022 இன் முதல் 09 மாதங்களில் 2021 இன் அதேகாலப் பகுதியில் ரூபா 495.2 பில்லியனிலிருந்து ரூபா 317.0 பில்லியனுக்கு சுருக்கமடைந்தது. அதிகரித்த வருவாயானது 2022 இல் ரூபா 954.0 பில்லியன் கொண்ட முதலாந்தரப் பற்றாக்குறை இலக்கினை எய்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், 2022 செப்டெம்பர் இறுதியில் உள்ளவாறான ரூபா 219 பில்லியன் கொண்ட கொடுப்பனவுகளின் நிலுவைகளும் வருமானப் பாய்ச்சலின் தாமதமடைந்த கிடைப்பனவுகளும் அரசிறை இலக்கினை அடைவதன்மீது அழுத்தத்தினை நெருக்கக்கூடும்.

உலகளாவிய நிதியியல் சந்தைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடைவு காரணமாக அரசாங்கமானது பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு ஒட்டு மொத்தமாக உள்நாட்டு மூலங்களிலேயே தங்கியுள்ளது. அரசிறைப் பற்றாக்குறையினை நிரப்புவதற்கான தேறிய உள்நாட்டு நிதியிடல் 2022 இன் முதல் 09 மாதங்களில் ரூபா 1,303.5 பில்லியன் தொகையுடையதாக இருந்ததுடன் தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூபா 59.1 பில்லியன் கொண்ட மீளச்செலுத்தலாக இருந்தது.

இப்பின்னணியில், 2022 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு அரசிறை மற்றும் நாணயஞ்சார் ஒழுக்கத்தினால் துணையளிக்கப்பட்டு, ஏற்றுமதியினை நோக்காகக் கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டினால் ஆதரவளிக்கப்பட்ட உற்பத்தித் திறன் மற்றும் போட்டித் தன்மையின் ஊடான வளர்ச்சியினை அதிகரிக்கின்ற அதேவேளை சமூகத்தின் மிகவும் பாதிக்கப்பட்ட வகுப்பினரைப் பாதுகாப்பதன் மூலம் சமத்துவம் மிக்க பெறுபேறுகளை உறுதிசெய்கின்ற பேரண்டப் பொருளாதார பாதையொன்றினை வகுக்கவேண்டியது முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். இதற்கு மேலதிகமாக, நிலைபெறத்தக்க படுகடன் நிலையுடன் நியாயமான வருமான வழிக் கட்டமைப்பினுள் செலவினங்களை முகாமைசெய்வது எதிர்காலச் சந்ததியினருக்கான படுகடன் சுமையினைக் குறைக்கும். செலவின சீரமைப்புகளுடன் ஒன்றிணைந்து அரசிறை திரட்சிப்படுத்தலுக்காக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள வரிச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதனை துரிதப்படுத்துகின்ற அதேவேளை முக்கியத்துவமும் முன்னுரிமையும்மிக்க துறைகளில் பொது முதலீட்டினை உறுதிசெய்வது அவசியமாகும். மேலும், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மறுசீரமைக்கின்ற அதேவேளை அவற்றின் நிதியியல் நிலையினை வலுப்படுத்துவது பொதுத் திறைசேரி மீதான சுமையினை மேலும் குறைக்கும்.

### 1.2 நடுத்தர காலத்தில் அரசிறை மூலோபாயம்

நடுத்தர காலத்தில் அரசாங்கத்தின் அரசிறைத் தொழிற்பாடுகள், பரந்த அடிப்படையில் அமைந்த அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்குமுகமாக அரசிறைப் பற்றாக்குறைகளையும் அதனோடிணைந்த படுகடனையும் படிப்படியாக குறைப்பதற்கான சட்டரீதியான கட்டமைப்பை வழங்குகின்ற 2003 இன் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் மூலமான சட்டத்தின் கட்டமைப்புக்குள் காணப்படுகின்றன. அரசாங்கத்தின் முக்கிய நடுத்தரகால அரசிறைக் குறிக்கோள்களானவை முதன்மையாக வருவாய் அடிப்படையிலமைந்த அரசிறை திரட்சிப்படுத்தலை நோக்கி இயக்கப்படுகின்ற அதேவேளை மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களை பாதுகாக்கின்றது. வருமானத்தை அதிகரிப்பதற்கு 2022 இல் அறிமுகப்படுத்தபட்ட மறுசீரமைப்புகளுடன் 2025 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.0 சதவீதத்துக்கும் அதிகமான முதலாந்தர மிகையினை அடைந்துகொள்வதற்கு அரசாங்கம் அர்ப்பணித்துள்ளது. இவ்விலக்கினை அடைவதற்கு 2022 இன் முதலாந்தர பற்றாக்குறையானது மொ.உ.உற்பத்தியின் 4.0 சதவீதத்தல் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் 2023 இல் மொ.உ.உற்பத்தியில் 0.7 கொண்ட பற்றாக்குறையாக மேம்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய சவால் மிக்க சூழ்நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கான பாதையில் நடுத்தர காலத்தில் அரசிறை நிலைமை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டிய அதேவேளை செலவினப் பொறுப்பு சீரமைக்கப்பட்டு முகாமைசெய்யப்பட வேண்டும். வீட்டலகுகளுக்கு வழங்கப்படுகின்ற சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டமானது பயன்பெறுநர்களைத் தெரிவுசெய்வதற்கான குறிக்கோள் மற்றும் வெளிப்படைத்தன்மை மிக்க மூலப்பிரமாணத்தினை பின்பற்றுவதன் வாயிலாக சீர்செய்யப்படும், இதன் மூலம் தகுதி உள்ளவர்களுக்கு மிகவும் ஆக்கபூர்வமான ஆதரவு இயலச்செய்யப்படும். சமத்துவமும் நிலைபெறுதன்மையும் மிக்க விதத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு வழியமைக்கின்ற

அதிக பொது முதலீடினை இயலச்செய்து நடுத்தர காலத்தில் அரசிறை செலவீட்டு நெகிழ்வுத்தன்மை விரிவுபடுத்தப்படும்.

நாடு பல ஆண்டுகளாக அரசிறை இலக்குகளை அடைந்து கொள்வதில் காலந்தாழ்த்தி வருகின்றது. அரசிறைப் பொறுப்புக்கான சட்டவாக்கக் கட்டமைப்பை இது செயலிழக்கச் செய்துள்ளது. இக்கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான திட்டங்களும் அரசாங்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் அறிமுகத்துடன் பிணிக்கின்ற அரசிறை விதிகளை உருவாக்குதலும் 2023 இல் சட்டமாக்கப்படவுள்ளது.

### 1.2.1 அரசிறை மூலோபாயம்

அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயானது வெளிப்படை தன்மை மற்றும் வகைகூறலுக்கான அரசிறை ஒழுக்கநெறியினை வலுப்படுத்தும் அதேவேளை அரசிறை ஸ்திரத்தன்மையினை அடைவதை நோக்கி உத்வேகம் பெறடறுள்ளது. இந்த அர்ப்பணிப்பினை அடைவதற்கு, நிறுவன அபிவிருத்திகள் மற்றும் எரிபொருள் ,மின்சாரத்தில் செலவினை அடிபடையாக கொண்ட விலையிடல் என்பவற்றின் மூலம் ஒத்துழைப்பு வழங்கப்பட்ட அரசிறை வளர்ச்சியின் அடிப்படையிலான வருமானம் மீது அரசாங்கம் ஆரம்ப கட்டமாக முன்னுரிமை வழங்கியுள்ளது. வரையறுக்கப்பட்டதெரிவு காரணிகளை அடிப்படையாக கொண்டு மிகவும் தேவையுடையவர்களுகானநலன்புரிநிகழ்ச்சிதிட்டங்களை இலக்காக கொண்ட மிகவும் வரையறுக்கப்பட்ட சமூக பாதுகாப்பு வலை நிகழ்ச்சிதிட்டமொன்றினை இது உள்ளடக்கி இருக்கும். படுகடன் நிலைபேர் தன்மையானது, படுகடன் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சி திட்டத்துடன் உறுதிபடுத்தபட்டதாக இருக்குடென எதிர்பார்க்கப்படுகின்றது. விலை ஸ்திரத்தன்மையானது நாணய மாற்று விகிதத்தில் தளர்வு போக்கின் கீழ் மீளகட்டமைப்பு ஒதுக்குகளாக காணப்படுவதனை உறுதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி ஆற்றலானது வள்ச்சி மேம்பாட்டு மறுசீரமைப்புகளை திறந்துவிடுமெனவும் நல்லாட்சியினை அதிகரிப்பதுடன் ஊழலினால் ஏற்பட்ட பாதிப்பினை தணிப்பதற்கான நிதி ஸ்திரதன்மையினை உறுதிப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கபடுகிறது.

2023 - 2027 இற்கான அரசிறை வழிமுறை மற்றும் பேரண்டப் பொருளாதார பணிப்புரையானது கீழே விபரிக்கப்பட்டுள்ளது

**அரசிறை வழிமுறை:**

- செலவினத்தினை குறைக்கும் அதேவேளை வரி நிர்வாக வலுப்படுத்தல் உள்ளடங்களாக உறுதியான வருமானத்தினை அடிப்படையாக கொண்ட அரசிறை வளர்ச்சி திருத்தங்களின் ஊடாக நடுத்தரக் காலத்தில் அரசாங்க வரவுசெலவு திட்டத்தில் 2025 அளவில் 2 சதவீதத்தினை விஞ்சிய ஆரம்ப மிகையொன்றினை உருவாக்குதல். 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.0 சதவீத ஆரம்ப பற்றாகுறை 2023 இல் மொ.உ. உற்பத்தியில் 0.7 சதவீதமாக முன்னேற்றம் அடைவதுடன் ஆரம்ப மிகையானது 2024 இலும் அதன் பின்னரும் எதிர்பார்க்கப்படுகின்றது.
- பொருத்தமான வரிக்கொள்கை மற்றும் வரி நிர்வாக நடவடிக்கைகள் மூலம் நடுத்தர மொ.உ. உற்பத்தியில் 15 சதவீதமாக மொ.உ. உற்பத்தி விகிதத்திற்கு வருமானத்தினை அதிகரித்தல்.
- அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசிறை ஏற்பாட்டினை அதிகரிப்பதற்கு செலவின தரத்தினை மேம்படுத்துகின்ற அதேவேளை, செலவினத்தினை குறைத்தல் மற்றும் முகாமை செய்வதின் ஊடாக வட்டியல்லாத மீண்டெழும் செலவினத்தினை கொண்டிருத்தல்.
- சமூக பாதுகாப்பு வலை நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகத்தினரின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு அத்தகைய நிதி இலக்கீட்டினை அதிகரிப்பதுடன் விதி ஒதுக்கீட்டினையும் அதிகரித்தல்.
- கல்வி, சுகாதார நலன்புரி, பொதுப் போக்குவரத்து, டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் நிலையான வலு சக்தி போன்ற துறைகளில் முதலீட்டினை மையப்படுத்திய நிலையான மற்றும் சம வாய்ப்புடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு பொது முதலீட்டினை முன்னுரிமைப் படுத்தல் மற்றும் தெரிவினை உறுதிப்படுத்தல்.
- வலு சக்தி, நீர், போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து போன்ற துறைகள் உள்ளடங்களாக அரச தொழில் முயற்சிகளின் நட்டம் காரணமாக ஏற்பட்ட அரசிறை ஆபத்துகளை குறைப்பதற்கு எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான செலவினத்தினை பிரதிபளிக்கும் விலையிடல் பொறிமுறையினை தொடர்ந்து முன்னெடுப்பதுடன் மிகச்சிறந்த முகாமைத்துவ மீள்கட்டமைப்பு செயன்முறையினூடாக அரச தொழில்முயற்சிகளின் நிதி ஆற்றல், போட்டித் திறன் மற்றும் ஆளுகை என்பவற்றினை மேம்படுத்தல்.
- படுகடன் முகாமைத்துவம் மற்றும் வெளிப்படை தன்மை என்பவற்றினை மேம்படுத்துவதற்கு பொது படுகடன் முகாமைத்துவ முகவராண்மை ஒன்றினை தாபிக்கும் அதேவேளை, மொ.உ. உற்பத்தி விகிதத்திற்கு பொது படுகடனை சிறந்த மட்டத்தில் குறைத்தல் மற்றும் பேணுவதற்கு நிலையான படுகடன் முகாமைத்துவ மூலோபாயம் ஒன்றினை உருவாக்குதல்.

**பேரண்டப் பொருளாதார வழிமுறை:**

- தேவையான உட்கட்டமைப்பு திருத்தங்களின் மூலம் குறித்த காலப்பகுதியில் 5.0 - 6.0 சதவீதமாக அதிகரிக்கும் அதேவேளை, 2023 இல் பொருளாதார

மீள் எழுச்சி மற்றும் 2024 ஆம் ஆண்டளவில் 3.5 சதவீதத்திற்கு கூடிய பொருளாதார வளர்ச்சியினை அடைவதனை இயலுமாக்குதல்.

- உயர்ந்த, நிலையான மற்றும் சமத்துவமான வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்கான முட்டுக்கட்டுகளை நீக்குவதற்கு வளர்ச்சிகூடிய உட்கட்டமைப்பு சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தல்.
- தொழில் சந்தை நிலைமையினை மேம்படுத்துவதற்கு பொருத்தமான சீர்த்திருத்தங்களினூடாக வேலையின்மையினை 5.0 சதவீதத்திற்குக் கீழ் பேணுதல்.
- விலையிடல் ஸ்திரதன்மையினை ஒழுங்குபடுத்துவதற்கும் நடுத்தர காலத்தில் மிதமான உண்மை வட்டி வீதத்தினை உறுதிப்படுத்துவதற்கும் ஒற்றை இலக்க பணவீக்கத்தினை ஏற்படுத்தல்.
- சந்தை அடிப்படை வேலைச் சட்டகம் மற்றும் சர்வதேச ஒதுக்குகளை மீள்கட்டமைத்தல் மூலம் ரூபாவின் நிலையான நாணயமாற்று பெறுமதியினை ஸ்திரதன்மையில் பேணுதல்.
- நிதித்துறை மேற்பார்வையினை வலுப்படுத்துகின்ற அதேவேளை, நடுத்தர காலத்தில் மூலதனமாக்கப்பட்ட ஆரோக்கியமான வங்கி தொழில் முறைமையொன்றினை உறுதிப்படுத்துதல்.
- ஆளுகை மற்றும் ஊழலுக்கு எதிரான மறுசீரமைப்புகளை மேம்படுத்தல்.

அரசிறை மூலோபாயம் தனியார் துறையை முன்னிலையாக கொண்ட, ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட மற்றும் முதலீட்டை முன்னிலையாக கொண்ட பொருளாதார வளர்ச்சிக்கு பலமான மற்றும் நிலைபேறான ஆதரவினை வழங்குவதற்கு வடிவமைக்கப்படுகிறது. அரசிறை நிருவாகம் அதிகரித்த வரி இணக்கம் அரசிறை வெளிப்படைத் தன்மை மற்றும் ஆளுகை என்பவற்றை அதிகரித்தல். வரி கணக்காய்வுகள், உட்செலுத்தப்பட்ட தொழிநுட்பத்தின் ஊடாக செயல்முறையினை டிஜிட்டல் மயப்படுத்துதல் ஆகியவற்றின் ஊடாக வலுவூட்டப்படும். மேலும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திலுள்ள வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (Revenue Administration Management Information System – RAMIS), இலங்கை சுங்க திணைக்களத்தில் உள்ள ஒற்றை சாளர முறைமை, மதுவரித் திணைக்களத்தில் உள்ள இறைவரி நிர்வாக முறைமை, திறைசேரியிலுள்ள ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (Integrated Treasury Management Information System– ITMIS) போன்ற பல்வேறு டிஜிட்டல் தளங்கள் வலுவூட்டப்படும்.

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அனைத்தையும் குறிப்பாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றை நிதிரீதியாக சாத்தியமான முயற்சிகளாக மாற்றுவதற்கு அவற்றை மீள்கட்டமைப்புச் செய்வதற்காக ஒரு விரிவான மூலோபாயம் விருத்திசெய்யப்படும். மேலும், வகைகூறுவதனை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய நிறுவனங்களுக்கு முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டியை அறிமுகப்படுத்துகின்ற அதேவேளையில், அவற்றின் நிதிரீதியான வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கான ஒரு கட்டளையாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு நிறுவன செயல்நோக்கு கூற்று ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

ஏனையவற்றுக்கிடையில் அரசிறை விதிகள், வரவுசெலவுத் திட்டத் தயாரிப்பு அரசாங்கப் பெறுகை மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவம் உள்ளிட்ட பொது நிதி முகாமைத்துவம் வலுவூட்டப் படும். சுகாதாரம் மற்றும் கல்வி, வெளிநாட்டு நேரடி முதலீடு, பொதுத்துறை, அரசுக்குச் சொந்த மான தொழில் முயற்சிகள், காலநிலை மாற்றம், டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் சட்டமும் ஒழுங்கும் உள்ளிட்ட வர்த்தக தாராளமயமாக்கல் ஊழியச் சந்தை, மனித மூலதனம் ஆகிய பகுதிகளில் வளர்ச்சியடைந்த மேம்பட்ட கட்டமைப்பு ரீதியான, நிறுவன ரீதியான, சட்டவாக்க மற்றும் நிருவாக மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.2.2 நடுத்தரகால பேரண்ட அரசிறை வேலைச்சட்டகம்

2022 இடைக்கால வரவுசெலவுத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட நடுத்தரகால பாரிய அரசிறை வரைசட்டகம் தற்போதைய பொருளாதார அபிவிருத்திகளை உள்ளடக்குவதன் மூலம் திருத்தப்பட்டுள்ளது.

நடுத்தரகால பாரிய அரசிறை வரைசட்டகத்துக்கு இணங்கியதாக 2023-2027 இற்கான அரசாங்கத்தின் முன்னுரிமைகள் பின்வருமாறு

- 2025 ஆம் ஆண்டில் 15 சதவீதம்வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரத்திற்கான வருமானத்தை அதிகரித்தலும் அதன்பின்னர் குறைந்த பட்சம் அதற்கு மேலாகவோ அல்லது உயர்வாகவோ பேணி வருதல்.
- சுகாதாரம், கல்வி, பொதுப் போக்குவரத்து மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட முன்னுரிமைப் பகுதிகளுக்கு சரியாக செலவினம் ஒதுக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20 சதவீதத்துக்கும் குறைவாக செலவினத்தை சீரமைத்தல்.
- 2025 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்துக்கும் குறைவாக வரவுசெலவுப் பற்றாக்குறையை கொண்டிருத்தல். அத்துடன் 2027 ஆம் ஆண்டளவில் 4.7 சதவீதம் வரை அதனை மேலும் குறைத்தல்.
- 2025 ஆம் ஆண்டளவிலும் அதற்கப்பாலும் 2 சத வீதத்துக்கு மேற்பட்ட ஆரம்ப மிகை யொன்றை அடைந்து கொள்ளுதல்.
- நிலைபேறான மட்டத்தில் மொத்த உள்நாட்டு

உற்பத்தி விகிதாசாரத்துக்கு மத்திய அரசாங்கக் கடனை குறைத்தல்.

நடுத்தரகால வழியை மெய்ப்பித்தலானது பொருளாதாரத்தின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் இதுவரை புறக்கணிக்கப்பட்ட கட்டமைப்புரீதியான மறுசீரமைப்புகளின் முன்னேற்றத்தின்மீதே தங்கியுள்ளது. அரசிறைத் துறையில் உள்ள பாரிய மறுசீரமைப்புகள் ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ள அதேவேளையில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு தயார்நிலையில் உள்ளது. ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள பொருளாதார நிலைப்படுத்தல் நடவடிக்கைகள் நம்பிக்கையை மேம்படுத்துகின்ற அதேவேளையில் இருதரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து நிதியுதவியை கவருவதாக இருக்கும். படுகடன் மீள்கட்டமைப்பு செயல்முறை மற்றும் படுகடன் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல் என்பவற்றின் வெற்றிகரமான முன்னேற்றம் என்பவற்றின் மூலம் எதிர்கால அபிவிருத்திக்கு அதிக நிதியினைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அரசிறை, நாணயம், வெளிவாரியான மற்றும் நிதிரீதியான துறைகள் என்பவற்றுக்கு மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்புரீதியான சீராக்கல்களின் முன்னேற்றத்துடன் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையானது, நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலம் வரையில் உயர் வளர்ச்சிப்போக்கு ஒன்றினை அடைந்துகொள்வதற்கு வழியமைக்கின்ற அதேவேளையில, எதிர்காலத்தில் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தும்.

**அட்டவணை 1.1 நடுத்தரககால பேரண்ட அரசிறை சட்டகம் - 2022 இலிருந்து 2027 வரை**

மொ.உ.உ.சதவீதத்தில்

| குறிகாட்டி | 2021 தற்காலிக | 2022 திருத்தப்பட்ட மதிப்பீடு | 2023 மதிப்பீடு | எதிர்வுகூறல் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2024 | 2025 | 2026 | 2027 |
| **மொத்த வருமானம் மற்றும் மானியங்கள்** | **8.3** | **8.8** | **11.3** | **13.5** | **15.0** | **15.1** | **15.2** |
| மொத்த வருமானம் | 8.2 | 8.7 | 11.3 | 13.5 | 15.0 | 15.0 | 15.1 |
| வரி வருமானம் | 7.3 | 7.8 | 10.3 | 12.6 | 14.1 | 14.1 | 14.1 |
| வரியல்லா வருமானம் | 0.9 | 1.0 | 0.9 | 0.9 | 0.9 | 0.9 | 1.0 |
| **மானியங்கள்** | 0.04 | 0.04 | 0.02 | 0.04 | 0.04 | 0.04 | 0.04 |
| **மொத்த செலவீனம்** | **19.9** | **18.6** | **19.2** | **19.9** | **20.0** | **19.9** | **19.9** |
| மீண்டெழும் செலவீனம் | 15.5 | 15.2 | 15.2 | 15.3 | 15.6 | 15.4 | 15.3 |
| மூலதன செலவீனம் மற்றும் தேசிய பெறுகைகள் | 4.4 | 3.4 | 4.0 | 4.5 | 4.5 | 4.5 | 4.5 |
| பொது முதலீடுகள் | 4.5 | 4.5 | 4.0 | 4.5 | 4.5 | 4.5 | 4.5 |
| **நடைமுறைகணக்கு மீதி மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-7.3** | **-6.4** | **-4.0** | **-1.8** | **-0.6** | **-0.4** | **-0.2** |
| **ஆரம்ப மீதி மிகை(+)/ பற்றாக்குறை (-)** | **-5.7** | **-4.0** | **-0.7** | **0.8** | **2.3** | **2.3** | **2.3** |
| **வரவு செலவுதிட்ட பற்றாகுறை மிகை(+)/ பற்றாக்குறை (-)** | **-11.6** | **-9.8** | **-7.9** | **-6.3** | **-5.0** | **-4.9** | **-4.7** |

மூலம் -அரசிறை கொள்கைத் திணைக்களம்- தேசிய வரவு செலவு திட்ட திணைக்களம்

# பகுதி II

## வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2023

### 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7,8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் வெளியிடப்பட்டது

வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் நியதிகளின் கீழ் வெளியிடப்பட்டது. இது அரசிறை உபாய கூற்றுக்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு தேவைப்படுத்தப்படுவதுடன், பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது வாசிப்பு சமர்ப்பிக்கப்படும் தினத்தில் சமர்ப்பிக்கப்படும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், கொடுப்பனவு மீதி, வருமானம் மற்றும் செலவின மதிப்பீடுகளுக்கான அடிப்படை ஊகங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

இதற்கமைவாக, இவ்வறிக்கையானது அரசாங்கத்தின் வருமானம், செலவினம் மற்றும் 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் பெறுகைகள் தொடர்பான தரவுகளை உள்ளடக்கியுள்ளதுடன், இக்காலப்பகுதியின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட அரசிறை தொழிற்பாடுகளுக்குள் முழு மொத்த பொருளாதார நிலைமையினை விளங்கிக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் பிரதான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை வழங்குகிறது. மேலும் இவ்வறிக்கை பொருளாதாரம் மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளை தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட பிற ஊகங்கள் பற்றிய அடிப்படை தகவல்களை வழங்குவதுடன், இந்த ஊகங்களுடன் தொடர்பான பின்னோக்கிய இடர்வுகளும் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையில் குறிப்பிடத்தக்களவு தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடிய பிற தகவல்களையும் கொண்டுள்ளது.

# அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு

# 01

### 1.1 மேன்நோக்கு

வருமானத்தினைக் கொண்டு, மீண்டெழும் செலவினங்களில் பாதியளவே ஈடுசெய்யப்படுவதன் காரணமாக வருவாயை விட செலவினங்கள் அதிகமாக இருத்தல், விருப்பத்திற்குரியதற்ற மீண்டெழும் செலவினங்கள் மற்றும் பொதுச் செலவிடல் திறனாற்றல் மற்றும் உற்பத்தித்திறன் மீதான அக்கறைகள் ஆகியவற்றால், அரசிறைத் துறை கட்டமைப்பு பலவீனங்களால் பாதிக்கப்பட்டுள்ளமையானது, விகிதங்களின் அதிகரிப்பின் ஊடாக வருமான மற்றும் பெறுமதிசேர் வரிகளை பலப்படுத்துதல், வரி அடிப்படைகளை விரிவுபடுத்துதல், வரி இணக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் வரி நிருவாகத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வருமான அடிப்படையிலான அரசிறை ஒன்றுதிரட்டல் முறைமை ஒன்றின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

2022 ஆம் ஆண்டில் அரசாங்க வருமானத்தை அதிகரிக்க அரசாங்கம் சரியான நடவடிக்கைகளை எடுத்துள்ளமை, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வருமான செயலாற்றுகையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக 2022, ஏப்பிரல் மற்றும் ஓகத்து மாதத்தில் வெளியிடப்பட்ட செலவினச் சுற்றறிக்கைகளின் பயனாக, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த அரசாங்கச் செலவினம் மிதமாகவே அதிகரித்தது. எவ்வாறாயினும், வெளிப்புற நிதியுதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் காரணமாக பற்றாக்குறை நிதியளித்தல் சவாலாக மாறியுள்ளதனால் மத்திய வங்கியின் நிதியுதவியுடன், விலைகூடிய உள்நாட்டு மூலங்கள் மூலம் முழு நிதியுதவியும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இச்சூழலில், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நிதியுதவியைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் அதே வேளையில், உடனடி அரசிறை அழுத்தங்களைத் தணிக்க மாற்று வழியிலான நிதியுதவியை ஆராய்ந்து வருகிறது. மேலும், அரசாங்க அரசிறை செயற்பாடுகளை வலுப்படுத்த, வருவாயை மேம்படுத்துதல், செலவினங்களை ஒழுங்கமைப்பு செய்தல் மற்றும் அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் மீள்கட்டமைப்பு ஆகிய துறைகளில் முக்கிய சீர்திருத்தங்கள் குறுகிய காலத்தில் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

அரசாங்கத்தின் மொத்த வருமானம், வரி மற்றும் வரி அல்லாத வருவாயில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக 2021 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 1,050.8 பில்லியனிலிருந்து 37.9 சதவீதத்தினால் அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 1,448.5 பில்லியனினைப் பதிவுசெய்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த அரசாங்க வருமானத்தின் தேறல் வருடாந்த மதிப்பீடாகிய ரூபா 2,084 பில்லியனில் 69.5 சதவீதமாக இருந்தது.

வரி வருமானமானது, முக்கியமாக ஒரு தடவை அறவிடப்படும் மிகைக் கட்டண வரி வருவாய் காரணமாக 34.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,283.4 பில்லியனினைப் பதிவுசெய்தது. வருமான வரி வருமானத்தின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது 106.1 சதவீதம் அதிகரிப்புடன் ரூபா 431.8 பில்லியனினையும், பெறுமதி சேர் வரி 38.6 சதவீதத்தினால் ரூபா 310.5 பில்லியனினையும் மதுபானம் மற்றும் சிகரெட்டுகள் மீதான மதுவரித் தீர்வை வரி 32.4 சதவீதத்தினால் ரூபா 207.2 பில்லியனினையும், மற்றும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு 18.7 சதவீதத்தினால் ரூபா 135.4 பில்லியனினையும் பதிவுசெய்து அரசாங்க மொத்த வருவாயை அதிகரிக்க உதவியது. இதேபோல், வரி அல்லாத வருமானம், விற்பனை மற்றும் கட்டணங்களின் அதிகரிப்பு மற்றும் மத்திய வங்கியின் இலாப பரிமாற்றங்களின் அதிகரிப்பு ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் 66.8 சதவீதத்தினால் அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 165.1 பில்லியனினை அடையப்பெற்றது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரிகள் மூலம் கிடைக்கும் வருமானம் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 290.5 பில்லியனிலிருந்து 38.1 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 401.0 பில்லியனாக இருந்தது. உள்நாட்டு செயற்பாடுகளுக்கான பெறுமதி சேர் வரி 44.7 சதவீதத்தினால் ரூபா 193.8 பில்லியனாக அதிகரித்தமை இதற்குக் காரணமாகும். அதேசமயம், மதுபானங்கள் மீதான வரி வருவாயானது, 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட மதுபானங்கள் மீதான மதுவரி விகிதங்களின் அதிகரிப்பு மற்றும் 2022 சனவரி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் முகாமைத்துவ முறையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதனைப் பிரதிபலிக்கும் வகையில், ரூபா 124.6 பில்லியன் வரை 32.2 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021, நவம்பரில் சிகரெட் மீதான உற்பத்தி வரி திருத்தப்பட்டதன் காரணமாக சிகரெட் மூலம் கிடைத்த வருமானம் 2022, முதல் ஒன்பது மாதங்களில் 82.6 பில்லியனாக 32.6 சதவீதம் அதிகரித்தது.

இறக்குமதி அடிப்படையிலான வரிகளின் வருவாய் 2021 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 411.9 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 425.6 பில்லியனினைப் பதிவுசெய்து 3.3 சதவீதத்தினால் மிதமான அதிகரிப்பினைப் பெற்றிருந்தது. இதில், இறக்குமதி அடிப்படையிலான பெறுமதி சேர் வரி 29.5 சதவீதத்தினால் ரூபா 116.7 பில்லியனாகவும், துறைமுகங்கள் மற்றும் விமாநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு 18.7 சதவீதத்தினால் ரூபா 135.4 பில்லியனாகவும் அதிகரித்துள்ள அதேவேளை, அந்நிய செலாவணி

நெருக்கடியின் விளைவாக அரசாங்கம் விதித்திருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக சுங்க இறக்குமதி தீர்வை மற்றும் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு ஆகியவற்றின் மூலமான வருவாய் 29.4 சதவீதம் குறைந்து, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 36.6 பில்லியனினைக் கொண்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் மீதான விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டு விகிதங்களின் குறைப்பு காரணமாக. விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டின் வருமான சேகரிப்பும் 2022 ஆம் ஆண்டின் இதேகாலப் பகுதியில் 30.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூபா 29.2 பில்லியனாகக் காணப்பட்டது. பண்ட ஏற்றுமதி மானியத் திட்ட அறவீட்டின் (செஸ்) மூலம் வசூலிக்கப்பட்ட வருவாயும் 2022 முதல் ஒன்பது மாதங்களில் 6.5 சதவீதம் குறைந்து ரூபா 52.8 பில்லியனினைப் பதிவுசெய்தது.

வரி அல்லாத வருமானம் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 66.8 சதவீதத்தினால் ரூபா 165.1 பில்லியன் வரை அதிகரித்தது. விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் 214.6 சதவிகிதம், மத்திய வங்கியின் இலாப பரிமாற்றங்கள் 99.9 சதவிகிதம், வாடகை வருமானம் 38.6 சதவிகிதம் மற்றும் அரசுடைமை நிறுவனங்களின் பங்கிலாபங்கள் 17.0 சதவிகிதம் அதிகரித்தமை இதற்குக் காரணமாகும்.

ஏனைய வரிக் கொள்கை சீர்திருத்தங்களுடன், வரி ஏய்ப்பைத் தணிக்கும் அதே வேளையில், வரி இணக்கத்தை அதிகரிக்கும்பொருட்டு வரி நிருவாகத்தை வலுப்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் விளைவாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான முகாமைத்துவ தகவல் முறைமை (சுயுஆஐளு)இ இலங்கை சுங்கத்தில் ”ஒற்றை சாளர” முறைமை மற்றும் பொதுத் திறைசேரியில் உள்ள ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ஐவுஆஐளு) ஆகியவை அரசாங்க வளங்களின் திறமையான நிருவாகத்தை உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிதி ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்கான அரசிறை மூலோபாயம் பொது நிதி மீதான அழுத்தத்தை குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், 36 அரசுடைமைத் தொழில்முயற்சிகள் பங்கிலாபங்களையும் அறவீடுகளையும் செலுத்துவதன் மூலம் வரி அல்லாத வருவாயில் ரூபா 17.8 பில்லியனினைப் பங்களித்த அதேசமயம், 31 அரசுடைமைத் தொழில்முயற்சிகள் 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 134.9 பில்லியனினை வரிக்கு முந்தைய இலாபமாகப் பதிவுசெய்தன.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்க செலவினம் 13.2 சதவீதத்தினால் ரூபா 2,694.8 பில்லியனாக அதிகரித்தது. 2021 ஆம் ஆண்டின் இதேகாலப்பகுதியின் ரூபா 2,380.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 13.2 சதவீத மிதமானதொரு அதிகரிப்பாகும். இதே காலப்பகுதியில் மீண்டெழும் செலவினம் 10.2 சதவீத அதிகரிப்புடன் ரூபா 2,300.2 பில்லியனினைப் பதிவுசெய்தது. வட்டிக் கொடுப்பனவுகள் 11.3 சதவீதத்தினால் ரூபா 927.4 பில்லியனாகவும் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் 12.5 சதவீதத்தினால் ரூபா 714.3 பில்லியனாக அதிகரித்தமை இவ் அதிகரிப்பிற்குப் பங்களித்துள்ளன. மூலதன மற்றும் தேறிய கடன் வழங்கலானது, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 34.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 394.6 பில்லியனினைப் பதிவுசெய்தது. இதே காலப் பகுதியில் பொது முதலீடு ரூபா 417.5 பில்லியனாக 36.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு, பெருஞ்சாலைகள், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் போக்குவரத்துத் துறைகளின் செலவின அதிகரிப்பு வழிவகுத்துள்ளது.

நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2021 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியின் ரூபா 1,036.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், ரூபா 851.7 பில்லியனுக்கு முன்னேற்றமடைந்துள்ளது. ஒட்டுமொத்த வரவுசெலவு திட்டப் பற்றாக்குறையானது, 2021 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 1,328.2 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் ரூபா 1,244.4 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்ப மீதி 2022 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதாசாரத்தில் 4.0 சதவீதப் பற்றாக்குறையைப் பராமரிக்கத் திட்டமிடப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் இது ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதாசாரத்தில் 5.7 சதவீதப் பற்றாக்குறையாகும்.

**அட்டவணை 1.1: அரசிறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம்**

ரூபா. மில்லியன்

| விபரம் | சனவரி - செப்தெம்பர் | |
|---|---|---|
| | 2021 | 2022 (அ) |
| **வருமானமும் கொடைகளும்** | 1,052,175 | 1,450,381 |
| **வருமானம்** | 1,050,758 | 1,448,482 |
| வரி | 951,751 | 1,283,368 |
| வரி அல்லாத | 99,007 | 165,114 |
| மானியம் | 1,417 | 1,899 |
| **செலவினம்** | 2,380,412 | 2,694,788 |
| **நடைமுறை** | 2,087,309 | 2,300,171 |
| சம்பளங்கள் | 634,746 | 714,280 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 832,992 | 927,366 |
| பிற | 619,572 | 658,525 |
| அரசாங்க முதவீடுகள் | 305,171 | 417,527 |
| பிற | -12,069 | -22,910 |
| **வருமான பற்றாக்குறை(-)/மிகை** (+) | -1,036,552 | -851,689 |
| **மொத்த வரவுசெலவுதிட்ட பற்றாக்குறை** (-)/ **மிகை** (+) | -1,328,237 | -1,244,407 |
| **நிதியளிப்பு** | 1,328,237 | 1,244,407 |
| வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய) | -124,745 | -59,125 |
| உள்நாட்டு நிதியளிப்பு (தேறிய) | 1,452,981 | 1,303,531 |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

**அட்டவணை 1.2: மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2022**

ரூபா.பில்லியன்

| விபரம் | வருடாந்த மதிப்பிடப்பட்ட | சன - செப் உண்மையான[அ] | விலகல் |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **2,084.0** | **1,448.5** | **-635.5** |
| **வரி வருமானம்** | **1,852.0** | **1,283.4** | **-568.6** |
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | | |
| வருமானம் மற்றும் இலாபம் மீதான வரி | 558.0 | 431.8 | -126.2 |
| பெறுமதி சேர் வரி - உள்நாட்டு (தேறிய) | 317.0 | 193.8 | -123.2 |
| ஏனைய | 40.0 | 7.6 | -32.4 |
| **உப மொத்தம்** | **915.0** | **633.2** | **-281.8** |
| **சுங்கத் திணைக்களம்** | | | |
| இறக்குமதி தீர்வை | 42.0 | 36.6 | -5.4 |
| பெறுமதி சேர் வரி - இறக்குமதிகள் (தேறிய) | 216.0 | 116.7 | -99.3 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 177.0 | 135.4 | -41.6 |
| செஸ் அறவீடு | 68.0 | 52.8 | -15.3 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு மற்றும் பிற | 35.1 | 29.4 | -5.7 |
| உற்பத்தி விசேட ஏற்பாடுகள் | 189.0 | 137.5 | -51.5 |
| சிகரெட்டுகள் | 110.0 | 82.6 | -27.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 55.0 | 36.7 | -18.4 |
| மோட்டார் வாகன வரிகள் மற்றும் ஏனையவை | 24 .0 | 18.2 | -5.8 |
| **உப மொத்தம்** | **727.1** | **508.4** | **-218.8** |
| **மதுவரித் திணைக்களம்** | | | |
| மதுபானம் / புகையிலை | 185.0 | 124.6 | -60.4 |
| **உப மொத்தம்** | **185.0** | **124.6** | **-60.4** |
| **ஏனையவை** | | | |
| தொலைதொடர்பு அறவீடு | 16.0 | 10.7 | -5.3 |
| உரிமப் பத்திர வரி மற்றும் பிற | 8.8 | 6.5 | -2.3 |
| உப மொத்தம் | **24.8** | **17.2** | **-7.6** |
| **வரி அல்லாத வருமானம்** | **232.0** | **165.1** | **-66.9** |
| **மொத்த செலவினம்** | **4,427.4** | **2,694.8** | **-1,732.6** |
| **நடைமுறைச் செலவினம்** | **3,620.0** | **2,300.2** | **-1,319.8** |
| சம்பளங்களும் படிகளும் | 994.5 | 714.3 | -280.2 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 1,379.4 | 927.4 | -452.0 |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | 318.0 | 228.6 | -89.4 |
| அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்கள் | 121.3 | 71.9 | -49.4 |
| ஏனையவை | 806.9 | 358.0 | -448.9 |
| **மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **807.4** | **394.6** | **-412.8** |

மூலங்கள் : திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

## 1.2 அரசாங்க வருமானம்

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 1,050.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது 37.9 சதவீதம் அதிகரித்து ரூபா 1,448.5 பில்லியனினைப் பதிவு செய்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வருமானத் திரட்டலின் தேறல் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 69.5 சதவிகிதம் ஆகும்.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரி வருமானம் 34.8 சதவீதம் அதிகரித்து ரூபா 1,283.4 பில்லியனாக இருந்தமை வருமான அதிகரிப்பிற்குப் பங்களித்துள்ளது. இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 951.8 பில்லியன்களாகும். வரி வருமான சேகரிப்பு மொத்த வருவாயில் 88.6 சதவிகிதம் பங்களித்த அதே நேரத்தில், 2022 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டில் இது 69.3 சதவிகிதம் ஆகும்.

**வரைபு 1.1 : மொத்த வருமானத்தின் வகுதிகள் (ஜனவரி - ஆகஸ்ட் 2022)**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

வருமான வரி வருவாய், 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 209.5 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 106.1 சதவீதம் அதிகரித்து ரூபா 431.8 பில்லியனினைப் பதிவுசெய்தது. தற்காலிக நடவடிக்கையாக வருவாயை உயர்த்துவதற்காக ஒரே தடைவை விதிக்கப்படும், 2020.̇.21 மதிப்பீட்டாண்டிற்காக ரூபா 2,000 மில்லியனுக்கு மேற்பட்ட வரிவிதிக்கத்தக்க வருமானத்தைக் கொண்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு 25 சதவிகிதம் என்ற விகிதத்தில் அறவிடப்பட்ட மிகைக் கட்டண அறவீட்டின் மூலம், குறிப்பிடத்தக்க வகையில் ரூபா 120.7 பில்லியன் வருமானம் அறவிடப்பட்டுள்ளது.

**வரைபு 1.2 : வருமான மூலங்கள் அடிப்படையில் மொத்த வருமானம் (சனவரி - செப்தெம்பர் 2022)**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**அட்டவணை 1.3: அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

ரூபா.மில்லியன்

| விபரம் | சன - செப் | | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | 2021 | 2022(அ) | |
| **வரி வருமானம்** | 951,751 | 1,283,368 | 34.8 |
| **வருமான வரி** | 209,485 | 431,795 | 106.1 |
| **உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி** | 290,476 | 401,018 | 38.1 |
| அதில் பெறுமதிசேர் வரி | 133,956 | 193,829 | 44.7 |
| உற்பத்தி வரி | 156,520 | 207,189 | 32.4 |
| **இறக்குமதி அடிப்படையிலான வரி** | 411,933 | 425,604 | 3.3 |
| அதில் சுங்கத் தீர்வை | 51,812 | 36,587 | -29.4 |
| பெறுமதிசேர் வரி | 90,102 | 116,686 | 29.5 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 114,135 | 135,434 | 18.7 |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 42,084 | 29,232 | -30.5 |
| மதுவரி | 57,405 | 54,914 | -4.3 |
| செஸ் | 56,395 | 52,751 | -6.5 |
| **உரிமப் பத்திர வரிகள் மற்றும் பிற** | 39,856 | 24,604 | -37.4 |
| **வரி அல்லாத வருமானம்** | 99,007 | 165,114 | 66.8 |
| **மொத்த வருமானம்** | 1,050,758 | 1,448,482 | 37.9 |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

மேலும், தனிநபர் மற்றும் நிறுவன வரிகள் மூலம் சேகரிக்கப்படும் வருமானம் முறையே 16.4 சதவீதம் மற்றும் 46.1 சதவீதம் அதிகரித்துள்ளது. அத்துடன், பெறுமதி சேர் வரி, மதுபானம் மீதான மதுவரி, சிகரெட் மீதான உற்பத்தி வரி மற்றும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு ஆகியவை முறையே 38.6 சதவீதம், 32.2 சதவீதம், 32.6 சதவீதம் மற்றும் 18.7 சதவீதம் என்றவாறு அதிகரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரி அல்லாத வருமானம், 2021 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியின் ரூபா 99.0 பில்லியனிலிருந்து ரூபா 165.1 பில்லியனாக 66.8 சதவீதம் அதிகரித்தது. இது மொத்த வருவாயில் 11.4 சதவீத பங்களிப்பாகும். இது 2022 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டில் இருந்து 71.2 சதவீதத்தை எட்டியுள்ளது.

விற்பனை மற்றும் கட்டணங்கள் மூலம் வருவாய் 214.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 56.8 பில்லியனாகவும், அதே சமயம் மத்திய வங்கி பரிமாற்றங்கள் ரூபா 30.0 பில்லியனாகவும் அதிகரித்தது. ஏனைய வரி அல்லாத மூலங்களில் இருந்து: வாடகை 38.6 சதவீதத்தால் ரூபா 4.7 பில்லியன், இலாபம் மற்றும் பங்கிலாபங்கள் 17.0 சதவீதத்தால் ரூபா 18.9 பில்லியன், சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள் 9.6 சதவீதத்தால் ரூபா 27.7 பில்லியன், வட்டி 7.6 சதவீதத்தால் ரூபா 4.6 பில்லியன், மற்றும் பிற வரி அல்லாத வருவாய் 33.0 சதவீதத்தால ரூபா 22.4 பில்லியனாகவும் அதிகரித்தது.

### வருமான வரி

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வருமான வரி வருமானமானது, முக்கியமாக மிகைக்கட்டண வரி மற்றும் நிறுவனம் மற்றும் நிறுவனம் அல்லாத வரி வருவாய் மூலம் அதிகரித்த வருவாயுடன் ரூபா 431.8 பில்லியனினைப் பதிவுசெய்தது. 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 209.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது இது 106.1 சதவீத அதிகரிப்பாகும். நிறுவனம் மற்றும் நிறுவனம் அல்லாத வரிகளின் வருவாய் 43.8 சதவீதம் கணிசமாக அதிகரித்து, 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 190.1 பில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 273.4 பில்லியன் வரை அதிகரித்தது. இதற்கிடையில், ஏப்பிரல் மற்றும் யூலை மாதங்களில் பெறப்பட்ட இரண்டு தவணைகளுடன் ஒரே தடவை அறவிடப்படும் மேலதிகக் கட்டண வரி வருமானம் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 120.7 பில்லியன்களைப் பதிவுசெய்தது. மூலதன ஈட்டுகை வரி வருமானம் 186.9 சதவீதம் அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 1.3 பில்லியனினை அடையப்பெற்றது. 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் மூலதன ஈட்டுகை வரி வருமானமாக ரூபா 461 மில்லியன் பதிவு செய்யப்பட்டது. அதேபோன்று, முற்பண தனியாள் வருமான வரி ∴ உழைக்கும்போது செலுத்தும் வரி மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் 70.2 சதவீதம் அதிகரித்து ரூபா 17.9 பில்லியனினையும் மற்றும் வட்டி மீதான வரி 85.8 சதவீதத்தால் அதிகரித்து, 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் 14.3 பில்லியனினைப் பதிவுசெய்தது. மேலும் தன்னார்வ வெளிப்படுத்துகை வரி மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4.0 பில்லியன் ஆகும்.

### பெறுமதி சேர் வரி

பெறுமதி சேர் வரி மூலம் ஈட்டப்பெற்ற அரசாங்க வருமானம் 38.6 சதவீதம் அதிகரித்து 2022 முதல் ஒன்பது மாதங்களில் 310.5 பில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை, இத் தொகையானது 2022 ஆம் ஆண்டிற்கான பெறுமதி சேர் வரி வருவாயின் மதிப்பீட்டில் 58.3 சதவிகிதம் ஆகும். 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் இவ் வருமானம் ரூபா 224.1 பில்லியனாகும். 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உள்நாட்டு செயற்பாடுகள் மற்றும் இறக்குமதிகள் ஆகிய இரண்டினதும் பெறுமதி சேர் வரி வருமானம் அதிகரித்துள்ளது. உள்நாட்டு செயற்பாடுகளுக்கான பெறுமதி சேர் வரி வருமானம் ரூபா 134.0 பில்லியனிலிருந்து 44.7 சதவீதம் அதிகரித்து

**அட்டவணை 1.4: பெறுமதிசேர் வரியின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | சன - செப் 2021 | சன - செப் 2022(அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| உள்நாட்டு | 133,697 | 193,893 | 45.0 |
| இறக்கமதிகள் | 90,384 | 116,943 | 29.4 |
| **மொத்த வருமானம்** | 224,082 | 310,836 | 38.7 |
| மீளளிப்புக்கள் | 24 | 320 | 1,233.3 |
| **தேறிய வருமானம்** | 224,058 | 310,516 | 38.6 |
| மொத்த வருமானத்தில் மீளளிப்பு % | 0.01 | 0.10 | - |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

ரூபா 193.8 பில்லியனினையும் இறக்குமதிகளிலிருந்து பெறப்பட்ட பெறுமதி சேர் வரி வருமானம் ரூபா 90.1 பில்லியனிலிருந்து 29.5 சதவீதம் அதிகரித்து ரூபா 116.7 பில்லியனினையும் ஈட்டியுள்ளது. பெறுமதி சேர் வரி வருவாயின் அதிகரிப்பு, விகித அதிகரிப்பு மற்றும் பணவீக்கத்தின் கூர்மையான அதிகரிப்பு ஆகியவற்றால் ஏற்படும் பல விளைவுகளின் தாக்கத்தினால் ஏற்பட்டதாகும். அதாவது, 2022 யூன் 01, முதல் பெறுமதி சேர் வரி விகிதம் 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக அதிகரிக்கப்பட்டு, மீண்டும் 2022 செத்தெம்பர் 01, முதல் 12 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதம் வரையும் அதிகரிக்கப்பட்டது. 2022 சனவரி முதல் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி விகிதம் 15 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதம் வரை அதிகரிக்கப்பட்டது.

**உற்பத்தித் தீர்வை**

உற்பத்தித் தீர்வை மூலம் உருவாக்கப்பெற்ற மொத்த வருமானம் 2021 நவம்பரில் அந்தந்த வரி விகிதங்கள் திருத்தப்பட்டதன் காரணமாக வரி நிருவாகத்தில் ஏற்பட்ட மேம்பாடுகளுடன முக்கியமாக மதுபானம் மற்றும் சிகரெட்டுகளின் வருமானம் அதிகரித்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 213.9 பில்லியனிலிருந்து 22.5 சதவீதம் அதிகரித்து 2022 முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 262.1 பில்லியனாகக் காணப்பட்டது. இது வருடாந்த மதிப்பீட்டில் இருந்து 70.1 சதவீதமாக இருந்தது 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த வரி வருவாயில் உற்பத்தி வரிகளின் வருமானம் 20.4 சதவீதமாக இருந்தது.

மதுபானங்கள் மீதான மதுவரி வருமானம் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 124.6 பில்லியனாக இருந்தது. இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 94.2 பில்லியனினை விட 32.2 சதவீத அதிகரிப்பாகும். 2022, சனவரி 03, முதல் மதுபானம் மற்றும் மதுபானம் சார்ந்த பொருட்களுக்கான பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் 2021 நவம்பர் 12, அன்று மதுபானத்தின் மீதான மதுவரியை உயர்த்தியமை இதற்கு முக்கிய காரணங்களாகும். 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் மதுபானம் மீதான வரி வருமானத்தின் தேறல் 67.3 சதவீதமாக இருந்தது.

மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி வருமானம் 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 13.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 3.4 சதவீதம் அதிகரித்து, 2022 முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 13.7 பில்லியனினைப் பதிவுசெய்தது. 2021, நவம்பர் 12 ஆம் திகதி அன்று சிகரெட் மீதான உற்பத்தி வரியை உயர்த்தியதன் காரணமாக, சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரியின் மூலம் கிடைத்த வருமானம் 32.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 82.6 பில்லியனினைக் கொண்டிருந்த அதேநேரம் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 62.3 பில்லியனினைப் பதிவு செய்திருந்தது. மறுபுறம், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சிகரெட் விற்பனை 30.1 சதவிகிதம் அதிகரித்து 2,204 மில்லியன் குச்சிகளாக இருந்தது, 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 1,694 மில்லியன் குச்சிகள் விற்பனை செய்யப்பட்டன.

**அட்டவணை 1.5: உற்பத்தி வரியின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | சன - செப் 2021 | சன - செப் 2022^(அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| மதுபானம் | 94,219 | 124,558 | 32.2 |
| சிகரெட் | 62,301 | 82,630 | 32.6 |
| மோட்டார் வாகனங்கள் | 13,225 | 13,672 | 3.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 39,616 | 36,665 | -7.5 |
| ஏனையவை | 4,564 | 4,577 | 0.3 |
| **மொத்தம்** | 213,925 | 262,103 | 22.5 |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

**வரைபு 1.3 : உற்பத்தி வரியின் செயலாற்றுகை (சனவரி - செப்தெம்பர் 2022)**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

இருப்பினும், பெற்றோலிய பொருட்கள் மீதான உற்பத்தி வரி, 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 39.6 பில்லியனாக இருந்து, முக்கியமாக எரிபொருள் இறக்குமதி குறைப்பு காரணமாக 7.5 சதவீதம் குறைந்து 2022 முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 36.7 பில்லியனாக இருந்தது. மேலும், இனிப்புப் பானங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள் போன்ற பிற பொருட்களின் மீதான உற்பத்தி வரி வருமானம் 0.3 சதவீதம் அதிகரித்து 2022 முதல் ஒன்பது மாதங்களில் 4.6 பில்லியனினைப் பதிவுசெய்தது.

### சுங்க இறக்குமதித் தீர்வை

சுங்க இறக்குமதித் தீர்வையிலிருந்தான வருமானம் 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 51.8 பில்லியனிலிருந்து 29.4 சதவீதம் குறைவடைந்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 36.6 பில்லியனாக இருந்தது. மீளாய்வுக் காலப்பகுதியில் இறக்குமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் திணித்தல், அத்தியாவசியமற்ற பொருட்களுக்கு உரிமம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் மீதான சுங்க இறக்குமதித் தீர்வை விகிதங்களின் அதிகரிப்பு மற்றும் அந்நியச் செலாவணி வெளியேற்றத்தை நிருவகிப்பதற்கான மேலதிகக் கட்டணத்தை விதித்ததன் நேர்மறையான விளைவுகள் இந்த வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாகவுள்ளது.

**அட்டவணை 1.6: மோட்டார் வாகன இறக்குமதி மற்றும் புதிய வாகனப் பதிவு**

| விபரம் | இறக்குமதிகள் சன - ஆகஸ் | | | | புதிய பதிவுகள் (அ) சன - ஆகஸ் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2022 | மாற்றம் | % | 2021 | 2022 | மாற்றம் | % |
| மோட்டார் கார்கள் | 1,916 | 123 | -1,793 | -94 | 2,626 | 964 | -1,662 | -63 |
| சிற்றூர்தி பேருந்துகள் | 48 | 37 | -11 | -23 | 232 | 253 | 21 | 9 |
| முச்சக்கர வண்டிகள் | 2,003 | 223 | -1,780 | -89 | 2,076 | 19 | -2,057 | -99 |
| மோட்டார் சைக்கிள்கள் | 1,335 | 10,017 | 8,682 | 650 | 5,662 | 6,209 | 547 | 10 |
| பொருட்கள் போக்குவரத்து வாகன-ங்கள் (ஆ) | 1,880 | 288 | -1,592 | -85 | 2,759 | 1,537 | -1,222 | -44 |
| நில வாகனங்கள் (இ) | 9,131 | 3,398 | -5,733 | -63 | 8,846 | 5,406 | -3,440 | -39 |
| ஏனையவை (ஈ) | 7 | - | -7 | -100 | 578 | 621 | 43 | 7 |
| **மொத்தம்** | **16,320** | **14,086** | **-2,234** | **-14** | **22,779** | **15,009** | **-7,770** | **-34** |

மூலம் : இலங்கைச் சுங்கம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது
(ஆ) லொறிகள், ஏனைய பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் விசேட நோக்க வாகனங்கள்
(இ) ட்ராக்டர் மற்றும் கை ட்ராக்டர்கள் உள்ளடங்கலாக
(ஈ) இருநோக்க வாகனங்கள், குவாட்ரிசைக்கிள் மற்றும் மோட்டார் வீடுகள் உள்ளடங்கலாக

## விசேட வியாபாரப் பண்ட அறவீடு

விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வருமானம் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 29.2 பில்லியனாகக் காணப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 42.1 பில்லியன் ஒப்பிடும்போது 30.5 சதவீதம் குறைந்துள்ளது. இதற்கு, முக்கியமாக இறக்குமதிகளின் வீழ்ச்சி மற்றும் அப்பிள், திராட்சை மற்றும் தோடம்பழம் போன்ற பொருட்களின் மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு விகிதங்களின் கூர்மையான அதிகரிப்பு பங்களித்துள்ளது.

**அட்டவணை 1.7: சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி/ இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி**

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | சன - செப் 2022 | | |
|---|---|---|---|
| | தீர்வை சலுகை வழங்கப்படும் பொருட்களின் எண்ணிக்கை | இறக்குமதி பெறுமதி (CIF / ரூபா. மில்லியன்) | ஏற்றுமதி பெறுமதி (FOB/ ரூ. மில்லியன்) |
| இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 5,152 | 28,358 | 140,451 |
| பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) | 6,008 | 2,943 | 13,181 |
| தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA) | 5,739 | 1,266 | 19,015 |
| ஆசியா - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) | 785 | 2,724 | 56,515 |
| **மொத்தம்** | 17,684 | 32,291 | 229,162 |

மூலம் : வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

## துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டிலிருந்து மொத்த வருமானம் 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 114.1 பில்லியனிலிருந்து 18.7 சதவீதம் அதிகரித்து ரூபா 135.4 பில்லியனாக இருந்தது. இதற்கு பெற்றோலியப் பொருட்கள், சீமெந்து கிளிங்கர், இரும்புருக்கு, மூலப்பொருட்கள் மற்றும் பிற நுகர்பொருட்கள் ஆகியவற்றின் சர்வதேச விலைகளின் அதிகரிப்பு மற்றும் ரூபாயின் பெறுமதி சரிவு ஆகியவை முக்கிய காரணமாக அமைந்தன.

## தொலைதொடர்பு அறவீடு

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தொலைத்தொடர்பு அறவீட்டிலிருந்து திரட்டப்பட்ட வருமானம், உள்ளூர் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் அழைப்புக்கள் ஆகிய இரண்டினதும் கால அளவு அதிகரித்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 9.6 பில்லியனிலிருந்து 11.1 சதவீதம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து ரூபா 10.7 பில்லியனினைப் பதிவுசெய்தது.

## செஸ் அறவீடு

செஸ் அறவீட்டிலிருந்து சேகரித்த வருமானம் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 52.8 பில்லியன் ஆகும். இதனை 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 56.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 6.5 சதவீத மிதமான வீழ்ச்சியாகும். 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் இறக்குமதிகள் தொடர்பான செஸ் அறவீட்டு வருமானம் 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 54.5 பில்லியனிலிருந்து 6.4 சதவீதம் குறைந்து ரூபா 51 பில்லியனினைப் பதிவுசெய்தது. ஏற்றுமதியில் செஸ் அறவீடு மூலம் ஈட்டப்பட்ட வருமானம் 2022 முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 1.7 பில்லியன் ஆகும். இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 1.9 பில்லியனினை விட 8.3 சதவீதம் குறைந்துள்ளது.

**அட்டவணை 1.8: சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம்**

ரூபா.மில்லியன்

| விபரம் | சன - செப் 2021 | சன - செப் 2022 |
|---|---|---|
| **ஏற்றுமதிகள் மீதான செஸ்** | 1,874 | 1,719 |
| தேயிலை - தேயிலை (ஏற்றுமதி வரி மற்றும் கட்டுப்பாடு) சட்டம், இலங்கை தேயிலை சபை சட்டத்தின் கீழ் | 369 | 352 |
| இறப்பர் - இறப்பர் மீள்நடுகை மானிய சட்டத்தின் கீழ் | 7 | 8 |
| தேங்காய் - தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 138 | 145 |
| ஏற்றுமதி அபிவிருத்தி சபை செஸ் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம் | 1,360 | 1,213 |
| **இறக்குமதிகள் மீதான செஸ்** - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 54,521 | 51,032 |
| **மொத்தம்** | **56,395** | **52,751** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

**அட்டவணை 1.9: தேச கட்டுமான வரி, முத்திரை வரி மற்றும் மோட்டார் வாகன பதிவுக் கட்டணம் ஆகியவற்றின் செயலா-ற்றுகை**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2021 | | | 2022 | | | % மாற்றம் 2020/2021 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன - ஆகஸ் | | | சன - ஆகஸ் | | | சன - ஆகஸ் | | |
| | ம.அ. | மா.ச. | மொத்தம் | ம.அ. | மா.ச. | மொத்தம் | மா.ச. | PCs | மொத்தம் |
| முத்திரை வரி* | - | 9,389.9 | 9,389.9 | - | 7,284.5 | 7,284.5 | - | -22.4 | -22.4 |
| மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்கள்** | 371.9 | 867.8 | 1,239.7 | 168.8 | 393.8 | 562.6 | -54.6 | -54.6 | -54.6 |
| **மொத்தம்** | 371.9 | 10,257.7 | 10,629.6 | 168.8 | 7,678.3 | 7,847.1 | -54.6 | -25.1 | -26.2 |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

*2011 ஆம் ஆண்டில் இருந்து மத்திய அரசாங்கத்தினால் முத்திரை வரியில் இருந்து திரட்டப்பட்ட வருமானத்தில் 100 சதவீதம் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது.

** மோட்டார் வாகன பதிவுக் கட்டணங்கள் மூலம் மத்திய அரசாங்கத்தினால் திரட்டப்பட்ட வருமானத்தில் 70 சதவீதம் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது.

குறிப்பு : ம.அ = மத்திய அரசாங்கம், மா.ச = மாகாண சபைகள்

### வரி அல்லாத வருமானம்

2021 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடும்போது வரி அல்லாத வருமானத்தின் அனைத்துத் துணைப்பிரிவுகளும் 2022 முதல் ஒன்பது மாதங்களில் அதிகரித்துள்ளன. முக்கியமாக விற்பனை மற்றும் கட்டணங்கள் மற்றும் மத்திய வங்கியின் இலாப பரிமாற்றங்களின் அதிகரிப்பு காரணமாக பெயரளவு நியதியிலான வரி அல்லாத வருமானம், 2021 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 99.0 பில்லியனிலிருந்து 2022 முதல் ஒன்பது மாதங்களில் 66.8 சதவீதம் கணிசமாக அதிகரித்து ரூபா 165.1 பில்லியனாகக் காணப்பட்டது. மொத்த வருமானத்தில் வரி அல்லாத வருவாயின் பங்கு 2022 முதல் ஒன்பது மாதங்களில் 11.4 சதவீதமாக அதிகரித்தது. இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 9.4 சதவீதமாக இருந்தது.

அதன்படி, மொத்த வரி அல்லாத வருவாயில் 34.4 சதவீத பங்களிப்பை அளித்து, விற்பனை மற்றும் கட்டணங்கள், முக்கியமாக தபால், இரயில்வே மற்றும் மோட்டார் போக்குவரத்துத் துறைகளின் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் திருத்தப்பட்டதன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 18.1 பில்லியனிலிருந்து 214.6 சதவீதம் கணிசமாக அதிகரித்துள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 56.8 பில்லியனினைக் கொண்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மத்திய வங்கியின் இலாபப் பரிமாற்றங்களும் விநியோகிக்கத்தக்க இலாபங்களின் பதிவு காரணமாக 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 15.0 பில்லியனிலிருந்து ரூபா 30.0 பில்லியன் வரை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தது. வாடகை வருமானம் பொது வளங்களின் திறமையான நிருவகிப்பின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 3.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 38.6 சதவீதம் அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 4.7 பில்லியனினைப் பதிவுசெய்தது. அரசுடைமை நிறுவனங்களின் இலாபங்களும் பங்கிலாபங்களும் 17.0 சதவீதம் அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 18.9 பில்லியனாக இருந்தது, இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 16.2 பில்லியன் ஆகும். 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை, வட்டி வருமானம் போன்ற வரி அல்லாத வருமானம் மற்றும் பிற வரி அல்லாத வருமானம் ஆகியவை முறையே 9.6 சதவீதம் அதிகரித்து ரூபா 27.7 பில்லியனாகவும் 7.6 சதவீதம் அதிகரித்து ரூா 4.6 பில்லியனாகவும் 33.0 சதவீதம் அதிகரித்து ரூபா 22.4 பில்லியனாகவும் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரி அல்லாத வருமானத்தின் தேறல் 2022 ஆண்டிற்கான அதன் மதிப்பீடாகிய ரூபா 232.0 பில்லியனில் 71.2 சதவீதமாக இருந்தது.

**அட்டவணை 1.10: அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு (2022 சனவரி முதல் செத்தெம்பர் வரை)**

ரூபா. பில்லியன்

| விடயம் | 2021 (சன - செப்) | 2022 (வருடாந்த மதிப்பீடு) | 2022 திருத்தப்பட்ட மதிப்பீடு | 2022 (சன - செப்) (தற்காலிக) | காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| வருமான வரி | 209.5 | 496.0 | 558.0 | 431.8 | வருமான வரி வருமானம் 2022, முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 431.8 பில்லியன் ஆகும். இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 209.5 பில்லியனினை விட 106.1 சதவீத அதிகரிப்பாகவும் 2022 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மதிப்பீட்டில் 87.1 சதவிகித தேறலாகவும் இருந்தது. நிறுவனம் மற்றும் நிறுவனமல்லா வரி வருமானம், மேலதிகக் கட்டண வரியாகிய ரூபா 120.7 பில்லியன் உட்பட ரூபா 399.4 பில்லியன் ஆகும். இது முன்னைய 190.6 பில்லியன் வருமானத்திலிருந்து 109.5 சதவீதம் அதிகரித்துள்ளது. மேலும், 2021 செத்தெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னார்வ வெளிப்படுத்தல் மீதான வரியிலிருந்து ரூபா 4.0 பில்லியன் பெறப்பட்டது. மேலும், 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது உழைக்கும்போது செலுத்தும்வரி / முற்பண தனியாள் வருமான வரி ரூபா 10.5 பில்லியனிலிருந்து 70.2 சதவீதம் அதிகரித்து ரூபா 17.9 பில்லியனினையும் மற்றும் பிடித்துவைத்தல் வரி ரூபா 7.7 பில்லியனிலிருந்து 85.8 சதவீதம் அதிகரித்து ரூபா 14.3 பில்லியனினையும் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பதிவுசெய்தது. அத்துடன், மூலதன ஈட்டுகை வரி, ரூபா 1.3 பில்லியனிலிருந்து 186.9 சதவீதம் கணிசமாக அதிகரித்து மீளாய்வுக்குரிய காலத்தின் போது ரூபா 461 மில்லியனினைக் கொண்டிருந்தது. |
| பெறுமதி சேர் வரி | 224.1 | 424.0 | 533.0 | 310.5 | 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பெறுமதி சேர் வரி வருமானமானது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 224.1 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 38.6 சதவீதம் அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 310.5 பில்லியனாக இருந்தது, இது 2022 ஆம் ஆண்டிற்கான பெறுமதி சேர் வரிக்கான ஆரம்ப மதிப்பீட்டில் 73.2 சதவீத தேறலாகும். இந்த வருமானச் செயலாற்றுகைக்கான காரணம் முக்கியமாக 2022, யூன் 01 முதல் 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும், 2022, செத்தெம்பர் 01 முதல் 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும் பெறுமதி சேர் வரி விகிதம் அதிகரிக்கப்பட்டமையாகும். 2022 சனவரி 1, முதல் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி விகிதத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தியதும் இந்தச் செயலாற்றுகைக்கு சாதகமாக பங்களித்தது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் சுருங்கி, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதிலும், உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சந்தைகளில், ரூபாயின் பெறுமதியில் கடுமையான வீழ்ச்சி, பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றினால் பெறுமதி சேர் வரி வருமானம் அதிகரித்தது. உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகள் மற்றும் இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகள் மீதான பெறுமதி சேர் வரி வருமானம் முறையே 44.7 சதவீதம் அதிகரித்து ரூபா 193.8 பில்லியன் மற்றும் 29.5 சதவீதம் அதிகரித்து மீளாய்வுக்குரிய காலத்தின் போது ரூபா 116.7 பில்லியனினையும் பதிவுசெய்தது. |

ரூபா. பில்லியன்

| விடயம் | 2021 (சன - செப்) | 2022 (வருடாந்த மதிப்பீடு) | 2022 திருத்தப்பட்ட மதிப்பீடு | 2022 (சன - செப்) (தற்காலிக) | காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| உற்பத்தித் தீர்வை | 213.9 | 430.0 | 374.0 | 262.1 | 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உற்பத்தித் தீர்வை வருமான சேகரிப்பு 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 22.5 சதவிகிதம் அதிகரித்துள்ளது, இது 2022 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மதிப்பீட்டில் 61.0 சதவிகிதம் ஆகும். மதுபானம் மற்றும் சிகரெட் வருமானம் அதிகரிப்பதே இதற்கு முக்கிய காரணமாகும். மதுபானங்கள் மீதான மதுவரியின் வருமானமானது 2021, நவம்பர் 12 முதல் மதுபானத்தின் மீதான கலால் வரியை உயர்த்தியமை மற்றும் 2022, சனவரி 03 முதல் மதுபானம் மற்றும் மதுபானம் சார்ந்த தயாரிப்புகள் மீதான பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் முகாமை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டமை காரணமாக, 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 94.2 பில்லியனிலிருந்து 32.2 சதவீதம் அதிகரித்து 2022, முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 124.6 பில்லியனினை அடையப்பெற்றது. சிகரெட் மீதான உற்பத்தி வரி வருமானம், 2022 வரவுசெலவு திட்டத்தில் சிகரெட்டுகளின் வரி விகிதங்கள் திருத்தப்பட்டதன் காரணமாகவும், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் குச்சிகளின் விற்பனை 30 சதவீதம் மேம்பட்டமையாலும், மீளாய்வுக்குரிய காலத்தின் போது, 32.6 சதவீதம் அதிகரித்து ரூபா 82.6 பில்லியனினைப் பதிவுசெய்தது. மேலும், மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி வருமானமானது, 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் முதல் மோட்டார் வாகன இறக்குமதியைக் குறைக்கும் நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 13.2 பில்லியனிலிருந்து 3.4 சதவீதம் அதிகரித்து 2022 சனவரி முதல் செத்தெம்பர் வரையிலான காலகட்டத்தில் ரூபா 13.7 பில்லியனினை அடையப்பெற்றது. மேலும், பிற தயாரிப்புகளின் வருமான சேகரிப்பும் உற்பத்தி வரி வருமானத்தினை அதிகரிக்க சாதகமாகப் பங்களித்தது. இருப்பினும், பெற்றோலியப் பொருட்கள் மீதான உற்பத்தி வரி வருமானம், எரிபொருள் தேவையை சமாளிக்கும் நோக்கில் எரிபொருள் அனுமதி (கரநட ியளள) முறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எரிபொருள் இறக்குமதியை குறைத்ததன் விளைவாக 2022 முதல் ஒன்பது மாதங்களில் 7.5 சதவீதம் குறைந்து ரூபா 36.7 பில்லியனினைப் பதிவுசெய்தது. |
| இறக்குமதித் தீர்வைகள் | 51.8 | 115.0 | 42.0 | 36.6 | இறக்குமதி வரி வருமானம் 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 36.6 பில்லியனாக 29.4 சதவீதம் சரிவுற்று 2022 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மதிப்பீட்டில் 31.8 சதவிகிதத்தினை அடைந்துள்ளது. இறக்குமதி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விதித்தல், அத்தியாவசியமற்ற பொருட்களுக்கான உரிம முறை அறிமுகம், தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் மீதான சுங்கத் தீர்வை விகிதங்கள் அதிகரிப்பு மற்றும் அந்நிய செலாவணி வெளியேற்றத்தை குறைப்பதற்கு மேலதிகக் கட்டணம் விதித்தல் ஆகியவை மீளாய்வுக்குரிய காலத்தின் போது இறக்குமதி வரி வருமானத்திற்கு எதிர்மறையாகப் பங்களித்தன. |
| துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | 114.1 | 175.0 | 177.0 | 135.4 | துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டிலிருந்துவருமான சேகரிப்பு 18.7 சதவீதம் கணிசமாக அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 135.4 பில்லியன்களைக் கொண்டிருந்தது. இது 2022 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மதிப்பீட்டில் 77.4 சதவிகித தேறலாகும். பெற்றோலியப் பொருட்கள், சீமெந்து கிளிங்கர், எ்.கு, மூலப்பொருட்கள் மற்றும் பிற நுகர்பொருட்களின் சர்வதேச விலைகள் அதிகரிப்புடன், அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி சரிந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். |

ரூபா. பில்லியன்

| விடயம் | 2021 (சன - செப்) | 2022 (வருடாந்த மதிப்பீடு) | 2022 திருத்தப்பட்ட மதிப்பீடு | 2022 (சன - செப்) (தற்காலிக) | காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 42.1 | 80.0 | 35.0 | 29.2 | விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வருமானம் 2022 சனவரி முதல் செத்தெம்பர், வரையிலான காலகட்டத்தில் 30.5 சதவீதம் குறைந்து ரூபா 29.2 பில்லியனினைக் கொண்டிருந்ததுடன் இது 2022ஆம் ஆண்டின் ஆரம்ப மதிப்பீட்டின் 36.5 சதவீத சேகரிப்பாகும். அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியைத் தடுக்கும் வகையில் ஆப்பிள், திராட்சை, ஆரஞ்சு போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் விலைகள் அதிகரித்ததே இதற்குக் காரணம். |
| ஏனைய வரிகள் | 96.3 | 267.0 | 133.0 | 77.7 | 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஏனைய வரிகளின் வருமானம் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 96.3 பில்லியனிலிருந்து 19.3 சதவீதம் குறைந்து ரூபா 77.7 பில்லியனினைக் கொண்டிருந்தது. இது, 2022 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மதிப்பீட்டில் 29.1 சதவிகிதமாகும்.. 2022 வரவுசெலவு திட்டத்தில் முன்மொழியப்பட்ட சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டினை அமல்படுத்துவதில் தாமதம் மற்றும் விசேட பண்டங்கள் மற்றும் சேவை வரி திரும்பப்பெறப்பட்டமை ஆகியவை, மதிப்பிடப்பட்ட வருவாயின் விலகலுக்குப் பங்களித்தன. இறக்குமதி மற்றும் தொடர்புடைய செயல்பாடுகளின் சுருங்குதல் மற்றும் செஸ் அறவீட்டின் வருமானம் 6.5 சதவீதம் குறைந்து ரூபா 52.8 பில்லியன்களாகக் காணப்பட்டமை 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருந்தக்கூடிய பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளின் தாக்கத்தை பிரதிபலிக்கிறது. இருப்பினும், 2022 யூன் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தொலைத்தொடர்பு அறவீட்டு விகிதம் 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டமையால் தொலைத்தொடர்பு வரியின் வருமானம் 11.1 சதவீதம் அதிகரித்து ரூபா 10.7 பில்லியனினைப் பதிவசெய்தது. |
| வரி அல்லாத வருமானம் | 99.0 | 226.0 | 232.0 | 165.1 | கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரி அல்லாத வருமானம் 66.8 சதவீதம் அதிகரித்துள்ளது. இது 2022 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மதிப்பீட்டில் 73.1 சதவிகிதம் ஆகும். அரசுடைமை தொழில்முயற்சிகளின் வாடகை, இலாபங்கள் மற்றும் பங்கிலாபம் மற்றும் வட்டி வருமானம் ஆகியவற்றிலிருந்து மேம்பட்ட வருவாய் சேகரிப்பு ஆகியவற்றுடன் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் திருத்தம் இதற்கு முக்கிய காரணமாகும். மேலும், மத்திய வங்கியின் இலாபப் பரிமாற்றங்களின் பெறுகை ரூபா 30 பில்லியன் மற்றும் சமூக பாதுகாப்பு உதவுதொகைகளும், மீளாய்வு செய்யப்பட்ட காலத்தில் வரி அல்லாத வருமானத்தின் வருவாயை அதிகரிப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்தன. |
| **மொத்தம்** | **1,050.8** | **2,213 .0** | **2,084.0** | **1,448.5** | |

தொகுப்பு : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**கட்டம் 2.1 - பிரதான அரசிறை நடவடிக்கைகள் : 2022 சனவரி முதல் ஒற்றோபர் வரை**

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| நுமது வரி (கட்டளைச்சட்ட) தீர்வை - மதுவரி கட்டளைச் சட்டம் (52 ஆம் அத்தியாயம்) | |
| 01.01.2022 | 01∴2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.01.01 ஆந் திகதிய 2260∴78 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- 3 நட்சத்திர மற்றும் 4 நட்சத்திர வகை ஹோட்டல்கள் மற்றும் 5 நட்சத்திர ஹோட்டல் மற்றும் அதற்கு மேற்பட்ட நட்சத்திர∴பல்பொருள் ஹோட்டல்கள்: பல்பொருள் வில்லாக்கள்∴பாரம்பரிய ஹோட்டல்களுக்கு மதுபானப் பாவனை தொடர்பான அங்கீகாரக் கட்டணத்தை 2022, மாச்சு 31 வரை விலக்களிப்பதற்காக. |
| 01.01.2022 | 02∴2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.01.01 ஆந் திகதிய 2260∴79 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- ஹோட்டல்களுக்கான வருடாந்த உரிமக் கட்டணத்திற்கு 2022, மாச்சு 31 வரை விலக்களிப்பதற்கு (மதுவரி திணைக்களத்தினால் உரிமமளிக்கப்பட்ட குடு∴7இ குடு∴8இ குடு∴11இ குடு∴12 மற்றும் குடு∴22டீ வகை உரிமங்களுக்கு) |
| 27.01.2022 | 2022.01.27 ஆந் திகதிய 2264∴28 ஆம் இலக்க மற்றும் 2022.01.27 ஆந் திகதிய 2264∴29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள்<br>- சட்டத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக மதுவரி கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) கீழ் 08∴2021 மற்றும் 09∴2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள் 2021, திசெம்பர் 10 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதை அறிவிப்பதற்காக. |
| 04.05.2022 | 03∴2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.04.29 ஆந் திகதிய 2277∴62 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- இலங்கையில் நிறுவப்பட்ட உரிமம்பெற்ற ஏதேனும் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் மீது லீற்றர் ஒன்றிற்கு ரூ.25 இலிருந்து ரூ.50 இற்கு தீர்வையினை அதிகரிப்பதற்கு. |
| 08.06. 2022 | 04∴2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.06.08 ஆந் திகதிய 2283∴28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- மதுபான உற்பத்தியைத் தவிர, உள்நாட்டில் வழங்கப்படும்∴இறக்குமதி செய்யப்படும் எத்தைல் மதுசாரம் மீதான வரியை அதிகரிக்க. |
| 28.07.2022 | 05∴2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.07.28 ஆந் திகதிய 2290∴24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா நிறுவனங்கள் அல்லது சுற்றுலா வலயங்களில் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் இனங்காணப்பட்ட சுற்றுலா நிறுவனங்களுக்கு மென் மதுபான உரிமங்களை வழங்குதல். |
| **பெறுமதி சேர் வரி - 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டம்** | |
| 01.01.2022 | 2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (திருத்தச் சட்டம்)<br>- நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் நிதிச் சேவைகளின் மீதான பெறுமதி சேர் வரி விகிதத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்துதல் மற்றும் சில பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு பெறுமதி சேர் வரியில் இருந்து விலக்களித்தல். |
| 01.06.2022 | 2022.05.31 ஆம் திகதிய 2282∴26 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பெறுமதி சேர் வரி விகிதத்தை 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு உயர்த்துதல். |
| 01.09.2022 | 2022.08.31 ஆம் திகதிய 2295∴08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பெறுமதி சேர் வரி விகிதத்தை 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு உயர்த்துதல். |
| 07.10.2022 | 2022.10.06 ஆம் திகதிய 2300∴25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இ.மு. குறியீட்டு இல. 9619.00.10 இன் கீழ் சுகாதாரத் துணிகள் மற்றும் ரெம்பொன்களின் இறக்குமதி மற்றும்∴அல்லது வழங்கலை பூச்சிய விகிதத்திற்கு ஏற்புடையதாக்கல். |
| **மிகைக் கட்டண வரி - 2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மிகைக்கட்டண வரிச் சட்டம்** | |
| 08.04.2022 | - 2020∴2021 மதிப்பீட்டு ஆண்டிற்காக வரி விதிக்கக்கூடிய வருமானம் ரூபா 2,000 மில்லியனினை விஞ்சும் தனிநபர்கள், பங்குடைமைகள் அல்லது நிறுவனங்களிடமிருந்து 25 சதவீதம் என்ற விகிதத்தில் ஒரே தடவை அறவிடப்படும் வரியாகிய மிகைக்கட்டண வரியை விதித்தல். |
| **துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு - 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்** | |
| 06.01.2022 | 2022.01.06 ஆம் திகதிய 2261∴58 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- அரச மருத்துவமனைகள் அல்லது சுகாதார அமைச்சிற்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள், இயந்திரங்கள் போன்றவற்றுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களித்து 2020 ஒற்றோபர் அக்டோபர் 26 ஆந் திகதிய 2199∴2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்வதற்கு. |
| 12.01.2022 | 2022.01.11 ஆம் திகதிய 2262∴19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய இ.மு. உப் பிரிவுகளுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு சலுகை விகிதங்களையும் விலக்குகளையும் ஒதுக்குவதற்கு. |
| 23.08.2022 | 2022.08.22 ஆம் திகதிய 2262∴19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- நிவாரண நடவடிக்கைகளை வழங்குவதற்கு அல்லது அத்தியாவசிய பொதுச் சேவைகளைத் தொடர்வதற்கு வசதியாக ஏதேனும் வெளிநாட்டு நிறுவனம் அத்தியாவசியப் பொருட்களை நன்கொடையாக வழங்குவதற்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களித்தல். |
| 05.10.2022 | 2022.10.05 ஆம் திகதிய 2300∴13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- சுகாதார துணிகள் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களித்தல். |

**கட்டம் 2.1 - பிரதான அரசிறை நடவடிக்கைகள் : 2022 சனவரி முதல் ஒற்றோபர் வரை**

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **செஸ் அறவீடு - 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம்** | |
| 12.01.2022 | 2022.01.11 ஆம் திகதிய 2262∴20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- அரிசி, மீன்வளப் பொருட்கள் மற்றும் திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு தொடர்பான துணைப் பொருட்களுக்கான புதிய இ.மு. குறியீடுகளுக்கு தற்போதுள்ள செஸ் அறவீட்டு விகிதங்களை ஒதுக்குவதற்கு. |
| 11.03.2022 | 2022.03.10 ஆம் திகதிய 2270∴59 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- புடைவை மற்றும் ஆடைகளுக்காக, தற்போதுள்ள செஸ் அறவீட்டு விகிதங்களை அதிகரிப்பதற்கு. |
| 19.05.2022 | 2022.05.18 ஆம் திகதிய 2280∴32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2022.01.11 ஆம் திகதிய 2262∴20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினை மீண்டும் வெளியிடுவதற்கு. |
| **சுங்க இறக்குமதித் தீர்வை - 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்** | |
| 12.01.2022 | 01∴2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2022.01.11 ஆம் திகதிய 2262∴14 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்.<br>பின்வருவனவற்றிற்காக இ.மு.குறியீடு தேசிய துணைப் பிரிவுகளை உருவாக்க<br>- திரவ பெற்றோலிய வாயு தொடர்பான துணைப் பொருட்களின் தரத்தை மதிப்பிடுதலும் கண்காணித்தலும்<br>- மீன்பிடி பொருட்களின் இறக்குமதி மற்றும் சந்தை தகவல்களை கண்காணித்தல்<br>- இழைய வளர்ப்பு தாவரங்களின் ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் சந்தைத் தகவலை கண்காணித்தல்<br>- ஐஊருஆளுயு பெறுமதி அடிப்படையில் பழுப்புநிற சீனி மற்றும் வெள்ளைச் சீனியைத் தெளிவாக அடையாளம் காணல் மற்றும் உள்ளூர் பழுப்புநிற சீனி உற்பத்தியை ஊக்குவித்தல்<br>வகைப்பாடு சிக்கல்களை நீக்குதல் மற்றும் பாஸ்மதி மற்றும் பிற அரிசி வகைகளை எளிதாக அடையாளம் காணுதல் |
| 10.03.2022 | 02∴2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2022.03.09 ஆம் திகதிய 2270∴20 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- அந்நியச் செலாவணி வெளிப்பாய்ச்சலைக் குறைக்கும் பொருட்டு, இறக்குமதியைக் குறைப்பதற்காக அத்தியாவசியமற்ற பண்டங்களின் மீதான சுங்க இறக்குமதித் திர்வையை அதிகரிப்பதற்கு. |
| **விசேட வியாபாரப் பண்ட அறவீடு - 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்** | |
| 01.01.2022 | 2021.12.31 ஆந் திகதிய 2260∴72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இறக்குமதி தொடர்பாக உருளைக்கிழங்கு கிலோ ஒன்றிற்கு ரூபா 30∴- மற்றும் வெங்காயம் கிலோ ஒன்றிற்கு ரூபா 10∴- எனும் விகிதத்தில் விசேட வியாபாரப்பண்ட அறவீட்டினைக் குறைப்பதற்கு. |
| 12.01.2022 | 2022.01.11 ஆந் திகதிய 2262∴15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- அரிசி மற்றும் சர்க்கரைக்கான புதிய இ.மு. குறியீடுகளின்படி தற்போதுள்ள வரி விகிதங்களை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கு. |
| 04.03.2022 | 2022.03.03 ஆந் திகதிய 2269∴48 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- சிறிய அளவிலான கால்நடைத் தீவன உற்பத்தியாளர்களின் மூலப்பொருள் தேவைகள் மற்றும் கோழிப்பண்ணை பொருட்களின் விலையைக் கருத்தில் கொண்டு, மக்காச்சோளம் மற்றும் உளுந்துக்கு ஒரு கிலோவுக்கு ரூபா 10 என்ற சலுகை வரி விகிதத்தை அறிமுகப்படுத்துதல். |
| 04.03.2022 | 2022.03.03 ஆந் திகதிய 2269∴56 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உள்ளூர் டின் மீன் தொழிலைப் பாதுகாக்கவும், விவசாயிகளுக்கு நல்ல விலையை உறுதி செய்யவும், நுகர்வோருக்காக விலை ஸ்திரத்தன்மையைப் பேணவும் கானாங்கெளுத்தி, உளுந்து, கௌபி, குரக்கன் மற்றும் தினை ஆகியவற்றின் இறக்குமதிக்கான விசேட வியாபாரப்பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஓராண்டுக்கு நீடிப்ப-தற்கு. |
| 10.03.2022 | 2022.03.09 ஆந் திகதிய 2270∴19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இறக்குமதிகைளைக் குறைக்க, யோகட் மற்றும் வெண்ணெய் இறக்குமதி மீது கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 1000, பாலாடைக்கட்டி கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 400, பேரிச்சம்பழம் மற்றும் தோடம்பழம் (புதியது) கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 200, திராட்சை (புதியது), ஆப்பிள் மற்றும் பிற பழங்கள் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 300 எனும் அடிப்படையில் விசேட வியாபாரப்பண்ட அறவீட்டின் ஆறு மாத காலத்திற்கு அதிகரிப்பதற்கு. |
| 28.03.2022 | 2022.03.28 ஆந் திகதிய 2273∴01 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- ரமலான் பண்டிகை காலத்தை கருத்தில் கொண்டு பேரிச்சம்பழம் இறக்குமதிக்கு ரூபா 199∴- தீர்வை விலக்கு அளி-ப்பதற்காக. |
| 14.04.2022 | 2022.04.13 ஆந் திகதிய 2275∴02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பருப்பு, மீன், மாசி, பச்சைப்பயறு, மங்குஸ்தான் மற்றும் கிவி பழங்களின் இறக்குமதி மீதான விசேட வியாபாரப்பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கு. |
| 15.06.2022 | 2022.06.15 ஆம் திகதிய 2284∴3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- பழங்களை இறக்குமதி செய்வதை ஊக்கப்படுத்தவும், உள்நாட்டு சமையல் எண்ணெய் தொழில், தேங்காய் சார்ந்த தொழில்கள் மற்றும் உணவு, பிஸ்கட் மற்றும் சோப்பு போன்ற தொழில்களை வலுப்படுத்தவும் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு. |

**கட்டம் 2.1 - பிரதான அரசிறை நடவடிக்கைகள் : 2022 சனவரி முதல் ஒற்றோபர் வரை**

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 10.08.2022 | 2022.08.09 ஆம் திகதிய 2292.∴29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- வெளிநாடுகளில் இருந்து உதவி.∴நன்கொடையாக அளிக்கப்படும், விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிற்கு ஏற்புடைய அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி மீது, சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து விலக்களித்தல். |
| 12.08.2022 | 2022.08.10 ஆம் திகதிய 2292.∴41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- நுகர்வோரின் நலனுக்காகவும், உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கவும் சந்தை விலையை நிலைநிறுத்துவ-தற்காக, நெத்தலிக் கருவாடு, கருவாடு, மாதுளை, குரக்கன், கடுகு விதைகள் ஆகியவற்றின் இறக்குமதிக்கான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை ஓராண்டுக்கு நீடித்தல். |
| 04.09.2022 | 2022.09.03 ஆம் திகதிய 2295.∴44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- சிறிய அளவிலான கால்நடைத் தீவன உற்பத்தியாளர்களின் மூலப்பொருள் தேவையை கருத்தில் கொண்டு கோழிப்பண்ணை உற்பத்திப் பொருட்களின் விலையை நிலைப்படுத்த, 31.12.2022 வரை நிலவும் விலையில் மக்காச்சோளம் மற்றும் உளுந்து இறக்குமதி செய்வதற்கான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை நீடித்தல். |
| 23.09.2022 | 2022.09.03 ஆம் திகதிய 2298.∴51 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>-விவசாயத் துறை அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டவாறு உள்ளூர் அறுவடை காலத்தைக் கருத்தில் கொண்டு பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 10 இலிருந்து கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 50 வரை 2023, ஓகத்து 11 வரை அதிகரிப்பதற்கு. |
| **இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகள்** | |
| 12.01.2022 | 2022 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.01.11 ஆந் திகதிய 2262.∴18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- நீண்ட தானிய அரிசி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்குவதற்கு.<br>- புதிய இ.மு. குறியீடுகளின்படி மீன் பில்லட் மீதான கட்டுப்பாடுகளைத் தொடருவதற்கு. |
| 10.03.2022 | 2022 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.03.09 ஆந் திகதிய 2270.∴18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>- தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் தேவைப்பாட்டினை விதித்தல். |
| 10.04.2022 | 2022 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.04.09 ஆந் திகதிய 2274.∴42 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br><br>- தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் தேவைப்பாட்டினை விதித்தல். |
| **புறப்படுகை அறவீடு - 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| 27.03.2022 | 2022.03.27 ஆம் திகதிய 2272.∴53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- இரத்மலான கொழும்பு சர்வதேச விமான நிலையத்தை பிராந்திய இடங்களுக்கு சேவை செய்யும் சர்வதேச விமான நிலையமாக மேம்படுத்தும் நோக்கத்துடன், கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலிருந்து இலங்கையிலிருந்து விமானம் மூலம் புறப்படும் பயணிகளுக்கான புறப்படுகை அறவீட்டினை 50 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 30 இற்குக் குறைத்தல். |
| **2008 ஆம் அண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டம்** | |
| 18.01.2022 | 2022.01.18 ஆந் திகதிய 2263.∴03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- எச்சீஎல் டெக்னாலஜிஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் மூலம் ஏற்றுமதி செய்வதற்காக மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட தொடர்புடைய தகவல் மற்றும் வரிவிலக்குகளை வெளியிடுவதற்கு. |
| 25.04.2022 | 2022.04.25 ஆந் திகதிய 2277.∴02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- புதிய களனி பாலத்திலிருந்து ராஜகிரிய ஊடாக அதுருகிரிய (மேமடியு) வரையிலான நான்கு வழிச்சாலை உயர்மட்ட நெடுஞ்சாலையை நிர்மாணித்து இயக்கும் திட்டத்திற்கு தொடர்புடைய தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விதிவிலக்குக-ளை வெளியிடுதல். |
| 03.08.2022 | 2022.08.03 ஆந் திகதிய 2291.∴25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- எச்.சி.எல் டெக்னாலஜிஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் மூலம் ஏற்றுமதிக்கான மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (ஐ.டி.) தொடர்பான சேவைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்கு தொடர்புடைய தகவல் மற்றும் வழங்கப்பட்ட விலக்குகளை வெளியிடுவதற்கு. |
| **2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்** | |
| 31.08.2022 | 2022.08.31 ஆந் திகதிய 2295.∴10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் உரிம ஒழுங்குவிதியை வெளியிடுவதற்கு. |
| 01.09.2022 | 2022.08.31 ஆந் திகதிய 2295.∴09 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சீட்டாட்டத் தொழில் நடத்தப்படும் குறிப்பிட்ட பகுதியை சீட்டாட்டத் தொழில் ஈடுபடுவதற்கான இடம் அல்லது வளாகமாக குறித்துரைப்பதற்கு. |
| **உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்** | |
| 27.07.2022 | 2022.07.27 ஆந் திகதிய 2290.∴19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உள்நாட்டில் பொருத்தப்பட்ட.∴உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பொருந்தக்கூடிய சலுகை ரீதியான உற்பத்தி தீர்வை விகிதத்தின் வரி அடிப்படையை "செலுத்த வேண்டிய தீர்வையின் சதவிகிதம்" என்பதற்குப் பதிலாக "CIF பெறுமதியின் சதவிகிதம்" எனத் திருத்துவதற்கு. |

கட்டம் 2.1 - பிரதான அரசிறை நடவடிக்கைகள் : 2022 சனவரி முதல் ஒற்றோபர் வரை

| பயன்வலுத் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்** | |
| 31.08.2022 | 2022.08.31 ஆந் திகதிய 2295/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>- 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் உரிம ஒழுங்குவிதியை வெளியிடுவதற்கு. |
| 01.09.2022 | 2022.08.31 ஆந் திகதிய 2295/09 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>- 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சீட்டாட்டத் தொழில் நடத்தப்படும் குறிப்பிட்ட பகுதியை சீட்டாட்டத் தொழில் ஈடுபடுவதற்கான இடம் அல்லது வளாகமாக குறித்துரைப்பதற்கு. |
| **உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்** | |
| 27.07.2022 | 2022.07.27 ஆந் திகதிய 2290/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>- உள்நாட்டில் பொருத்தப்பட்ட/உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பொருந்தக்கூடிய சலுகை ரீதியான உற்பத்தி தீர்வை விகிதத்தின் வரி அடிப்படையை செலுத்த வேண்டிய தீர்வையின் சதவிகிதம் என்பதற்குப் பதிலாக ஊஐகு பெறுமதியின் சதவிகிதம் எனத் திருத்துவதற்கு. |

### 1.3 அரசாங்க செலவினம்

அரசாங்க செலவினமானது வருடந்தோறும் பாராளுமன்றத்தினால் அதிகாரமளிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது. இதற்கமைவாக, 2022 இல் செலவினங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு முடியுமான வகையில் 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய அரசாங்க செலவினங்களின் மதிப்பீடானது அண்மைக் காலத்தில் நாட்டின் சமூகப் பொருளாதார முறைமையில் ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாக நடைமுறை சாத்தியமற்றதாகியது.
வறியவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கு அவசர நிவாரணங்களை வழங்குதல், உரமானிய வழங்கல் மற்றும் எரிபொருள், காகிதாதிகள், மருத்துவ வழங்கல்கள், பாதுகாப்புப் படையினர்/பொலிஸ்/வைத்தியசாலைகள் போன்றவற்றுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் சீருடைகள் என்பவற்றுக்குத் தேவையான ஒதுக்கீடுகளில் ஏற்பட்ட பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்கும் அரசாங்க செலவினத்தினை அதிகரிப்பதற்கான அழுத்தமான தேவை ஏற்பட்டுள்ளது. அதேவேளை, 2022 இல் நடைமுறைக் காரணங்களினால் செயற்படுத்துவதற்கு சிரமமான மற்றும் குறைந்த முன்னுரிமை மூலதனக் கருத்திட்டங்களிலிருந்து சாத்தியமான சேமிப்பாக ரூபா 300 பில்லியன் நிதி ஏற்பாடொன்று இனங்காணப்பட்டது. 2022 இன் அரையாண்டில், நாட்டின் புதிய தேவைகளை ஈடு செய்யும் வகையில் 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினை திருத்தியதன் மூலம் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய வரவுசெலவுத் திட்டமொன்று அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் விளைவாக 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினை திருத்துவதற்கு 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இதற்கமைவாக, 2022 இல் அரசாங்க செலவினம் 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளுக்குள் முகாமை செய்யப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. எவ்வாறாயினும், 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்க செலவினம் ரூபா 2,694.8 பில்லியனாகக் காணப்பட்டது. இதில் ரூபா 2,300.2 பில்லியன் மீண்டெழும் செலவினமாகக் காணப்பட்டதுடன், ரூபா 394.6 பில்லியன் மூலதன மற்றும் தேறிய கடன் பெறுகைச் செலவினமாகக் காணப்பட்டது.

**அட்டவணை 1.11: அரசாங்க செலவின செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| விபரம் | சன - செப் 2021 | சன - செப் 2022(அ) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **2,087,309** | **2,300,171** |
| சம்பளங்கள் | 634,746 | 714,280 |
| ஓய்வூதியம் | 197,833 | 228,609 |
| வட்டி | 832,992 | 927,366 |
| ஏனைய | 421,739 | 429,916 |
| **மூலதனம் மற்றும் தேறிய கடன்** | **293,102** | **394,617** |
| **மொத்த செலவினம்** | **2,380,412** | **2,694,788** |

மூலம் : தேசிய வரவுசெலவுதிட்ட திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

### ஆள்சார் வேதனாதிகள் மற்றும் ஓய்வூதியங்கள்

மாகாண சபைகளின் ஊழியர்கள் உள்ளடங்களான அரசாங்க ஊழியர்களின் ஆள்சார் வேதனாதிகள் மீதான செலவினம் 2021 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 634.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 714.3 பில்லியனாக 12.5 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2021 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 197.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 228.6 பில்லியனாக 15.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 2022 சனவரியிலிருந்து அமுல்படுத்தப்படும் ரூபா 5,000.∴- மாதாந்த விசேட கொடுப்பனவாக அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுநர்களுக்கான கொடுப்பனவு இந்த அதிகரிப்புக்கு பங்களிப்பு செய்தது.

### வட்டிக் கொடுப்பனவுகள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2021 இன் இதேகாலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 833.0 பில்லியனிலிருந்து 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 927.4 பில்லியனாக 11.3 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. இது உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 29.2 சதவீதத்தினால் அதிகரித்ததனால் ஏற்பட்டதாகும். எவ்வாறாயினும், வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் 45.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த வட்டிக் கொடுப்பனவுகளான ரூபா 927.4 பில்லியனில், உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 819.4 பில்லியனாகக் காணப்பட்ட அதே வேளை வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 108.0 பில்லியனாக காணப்பட்டது.

**அட்டவணை 1.12: அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2021 - 2022**

ரூபா.மில்லியன்

| காலப்பகுதி | | திறைசேரி உண்டியல்கள் (%) | | | திறைசேரி முறிகள் (%) | | | | நாணய மாற்று வீதங்கள் ரூபா/ ஐ.அ.டொ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் | |
| 2021 | சன | 4.69 | 4.75 | 4.98 | | | 6.34 | 6.72 | 190.5 |
| | பெப் | 4.90 | 4.99 | 5.09 | | 6.25 | 6.70 | 7.07 | 194.1 |
| | மார் | 5.05 | 5.10 | 5.11 | 6.19 | 6.30 | | 7.05 | 197.0 |
| | ஏப் | 5.11 | 5.14 | 5.18 | 6.50 | | | 7.25 | 197.4 |
| | மே | 5.13 | 5.14 | 5.18 | | | 7.04 | | 199.6 |
| | யூன் | 5.18 | 5.19 | 5.23 | 6.35 | | 7.30 | 7.31 | 199.8 |
| | யூலை | 5.22 | 5.23 | 5.25 | 6.36 | 6.87 | 7.47 | | 200.0 |
| | ஆகஸ் | 5.87 | 5.90 | 5.93 | 6.75 | | 8.55 | | 200.5 |
| | செப் | 6.70 | 6.99 | 7.01 | 8.12 | 8.10 | | | 202.0 |
| | ஒத் | 8.43 | 8.16 | 8.18 | 9.36 | 9.94 | | 11.14 | 201.1 |
| | நவ | 7.53 | 8.02 | 8.16 | 9.16 | 9.67 | | | 201.9 |
| | திசெ | 8.16 | 8.33 | 8.24 | | 9.70 | | | 201.4 |
| 2022 | சன | 8.63 | 8.55 | 8.55 | | 11.49 | | | 201.5 |
| | பெப் | 8.61 | 8.53 | 8.53 | | 12.25 | | 11.92 | 201.7 |
| | மார் | 12.92 | 12.25 | 12.28 | 14.41 | | | 14.70 | 255.8 |
| | ஏப் | 23.53 | 23.96 | 24.09 | | 22.01 | | 22.16 | 319.4 |
| | மே | 23.65 | 24.22 | 24.30 | | 22.38 | | 22.69 | 358.9 |
| | யூன் | 23.85 | 24.40 | 23.84 | | 23.77 | | 21.18 | 360.2 |
| | யூலை | 28.86 | 29.24 | 29.53 | | 28.45 | | | 360.9 |
| | ஆகஸ் | 32.89 | 31.28 | 30.50 | | 29.16 | | | 361.0 |
| | செப் | 31.94 | 30.59 | 29.85 | | 30.95 | | 31.50 | 362.4 |

மூலங்கள் : திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம், பொதுப் படுகடன் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி

**நலன்புரிச் செலவினம்**

நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான அரசாங்க செலவினமானது சுகாதார பராமரிப்பு மற்றும் போசாக்குணவு, கல்வி, வாழ்வாதார ஒத்துழைப்பு, சமூக நலன்புரி மற்றும் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் மீதான செலவினத்தை உள்ளடக்கியுள்ளது. உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதார உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் காரணமாக 2021 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 193.99 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 196.44 பில்லியனால் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம் அதிகரித்தது.

சுகாதார துறை மீதான செலவினம் ”அனைவருக்கும் இலவச மருத்துவம்”, ”திரிபோசா“ மற்றும் ”போசன மல்ல“ என்பவற்றின் மீதான செலவினத்தினை உள்ளடக்கியதுடன் ரூபா 51.83 பில்லியனாக காணப்பட்டது. ”அனைவருக்கும் இலவச மருத்துவம்“ நிகழ்ச்சித்திட்டம் சுகாதார மற்றும் போசாக்குணவு ஒத்துழைப்பு மீதான செலவினத்திற்கு பாரியளவு பங்களிப்புச் செய்துள்ளது. எவ்வாறாயினும் இலவச மருத்துவம் மீதான செலவினம் கொவிட்-19 நோய்ப் பரவலினை கட்டுப்படுத்தியதன் காரணமாக 2021 இன்

**அட்டவணை 1.13: நலனோம்பல் செலவினம்**

ரூபா.மில்லியன்

| விபரம் | சன - செப் | |
|---|---|---|
| | 2021 | 2022 (அ) |
| **சுகாதார நலன் மற்றும் போசாக்கு** | 96,148 | 51,827 |
| அனைவருக்கும் இலவச மருந்து | 91,827 | 48,425 |
| திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் | 473 | 226 |
| பாடசாலை சிறார்களுக்கான காலை உணவு | 67 | 73 |
| போசன மல்ல | 3,781 | 3,103 |
| **கல்வி** | 12,393 | 10,137 |
| இலவச பாடப் புத்தகங்கள் | 842 | 836 |
| இலவச பாடசாலை சீருடைகள் | 1,834 | 1,993 |
| பாடசாலை பருவகாலச் சீட்டுக்கள் | 5,300 | 3,407 |
| பாடசாலை போசணை உணவுத் திட்டம் | 1,258 (ஆ) | 709 |
| கடின மற்றும் அதிகடின பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள் | 898 | 900 |
| தரம் ஐந்து புலமைப் பரிசில்கள் | 370 | 321 |
| மகாபொல புலமைப் பரிசில்கள் | 814 | 650 |
| உதவுதொகைகள் | 563 | 710 |
| அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான உதவி | 514 | 611 |
| **வாழ்வாதார உதவி** | 67,224 | 112,461 |
| உர மானியம் | 11,008 | 33,038 |
| சமூர்த்தி நிவாரணம் | 42,566 | 78,755 |
| மீள்நடுகைக்கான (தேயிலை.ஃ.இறப்பர்) மானியங்கள் | 730 | 557 |
| ஏற்றுமதி பயிர் அபிவிருத்திக்காக விவசாயிகளுக்கு உதவுதல் | 141 | 71 |
| கொவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்ட நபர்கள் வாழ்வாதார உதவி | 12,779 | 40 |
| **சமூகநலன் மற்றும் பாதுகாப்பு வலை** | 18,232 | 22,017 |
| மாற்றுத் திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான உதவி | 4,958 | 5,795 |
| முதியோர்களுக்கான உதவி | 7,412 | 12,056 |
| ரணவிரு பெற்றோர்களுக்கான சமூக நலன் | 1,653 | 1,726 |
| உணவு உதவி, வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணம் | 209 | 40 |
| சிக்கனமற்ற வீதிகளுக்கான பேருந்து சேவை | 4,000 | 2,400 |
| **மொத்தம்** | 193,997 | 196,442 |

மூலம் : தேசிய வரவுசெலவு திட்ட திணைக்களம்
(அ) தற்காலிகமானது
(ஆ) மாணவரொருவரின் உணவுக்கான விலை பணவீக்கம் காரணமாக கட்டுப்படுத்த முடியாமையினால் சேவை வழங்குனர்கள் உணவை வழங்கத் தயங்கி விலை உயர்வைக் வேண்டினர்.

இதே காலப்பகுதியில் காணப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் 50 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

கல்வி தொடர்பான நலன்புரிச் செலவினங்கள் மீதான அரசாங்க செலவினம் 2021 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 12.39 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 10.14 பில்லியனாகக் காணப்பட்டது. இந்த செலவின குறைப்புக்குக் காரணம் கொவிட் - 19 நோய்ப் பரவலினைத் தடுப்பதற்காக குறித்த வருடத்தில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததன் காரணமாக பாடசாலைப் பருவச் சீட்டுக்களுக்கு ஒதுக்கப்பட்ட செலவினம் குறைவடைந்தமையாகும்.

வாழ்வாதார ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம் 2021 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 67.22 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 112.46 பில்லியனை அரசாங்கம் செலவிட்டுள்ளது. சமுர்த்தி, முதியோர், அங்கவீனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளிகள் உள்ளடங்களாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரிவாக்கப்பட்ட ஒத்துழைப்பினை உள்ளடக்கி உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அதேவேளை விவசாயத் துறைக்கு புத்துயிரளிக்கும் வகையில் அத்தியவசிய இரசாயண பசளைகளை வழங்குதல் என்பவற்றின் காரணமாக உரமானியம் தொடர்பான செலவினம் ரூபா 11.00 பில்லியனிலிருந்து ரூபா 33.03 பில்லியனாக அதிகரித்ததன் காரணமாக வாழ்வாதார ஒத்துழைப்பு மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இதற்கமைவாக 2022 மே மாதம் முதல் யூலை வரை காத்திருப்பு பட்டியலிலுள்ள பயன்பெறுநர்களுக்கான கொடுப்பனவு மற்றும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்ட உதவியுடன் 2022 செப்ரெம்பர் மாதத்திற்கான கொடுப்பனவு உள்ளடங்களான வாழ்வாதார உதவிக்கான கொடுப்பனவுக்காக ரூபா 78.76 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### பொது முதலீடு

நெடுஞ்சாலைகள், நீர்வழங்கல், நீர்ப்பாசனம், போக்குவரத்து, விவசாயம் மற்றும் கல்வித் துறை ஆகியவற்றை உள்ளடக்கிய முன்னுரிமைத் துறைகளில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான செலவினம் 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் ஏறக்குறைய ரூபா 210 பில்லியனாக காணப்பட்டது. இவற்றில் பின்வருவன உள்ளடங்கும்.

- பாதைகள், நெடுஞ்சாலைகள், பாலங்கள் மற்றும் அதிவேகப் பாதைகள் அபிவிருத்திக்காக ரூபா 114 பில்லியன்.
- அனைவருக்கும் போதியளவு மற்றும் பாதுகாப்பான குடிநீரை உறுதிப்படுத்துவதற்காக ரூபா 15 பில்லியன்.
- போக்குவரத்து வலையமைப்பின் வினைத்திறன், திறன்விருத்தி மற்றும் இணைப்பினை மேம்படுத்துவதற்காக ரூபா 31 பில்லியன்.
- நவீன தொழில்நுட்பம் மற்றும் புதிய விதை வகைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாய பெறுமதிச் சங்கிலியின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக ரூபா 11 பில்லியன்.
- பல்நோக்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் கால்வாய்கள் நிர்மாணத்தின் மூலம் விவசாயத் துறைக்குத் தேவையான நீரினை உறுதிப்படுத்துவதற்கு ரூபா 28 பில்லியன்.
- கல்வித்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் தரமேம்பாட்டுக்காக ரூபா 11 பில்லியன்.

## 1.4 திறைசேரி செயற்பாடுகள்

### பொதுத் திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள்

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வருமானம் மற்றும் பிற வருமதிகள் வடிவில் பொதுத் திறைசேரி அடையப்பெற்ற காசு உட்பாய்ச்சல்கள் ரூபா 1,361.9 பில்லியன் ஆகிய அதேவேளை, இத் தொகையானது மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா 1,557.3 பில்லியனில் இருந்து 87.5 சதவீதத்தை எட்டியுள்ளது. மேலும் இத் தொகை 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 1,020.6 பில்லியனினை விட 33.4 சதவீத அதிகரிப்பாகும். இதற்கிடையில், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், மீண்டெழும் மற்றும் பொது முதலீடு ஆகிய இரண்டிற்குமான காசுப் பாய்ச்சல் 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 2,350.9 பில்லியனுடன் ஒப்பிடும்போது 16.7 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 2,743 பில்லியனாகக் காணப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,330.3 பில்லியனாகக் காணப்பட்ட தேறிய பணப் பற்றாக்குறையானது, முக்கியமாக தொழிற்பாட்டுச் செலவினம் மற்றும் பொது முதலீடு ஆகியவை முறையே 10.4 சதவீதமாகவும் 54.9 சதவீதமாகவும் அதிகரித்ததன் காரணமாக 2022, செத்தெம்பர் 30 ஆம் திகதி அன்று நிலவரப்படி 3.8 சதவீத அதிகரிப்புடன் ரூபா 1,381.1 பில்லியனினைப் பதிவுசெய்தது. இருப்பினும், இறுதியான எதிர்மறைக் காசு நிலுவை 2021 செத்தெம்பர் 30 ஆம் திகதி அன்று நிலவரப்படி ரூபா 856.8 பில்லியனாக இருந்தபோதிலும், இந்தக் காலகட்டத்தில் தேறிய கடன் அதிகரிப்பு உட்பட காசு உட்பாய்ச்சல்கள் அதிகரித்ததன் விளைவாக. 2022, செத்தெம்பர் 30 ஆம் திகதியில் ரூபா 48.2 பில்லியன் வரை மிகவும் குறைவடைந்தது.

### அரசாங்கப் படுகடன் முகாமைத்துவம்

2022 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன் வரம்பு ரூபா 3,200 பில்லியனாக இருந்தபோதிலும், இவ் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்துடன் ரூபா 3,844 பில்லியனாகப் பின்னர் அதிகரிக்கப்பட்டது. 2022, சனவரி 01 முதல் செத்தெம்பர் 30 வரையிலான காலப்பகுதிக்கான அரசாங்கக் கடன்களின் பயன்பாடு ரூபா 3,017.4 பில்லியனாகப் (புத்தகப் பெறுமதி கால) பதிவுசெய்யப்பட்டது. இத்தொகையானது, வங்கி

மேலதிகப் பற்று மூலம் நிதியளித்தலானது ஆண்டின் தொடக்கத்தில் நிலவிய ரூபா 831.6 பில்லியனில் இருந்து 2022, செத்தெம்பர் 30 ஆம் திகதி அன்று உள்ளவாறு ரூபா 48.2 பில்லியனாகக் குறைவடைந்ததைக் கருத்திற்கொண்ட பின்னர் ரூபா 2,234 பில்லியனாகக் கருத்தில் கொள்ளப்படலாம். இக்கால கட்டத்தில் காசுப்பாய்ச்சல் செயல்பாடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கிய மொத்தக் கடன் பயன்பாடு 2022 செத்தெம்பர் 30 இல் முறையே ரூபா 2,720.1 பில்லியனாகவும் ரூபா 297.3 பில்லியனாகவும் காணப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பெறப்பட்ட மொத்தக் கடனில் 90 சதவீதமாக இந்தக் காலகட்டத்தில் பெறப்பட்ட உள்நாட்டுக் கடன்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. திறைசேரிப் பிணையங்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் தற்காலிக முற்பணங்கள் ஆகியவை அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன்களின் முக்கிய மூலங்களாக இருந்தன. அதன்படி, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த உள்நாட்டுக் கடன்களில் 55 வீதம் திறைசேரிப் பிணையங்கள் மூலமாகவும் 39 வீதம் திறைசேரி உண்டியல்கள் மூலமாகவும் மேலும் 5 வீதம் இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தற்காலிக முற்பணம் மூலமாகவும் திரட்டப்பட்டது.. 2022 செத்தெம்பர் மாத இறுதியில் பெற்ற தேறிய கடன் ரூபா 2,022.1 பில்லியன் ஆகும்.

**அட்டவணை 1.14: அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று**

ரூபா.பில்லியன்

| விபரம் | சனவரி - செப்தெம்பர் | | |
|---|---|---|---|
| | 2021 | 2022 | |
| | உண்மையான | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
| ஆரம்ப காசு மீதி வருட/மாத | -488.2 | -831.6 | -831.6 |
| வருமானம் மற்றும் பிற பெறுகைகளிலிருந்தான மொத்த காசு உட்பாய்ச்சல் | 1,020.6 | 1,557.3 | 1,361.9 |
| மீண்டெழும் செலவினங்களுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -2,021.1 | -2,192.3 | -2,232.2 |
| மூலதனக் கொடுப்பனவுகளுக்காக மொத்த காசு வெளிப்பாய்ச்சல்ழு | -329.8 | -658.8 | -510.8 |
| தேறிய காசு மிகை/(பற்றாக்குறை) | -1,330.3 | -1,293.8 | -1,381.1 |
| மொத்த பெறுகைழு | 1,972.0 | 2,960.8 | 3,017.4 |
| படுகடன் மீள்கொடுப்பனவு | -1,036.6 | -1,085.2 | -995.3 |
| தேறிய பெறுகை | 935.4 | 1,875.6 | 2,022.1 |
| முன்னைய ஆண்டின் சர்வதேச பிணை முறிகளில் இருந்தான வருமான மீதி | - | - | 4.5 |
| சரிபடுத்தல் கணக்கு மீதி (TEB, தேறிய வைப்புகள், ஏனைய மாற்றல்கள் போன்றன) | 26.3 | - | 137.9 |
| **இறுதி காசு மீதி வருட / மாத** | **-856.8** | **-249.8** | **-48.2** |

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

* 2022 செப்தெம்பர் 30 வரைக்குமான கருத்திட்ட, நிகழ்ச்சித் திட்ட கடன் பகிர்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை1.15: சாதன ரீதியான மொத்த உள்நாட்டுப் பெறுகைகள்**

ரூபா. பில்லியன்

| மூலங்கள் | சன - செப் 2022 |
|---|---|
| திறைசேரி முறிகள் | 1,567.7 |
| திறைசேரி உண்டியல்கள் (தேறிய) | 1,077.8 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 74.7 |
| இலங்கை மத்திய வங்கி தற்காலிக முற்பணங்கள் | 65.6 |
| **மொத்தம்** | **2,785.8** |
| வெளிநாட்டு நாணய வங்கி அலகின் திருப்பிச் செலுத்துகை | -65.7 |
| **உள்நாட்டுக் கடன் பயன்பாடு** | **2,720.1** |

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

வரைபு 1.4 சாதன அடிப்படையில் மொத்த உள்நாட்டு பெறுகைகள் (சனவரி - செப்தெம்பர் 2022)




மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

## 1.5 வெளிநாட்டு நிதியளிப்பு

2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியைத் திரட்டுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கு இணங்க, 2022 ஆம் ஆண்டில் அதிக முன்னுரிமை திட்டங்களுக்கும் நிதித் தேவைகளுக்கும் நிதியளிக்க அரசாங்கம் உறுதியளித்துள்ளது. அந்தவகையில், அரசாங்கமானது 2022 ஆம் ஆண்டில் அத்தியாவசியப் பண்டங்களை இறக்குமதி செய்ய வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

### வெளிநாட்டு நிதியளிப்பு உறுதிப்பாடுகள்

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் கடன் வழங்கும் முகவர்களுடன் 8 உடன்படிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் அரசாங்கம் ஐ.அ.டொ. 1,873.5 மில்லியனினை வெளிநாட்டு நிதியுதவியாகப் பெற்றுள்ளது. அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக எக்ஸிம் வங்கி மற்றும் ஸ்டேட் பேங்க் ஓப் இந்தியா ஆகியவற்றால் வழங்கப்பட்ட ஐ.அ.டொ. 1,555.0 மில்லியன் ஏற்றுமதிக் கடன் வசதிகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவித் திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி ஐ.அ.டொ. 200.0 மில்லியன், மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை நிர்மாணிப்பதற்கும் உபகரணப்படுத்துவதற்கும் குவைத் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஐ.அ.டொ. 32.9 மில்லியன், மாத்தறையில் தொழிற்பயிற்சி நிலையமொன்றினை ஸ்தாபிப்பதற்காக ஜேர்மன் குடியரசினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொ. 17.6 மில்லியன், ஜனநாயக, செழிப்பான மற்றும் மீள்திறன்மிக்க இலங்கை நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஐக்கிய அமெரிக்காவினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொ 65.0 மில்லியன், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவித் திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் 3.0 மில்லியன் ஆகியவை இதில் அடங்கும். மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வெளிநாட்டு நிதி திரட்டலின் செயலாற்றுகை இலங்கையின் கடினமான பொருளாதார சூழ்நிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அட்டவணை 1.16: நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புக்கள் - 2022 சனவரி 01 - செப்தெம்பர் 30 வரையில்

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்டம்/ நிகழ்ச்சித் திட்டம்/ சாதனத்தின் பெயர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை (மில்லியன்) | | | | நியதிகள் | | | | ஏனைய நியதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நாணயம் | சாதன நாணயத்தில் | ரூபா. | ஐ.அ.டொ. | வட்டி | | | ஏனைய கட்டணங்கள் | சலுகைக் காலம் (ஆண்டுகள்) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந்தான காலம் (வருடங்கள்) |
| | | | | | | | | | வருடாந்த விகிதம் (%) | அண்ணளவாக (100) அடிப்படை | | | |
| **இருதரப்பு** | | | | | | | | | | | | | |
| குவைத் | கடன் | 3/2/2022 | மொரட்டுவப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை நிர்மாணித்தல் மற்றும் உபகரண செயற்திட்டம் | குவைட் தினார் | 10.0 | 6,638.9 | 32.9 | நிலையான | ஏற்புடையதாகாது | 1 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.5% | 6 | 26 |
| ஜேர்மனி | கடன் | 27/1/2022 | மாத்தறை செயற்திட்டத்தில் தொழிற்பயிற்சி நிலையத்தை நிறுவுதல் | யூரோ | 15.7 | 3,561.6 | 17.6 | நிலையான | ஏற்புடையதாகாது | 2 | - | 10 | 30 |
| | கடன் | 2/2/2022 | குறுகிய கால கடன் தொகை - ஐஅடொ 500மில். | ஐ.அ.டொ. | 500.0 | 100,710.3 | 500.0 | மாறக்கூடிய | பிணையளிக்கப்பட்ட ஓரிரவு நிதியியல் விகிதம் | 1.5 | மேலாண்மைக் கட்டணம் 0.5% | 1 | 1 |
| இந்தியா | கடன் | 17/3/2022 | 2022 ஆம் ஆண்டிற்கான அத்தியவசியப் பொருட்களின் இறக்குமதி (ஐஅடொ -1000) | ஐ.அ.டொ. | 1,000.0 | 267,862.1 | 1,000.0 | மாறக்கூடிய | பிணையளிக்கப்பட்ட ஓரிரவு நிதியியல் விகிதம் 3M | 1.6 | முன்னோக்கிய கட்டணம் 0.2% | 3 | 3 |
| | கடன் | 10/6/2022 | சூரியவலு கருத்திட்டத்திற்கான டொலர் கிரடிட் லைன் உடன்படிக்கை | ஐ.அ.டொ. | 55.0 | 19,789.0 | 55.0 | மாறக்கூடிய | பிணையளிக்கப்பட்ட ஓரிரவு நிதியியல் விகிதம் 6M | 1.6 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.5%,<br>மேலாண்மைக் கட்டணம் செலுத்தப்பட்ட தொகையில் 0.5% | 3 | 12 |
| ஐக்கிய அமெரிக்க | மானியம் | 31/8/2022 | ஜனநாயக, வளமான மற்றும் மீள்தன்மையுடைய இலங்கை வேலைத்திட்டம் | ஐ.அ.டொ. | 65.0 | 23,474.6 | 65.0 | | | ஏற்புடையதாகாது | | | 5 |
| **பல்தரப்பு** | | | | | | | | | | | | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | கடன் | 9/9/2022 | உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவித் திட்டம் | ஐ.அ.டொ. | 200.0 | 72,400.0 | 200.0 | மாறக்கூடிய | பிணையளிக்கப்பட்ட ஓரிரவு நிதியியல் விகிதம் | 0.7 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.15%, | 8 | 31 |
| | மானியம் | 9/9/2022 | உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவித் திட்டம் | ஐ.அ.டொ. | 3.0 | 1,086.0 | 3.0 | | | ஏற்புடையதாகாது | | | 2 |
| **மொத்தம்** | | | | | | 495,522.5 | 1,873.5 | | | | | | |

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

ஒவ்வொரு ஒப்பந்தத் திகதியின் நடைமுறையிலுள்ள மாற்று விகிதங்களின்படி வெவ்வேறு நாணயங்களில் செய்யப்பட்ட நிதி மதிப்புகள் ஐ.அ.டொ. மற்றும் இலங்கை ரூபாவாக மாற்றப்பட்டுள்ளன.

**வெளிநாட்டு நிதியளிப்பு பகிர்வுகளும் பயன்பாடும்**

2022, சனவரி 1 முதல் செத்தெம்பர் 30 வரையிலான காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்த வெளிநாட்டு நிதியளிப்பு ஐ.அ.டொ. 1,910.1 மில்லியனாகும். இதில் ஐ.அ.டொ. 1,902.9 மில்லியன் கடனாகவும், ஐ.அ.டொ. 7.2 மில்லியன் மானியங்கள் வடிவிலும் வழங்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பதிவு செய்யப்பட்ட பெரும்பாலான பகிர்ந்தளிப்புக்கள் இந்தியாவுடன் கையெழுத்திட்ட கடன் உடன்படிக்கைகளில் இருந்து வந்தவை இது கிட்டத்தட்ட 45 சதவிகிதம், அதைத் தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கி (25 சதவிகிதம்) மற்றும் உலக வங்கி (18 சதவிகிதம்) ஆகும்.

மொத்தப் பகிர்வுகளில் கிட்டத்தட்ட 29 சதவிகிதம் பெரும்பாலும் மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறையில் செயல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுக்கானதாகும். அதைத் தொடர்ந்து வீதி மற்றும் பாலங்கள் துறை 22 சதவிகிதம், வர்த்தகத் துறையில் 16 சதவிகிதம், சுகாதாரம் மற்றும் சமூக நலத்துறை. 7 சதவிகிதம், நீர் வழங்கல் மற்றும் கழிவகற்றல் துறை 6 சதவிகிதம், மனிதாபிமான உதவித் துறையில் 4 சதவிகிதம், தரைவழிப் போக்குவரத்துத் துறையில் 4 சதவிகிதம், நீர்ப்பாசனத் துறையில் 3 சதவிகிதம், விவசாயத் துறையில் 3 சதவிகிதம் மற்றும் கல்வித் துறையில் 2 சதவிகிதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.17: வெளிநாட்டு கடன்கள் மற்றும் நிதி உதவிகளின் நிதிப்பகிர்வுகள் - சனவாரி - செப்தெம்பர் 2022 வரையில்**

ஐ.அ.டொ.மில்லியன்

| அபிவிருத்திப் பங்காளர்கள் | பகிரப்பட்ட தொகை* | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | 1,073.4 | 0.8 | 1,074.2 |
| இந்தியா | 855.5 | 0.0 | 855.5 |
| சீனா | 67.8 | 0.0 | 67.8 |
| யப்பான் | 73.0 | 0.0 | 73.0 |
| பிரான்ஸ் | 35.7 | 0.0 | 35.7 |
| நெதர்லாந்து | 17.5 | 0.0 | 17.5 |
| சவுதி அரேபியா | 7.4 | 0.0 | 7.4 |
| குவைட் | 5.6 | 0.0 | 5.6 |
| ஹங்கேரி | 2.9 | 0.0 | 2.9 |
| கொரியா | 3.1 | 0.0 | 3.1 |
| ஐக்கிய இராச்சியம் | 2.0 | 0.0 | 2.0 |
| ஆஸ்திரியா | 1.4 | 0.0 | 1.4 |
| ஸ்பெயின் | 1.2 | 0.0 | 1.2 |
| டென்மார்க் | 0.3 | 0.0 | 0.3 |
| ஜேர்மனி | 0.0 | 0.8 | 0.8 |
| **பல்தரப்பு** | 829.5 | 6.4 | 835.9 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 479.3 | 0.5 | 479.8 |
| உலக வங்கி | 328.5 | 5.9 | 334.4 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 14.8 | 0.0 | 14.8 |
| ஒபெக் நிதியம் | 4.2 | 0.0 | 4.2 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 2.7 | 0.0 | 2.7 |
| **மொத்தம்** | 1,902.9 | 7.2 | 1,910.1 |

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

குறிப்பு : பல்வேறுபட்ட நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட நிதியளிப்புக்கள் ஐ.அ.டொ. மற்றும் ரூபா என்பனவற்றிற்கு மாற்றுவதற்காக 2022 செப்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி நிலவிய நாணயமாற்று வீதங்கள் பயன்படுத்தப்பட்டன.

* தற்காலிகமானது

**வரைபு 1.5 ஒவ்வொரு துறைக்குமான பகிர்வுகள் (சனவரி - செப்தெம்பர் 2022) (ஐ.அ.டொ.மில்லியன்)**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

## உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி

2022, செத்தெம்பர் 30 ஆம் திகதி அன்று உள்ளவாறு அடுத்த 3-5 ஆண்டுகளில் பயன்படுத்தப்படவுள்ள ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட கடன்களிலிருந்து கிடைக்கும் வெளிநாட்டு நிதியுதவியின் மொத்த பகிரப்படாத மீதி ஐ.அ.டொ. 7.2 பில்லியனாகும். வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையின் பெரும்பகுதியை ஆசிய அபிவிருத்தி வங்கியும் அதனைத்தொடர்ந்து முறையே சீனா, இந்தியா, உலக வங்கி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் கொண்டுள்ளன.

உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதியில் கிட்டத்தட்ட 21 சதவீதம் வீதிகள் மற்றும் பாலங்கள் துறையிலும், 16 சதவீதம் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திற்காகவும், 12 சதவீதம் தரைவழிப் போக்குவரத்துத் துறையிலும் பயன்படுத்தப்படவுள்ளது.

**வரைபு 1.6 கடன் வழங்குனர் ரீதியான (2022 செப்தெம்பர் 30 அன்று உள்ளவாறு) கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பயன்படுத்தப்படாதவை**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

**வரைபு 1.7 துறைரீதியான அபிவிருத்தி கருத்திட்ட முகாமைத்துவ திட்டங்களின் பகிரப்பட்டு பயன்படுத்தப்படாதவை (2022 செப்டெம்பர் 30 வரை) (ஐ.அ.டொ.மில்லியன்)**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

## வெளிநாட்டுப் படுகடன் இருப்பும் வெளிநாட்டு படுகடன் சேவைக் கொடுப்பனவுகளும்

வுபொருளாதார மீட்புத் திட்டத்தை வடிவமைப்பதிலும், அவசரகால நிதி உதவிக்காகவும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான வாய்ப்பை அரசாங்கம் நாடத் தொடங்கியுள்ளது. இலங்கையின் வெளிநாட்டுப் பொதுப் படுகடனை முழுமையாக நிலையான நிலைக்கு மீட்பதற்கான விரிவான திட்டத்தை வகுத்து, நாட்டின் கடன்வழங்குநர்களுக்கு முன்வைக்கும் நோக்கில், சர்வதேச நாணய நிதியத்துடனான அதன் கலந்துரையாடல்களை முடிந்தவரை விரைவாகத் தொடர உத்தேசிக்கப்பட்டிருந்தது. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இருதரப்பு மற்றும் வர்த்தகக் கடன்வழங்குநர்களின் வெளிப்புறக் கடன் சேவைக் கொடுப்பனவை 2022, ஏப்பிரல் 12 முதல் இடைக்காலப்பகுதியொன்றிற்கு தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான கொள்கை முடிவை அரசாங்கம் எடுத்துள்ளது. அதன்படி, இருதரப்பு கடன்வழங்குவோரின் படுகடன் இருப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

2022, செத்தெம்பர் இறுதிக்குள், மத்திய அரசாங்கத்தின் நிலுவையிலுள்ள மொத்த வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொ. 35.1 பில்லியனாக[i] இருந்தது. 2022 சனவரி 1 முதல் செத்தெம்பர் 30 வரையிலான மொத்தப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்[ii] ஐ.அ.டொ. 1,758.0 மில்லியனாகவும், இதில் ஐ.அ.டொ. 1,323.1 மில்லியன் முதன்மை மீள்கொடுப்பனவுகளுக்காகவும், மீதி ஐ.அ.டொ. 434.9 மில்லியன் வட்டி கொடுப்பனவுகளுக்காகவும் செலுத்தப்பட்டிருந்தது.

i தற்காலிகமானது

ii படுகடன் சேவை = முதன்மைக் கொடுப்பனவுகள் +வட்டிக்கொடுப்பனவுகள்

# பொருளாதார முன்னோக்குகைகள் | 02

## 2.1 மேன்நோக்கு

இலங்கையின் பொருளாதாரம் முன்பொருபோதுமில்லாத சவால்களைச் சந்தித்து வருகிறது. இத்தகைய சவால்களில், பல ஆண்டுகளாக பலவீனமான அரசிறை நிலையில் இருந்து உருவாகும் சமாளிக்கமுடியாத படுகடன், அதிக ஆபத்துள்ள வர்த்தக ரீதியான கடன்கள், பூஜ்ஜிய நிலைக்கு அருகிலுள்ள ஒதுக்கங்கள், வரலாற்று ரீதியாக உயர்ந்த பணவீக்கம், வட்டி விகிதங்கள் மற்றும் சென்மதி நிலுவைக்குக் கொடுக்கப்படும் அழுத்தங்கள் மற்றும் உலகளாவிய பொருளாதார கொந்தளிப்பு ஆகியவை அடங்கியுள்ளன. உலகப் பொருளாதார மந்தநிலை இரஷ்ய-உக்ரைன் மோதலுடன் அதிகமாகி, பணவீக்கம், விநியோகச் சங்கிலி மற்றும் நிதிச் சந்தை ஆகியவற்றில் அதன் விளைவுகளைத் தொடர்புபடுத்தியது, உலகப் பொருளாதார வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் 6.0 சதவீதம் முதல் 2022 ஆம் ஆண்டில் 3.2 சதவீதம் மற்றும் 2023 ஆம் ஆண்டில் 2.7 சதவீதம் குறைக்கும் என சர்வதேச நாணய நிதியம், அதனது 2022 ஒற்றோபர் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 9.3 சதவீத வளர்ச்சியில் இருந்து 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 4.8 சதவீதத்தால் சுருங்கியது. 2022 இன் முதல் பாதியில், விவசாயத்தில் 7.6 சதவீதம், கைத்தொழிற்துறையில் 7.1 சதவீதம் மற்றும் சேவைத் துறையில் 0.6 சதவீதத்தினால் வளர்ச்சி வீதம் சுருங்கியுள்ளது. விவசாயத் துறை உற்பத்தி இரசாயன உரம் போன்ற உள்ளீடுகள் பற்றாக்குறையால் தடைபட்டதுடன் கைத்தொழில் துறை குறிப்பாக விநியோகச் சங்கிலி தொந்தரவுகள் காரணமாக பாதிக்கப்பட்டது. இதேவேளை, மிதமான சுற்றுலாத் துறையின் மீட்சியும் சேவைத் துறையில் பதிவாகியுள்ளது.

2021 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் இருந்து ஒரு சரிவுப் போக்கைக் காட்டிய வேலையின்மை விகிதம், 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 4.6 சதவிகிதமாக உயர்ந்தது, இது பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

பணவீக்கமானது உணவு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கம் காரணமாக 2022 ஆம் ஆண்டில் அதன் வரலாற்றில் மிக உயர்ந்த அளவினை எட்டியது. இரசாயன உரத்திற்கான தடை விதிப்பு காரணமாக விநியோகத்தில் இடையூறுகள், எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற உலகளாவிய நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக அதிகரித்து வரும் இறக்குமதி பணவீக்கம், விநியோகச் சங்கிலி இடையூறுகள், எரிசக்தி விலைத் திருத்தங்கள், உள்ளூர் நாணயத்தின் கூர்மையான தேய்மானம் போன்றவை இதற்குக் காரணமாக இருந்துள்ளன. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் அளவிடப்படும் தலைப்புப் பணவீக்கம், 2022 சனவரியில் 14.2 சதவீதமாகவிருந்து 2022 செத்தெம்பரில் 69.8

**வரைபு 2.1: மொ.உ.உ. வளர்ச்சி**




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

சதவீதமாக அதிகரித்துள்ளது. முக்கிய பணவீக்கம், 2022 செத்தெம்பரில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், 50.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் அளவிடப்படும் தலைப்புப் பணவீக்கம் 2022 செத்தெம்பரில் 73.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கேள்வி அழுத்தங்கள், மத்திய வங்கி நாணயக் கொள்கையை இறுக்கத் தூண்டியுள்ளன. 2022 ஒக்தோபர் மாத இறுதி நிலவரப்படி முறையே மார்ச்சு மாதத்தில் 100 அடிப்படைப் புள்ளிகளாலும் ஏப்பிரலில் 700 அடிப்படைப் புள்ளிகளாலும், யூலையில் 100 அடிப்படைப் புள்ளிகளாலும் கொள்கை விகிதங்களை இலங்கை மத்திய வங்கி அதிகரித்தது. மேலும் நிலையான வைப்பு வசதி விகிதம் 14.5 சதவீதத்தினாலும் மற்றும் நிலையான கடன் வசதி 15.5 சதவீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டது. 2022 செப்தெம்பர் இறுதி வரையில் இறுக்கமான நாணயக் கொள்கையின் குறிப்பிடத்தக்க விளைவு மற்றும் உள்நாட்டு பணச் சந்தையில் இறுக்கமான பணப்புழக்க நிலை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில், தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன் ரூபா 7,576.9 பில்லியனாகக் குறைவடைந்தது. எனவே, விரிந்த பண விநியோகத்தின் வளர்ச்சியும் 2022 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பங்குச் சந்தை செயலாற்றுகை கலவையான செயல்திறனைக் காட்டியது. ஆண்டின் தொடக்கத்தில் அனைத்துப் பங்குகள் விலைச் சுட்டெண் 12,226 இல் இருந்து 39.9 சதவீதத்தினால் குறைந்து 2022 யூன் இறுதியில் 7,342 ஆகக் காணப்பட்ட அதே நேரத்தில், எஸ்அன்ட்பீ எஸ்எல்20 சுட்டெண் 4,233 இலிருந்து 2,334 ஆகக் குறைவடைந்தது. எவ்வாறாயினும், அனைத்துப் பங்குகள் விலைச் சுட்டெண் மற்றும் எஸ்அன்ட்பீ எஸ்எல்20 சுட்டெண் இரண்டும் அதிகரிப்பு வேகத்தைப் பெறத் தொடங்கியதால், 2022 யூலை தொடக்கத்தில் இருந்து பங்குச்சந்தை மீண்டு வருவதற்கான அறிகுறிகளைக் காட்டியது. ஆகவே அனைத்துப் பங்குகள் விலைச் சுட்டெண் மற்றும் எஸ்அன்ட்பீ எஸ்எல்20 சுட்டெண் ஆகியவை 2022, செத்தெம்பர் மாத இறுதியில் முறையே 9,931 மற்றும் 3,165 புள்ளிகளை எட்டியது. இதேவேளை, சந்தை மூலதனம் 2021 செத்தெம்பர் இறுதியில் ரூபா 4,216 பில்லியனாக இருந்து 2022 செத்தெம்பர் இறுதியில் ரூபா 4,341 பில்லியன் வரை மிதமான அதிகரிப்பினைப் பெற்றது. 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பங்குச் சந்தையிலிருந்து தேறிய வெளிநாட்டு மூலதன

வெளிப்பாய்ச்சல் காணப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில ஐ.அ.டொ. 529.5 மில்லியன் பதிவு செய்யப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வணிக ரீதியான வர்த்தகப் பற்றாக்குறையானது, ஏற்றுமதிகள் இறக்குமதிகளை விட வேகமாக வளர்ந்தமையால் 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 5,999 மில்லியனிலிருந்து ரூபா 4,104.1 மில்லியனாக குறிப்பிடத்தக்க அளவில் சுருங்கியது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஏற்றுமதியின் வருவாய் ஐ.அ.டொ. 9.981.1 மில்லியனினைப் பதிவுசெய்தது. இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 8,938.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 11.7 சதவிகித அதிகரிப்பாகும்.

அந்நிய செலாவணி திரவநிலையின் பற்றாக்குறைக்கு மத்தியில் அவசரமற்ற இறக்குமதிகள் மீதான இறுக்கமான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக, 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் இறக்குமதிச் செலவினமானது, 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ஐ.அ.டொ. 14,937.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொ. 14,085.2 மில்லியனாகக் குறைந்துள்ளது. சுற்றுலாத்துறையின் வருமானம் ஐ.அ.டொ. 946.4 மில்லியனாக அதிகரித்தது. இருப்பினும், 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தொழிலாளர் பணவனுப்பல் 43.8 சதவீதம் சரிந்து ஐ.அ.டொ. 2,574.1 மில்லியனினைக் கொண்டிருந்தது. 2022, செத்தெம்பர் இறுதியில் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கு சீனாவின் மக்கள் வங்கியின் ஸ்வப் வசதி ஐ.அ.டொ. 1.4 பில்லியன் உட்பட ஐ.அ.டொ. 1.8 பில்லியன்களாக இருந்தது.

## 2.2 பொருளாதார வளர்ச்சி

ஸ்ரீலங்கைப் பொருளாதாரமானது, 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 9.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இலங்கைப் பொருளாதாரம் 4.8 சதவீதத்தால் கடுமையாகச் சுருக்கமடைந்துள்ளது. விவசாயம், கைத்தொழில்துறை மற்றும் சேவைகள் ஆகிய மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளும் 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் எதிர்மறையான வளர்ச்சி விகிதங்களைப் பதிவு செய்தன. 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 8.8 சதவிகிதத்தினைக் கொண்டிருந்த விவசாயத் துறையானது, முக்கியமாக நெல், காய்கறிகள், தேயிலை, கடல் மீன்பிடித்துறை மற்றும் விலங்கு உற்பத்தியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க சரிவின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 7.6 சதவிகிதம் சுருங்கியது. 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 12.4 சதவீத நேர்மறையான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் கைத்தொழில் துறை 7.1 சதவீதம் குறைந்துள்ளது. புடைவை உற்பத்தி,

**வரைபு 2.2 மொ.உ.உ வகுதி - முதல் அரையாண்டு 2022**




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

**அட்டவணை 2.1 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2015 நிலையான விலைகள்)**

ரூபா.மில்லியன்

| | துறை | 2019 | 2020 | 2021(ஆ) | முதல் காலாண்டு | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2021(ஆ) | 2022(அ) | 2021 | 2022 |
| | **விவசாயம், காடாக்கம், மீன்பிடி** | **949,582** | **936,020** | **959,434** | **473,867** | **437,937** | **8.8** | **-7.6** |
| 1 | தானியங்கள் (அரிசி நீங்கலாக) | 13,355 | 21,342 | 23,138 | 12,053 | 9,681 | 31.1 | -19.7 |
| 2 | நெல் | 112,919 | 121,663 | 115,242 | 58,580 | 44,539 | 6.6 | -24 |
| 3 | மரக்கறிகள் | 102,037 | 111,088 | 109,180 | 53,761 | 47,809 | -3.6 | -11.1 |
| 4 | கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய பருவ காலப் பயிர்கள் | 3,275 | 4,021 | 3,728 | 1,874 | 1,844 | (8.5) | -1.6 |
| 5 | பழங்கள் | 77,200 | 81,823 | 75,485 | 36,375 | 34,140 | 15.3 | -6.1 |
| 6 | எண்ணெய் பிரித்தெடுக்கும் பழங்கள் (தேங்காய், இளநீர், பாம் விதைகள்) | 102,800 | 92,066 | 102,202 | 48,989 | 55,586 | 9.8 | 13.5 |
| 7 | தேயிலை (பச்சை இலை) | 72,733 | 67,971 | 73,743 | 39,772 | 32,793 | 25.5 | -17.5 |
| 8 | ஏனைய குடிபான பயிர்ச் செய்கை (கோப்பி, கொக்கோ முதலியன) | 1,302 | 1,613 | 1,457 | 719 | 765 | -10.0 | 6.5 |
| 9 | நறுமண, வாசனைத் திரவியங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பயிர்கள். | 90,880 | 93,776 | 97,956 | 45,734 | 46,938 | 5.2 | 2.6 |
| 10 | இறப்பர் | 24,029 | 24,081 | 25,570 | 13,925 | 12,065 | 21.7 | -13.4 |
| 11 | ஏனைய குறுங்காலப் பயிர்கள் | 28,751 | 29,900 | 26,809 | 13,462 | 13,497 | -9.0 | 0.3 |
| 12 | விலங்கு வேளாண்மை | 90,284 | 86,907 | 98,339 | 47,676 | 44,570 | 15.6 | -6.5 |
| 13 | தாவர வளர்ச்சி | 772 | 625 | 792 | 305 | 362 | -4.5 | 18.8 |
| 14 | விவசாயத் துறைக்கான ஒத்தழைப்புச் செயற்பாடுகள் | 22,969 | 21,313 | 26,303 | 13,261 | 10,674 | 43.2 | -19.5 |

ரூபா.மில்லியன்

| | துறை | 2019 | 2020 | 2021(ஆ) | முதல் காலாண்டு | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2021(ஆ) | 2022(அ) | 2021 | 2022 |
| 15 | காடாக்கம், விறகு மற்றும் பலகை உற்பத்தி | 43,133 | 42,361 | 41,924 | 20,216 | 19,515 | 6.0 | -3.5 |
| 16 | சமுத்திர மீன் பிடிப்பு மற்றும் கடல் வாழ் உயிரின வளர்ப்பு | 141,700 | 111,307 | 112,825 | 55,919 | 51,752 | 0.2 | -7.5 |
| 17 | நன்நீர் மீன் பிடிப்பு மற்றும் நன்நீர் வாழ் உயிரின வளர்ப்பு | 21,444 | 24,166 | 24,742 | 11,247 | 11,406 | 16.1 | 1.4 |
| | **கைத்தொழில்** | 3,933,728 | 3,724,314 | 3,933,782 | 1,975,268 | 1,835,491 | 12.4 | -7.1 |
| 18 | கனிய அகழ்வும் சுரங்க செயற்பாடுகளும் | 318,658 | 284,079 | 288,061 | 143,973 | 125,075 | 9.0 | -13.1 |
| 19 | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தயாரிப்புகள் | 929,371 | 980,863 | 1,015,085 | 503,523 | 453,628 | 6.0 | -9.9 |
| 20 | பிடவை, தைக்கப்பட்ட ஆடை மற்றும் தோற்பொருட்களுடன் சம்பந்தப்பட்ட உற்பத்தி தயாரிப்புக்கள் | 469,028 | 416,312 | 475,377 | 244,469 | 266,632 | 23.7 | 9.1 |
| 21 | மரம் மற்றும் தயாரிப்புக்கள், தக்கை, தளபாடங்கள் நீங்கலாக | 36,321 | 32,831 | 35,580 | 16,741 | 14,726 | 17.3 | -12 |
| 22 | காகிதங்கள் உற்பத்தி, ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி மற்றும் அச்சடித்தல் | 54,064 | 51,896 | 56,812 | 31,322 | 30,003 | 19.7 | -4.2 |
| 23 | கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி தயாரிப்புக்கள் | 24,630 | 22,108 | 15,492 | 7,946 | 3,450 | -16.6 | -56.6 |
| 24 | இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்தி தயாரிப்புக்கள் | 90,144 | 92,157 | 95,794 | 48,929 | 43,488 | 16.6 | -11.1 |
| 25 | இறப்பர் மற்றும் பிளாஸ்திரிக் உற்பத்திகள் | 98,429 | 81,182 | 97,439 | 43,444 | 37,307 | 44.8 | -14.1 |
| 26 | ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி தயாரிப்புக்கள் | 107,062 | 102,685 | 119,988 | 59,602 | 50,690 | 25.3 | -15 |
| 27 | அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருத்தப்பட்ட உலோக உற்பத்தி தயாரிப்புகள் | 80,312 | 77,859 | 81,174 | 39,074 | 32,482 | 20.6 | -16.9 |
| 28 | இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உற்பத்திகள் | 66,114 | 65,187 | 73,090 | 28,450 | 27,640 | 18.4 | -2.8 |
| 29 | தளபாட உற்பத்திகள் | 95,470 | 81,651 | 82,696 | 47,970 | 44,751 | 18.0 | -6.7 |
| 30 | ஏனைய தயாரிப்புகள், உபகரணங்கள், சானங்கள் பொறுத்தல் மற்றும் பழுது பார்த்தல் | 96,432 | 87,586 | 101,050 | 51,298 | 48,028 | 26.5 | -6.4 |
| 31 | மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 184,041 | 180,176 | 187,763 | 90,613 | 92,870 | 0.1 | 2.5 |
| 32 | நீர் சேகரிப்பு, துப்புரவாக்கல் மற்றும் விநியோகம் | 14,701 | 15,431 | 11,332 | 5,810 | 6,368 | (27.5) | 9.6 |
| 33 | கழிவு நீர், கழிவு அகற்றல் செயற்பாடுகள் | 29,253 | 28,960 | 27,992 | 12,935 | 12,794 | (7.1) | -1.1 |
| 34 | நிர்மாணம் | 1,239,700 | 1,123,351 | 1,169,059 | 599,169 | 545,559 | 12.4 | -8.9 |
| | **சேவைகள்** | 7,307,036 | 7,165,986 | 7,405,262 | 3,580,336 | 3,559,173 | 5.6 | -0.6 |
| 35 | மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 1,636,752 | 1,650,889 | 1,678,813 | 836,018 | 847,013 | 2.5 | 1.3 |
| 36 | களஞ்சிய சாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் நபர்கள் போக்குவரத்து | 1,398,230 | 1,313,312 | 1,324,646 | 662,196 | 656,318 | 8.9 | -0.9 |
| 37 | தபால், கூரியர்/ விரைவுத் தபால் செயற்பாடுகள் | 17,099 | 17,620 | 18,714 | 8,950 | 9,614 | 8.6 | 7.4 |
| 38 | தங்குமிடம், உணவு மற்றும் குடிபான சேவை செயற்பாடுகள் | 216,976 | 128,556 | 130,474 | 66,185 | 84,955 | -7.1 | 28.4 |
| 39 | நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஒளிபரப்புச் செயற்பாடுகள், ஒலி/ ஒளி தயாரிப்புக்கள் | 42,752 | 43,841 | 42,161 | 23,601 | 21,579 | 0.0 | -8.6 |
| 40 | தொலைத்தொடர்பு | 103,325 | 118,845 | 138,238 | 68,291 | 73,952 | 19.3 | 8.3 |
| 41 | தகவல் தொ.நு. நிகழ்ச்சித் திட்ட மதியுரை மற்றும் இணைச் செயற்பாடுகள் | 175,634 | 194,893 | 243,971 | 120,298 | 124,751 | 22.6 | 3.7 |
| 42 | நிதிச் சேவை செயற்பாடுகள் மற்றும் துணை நிதிச் சேவைகள் | 510,367 | 557,357 | 597,267 | 293,758 | 258,452 | 8.1 | -12 |
| 43 | காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு | 120,550 | 117,075 | 125,326 | 57,833 | 51,739 | 10.0 | -10.5 |
| 44 | வதிவிட உரித்து உள்ளடங்களாக ஆதன விற்பனை | 610,231 | 604,259 | 630,619 | 302,470 | 300,914 | 5.5 | -0.5 |
| 45 | தொழில்வாய்மை சேவைகள் | 297,462 | 287,781 | 301,890 | 128,181 | 118,616 | 8.0 | -7.5 |
| 46 | பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூகப் பாதுகாப்பு | 605,938 | 616,176 | 626,013 | 291,075 | 299,444 | 1.2 | 2.9 |
| 47 | கல்வி | 283,605 | 284,751 | 290,487 | 149,433 | 153,772 | 6.5 | 2.9 |
| 48 | மனித நல செயற்பாடுகள், வதிவிடப் பராமரிப்பு மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள் | 235,136 | 246,735 | 260,499 | 114,101 | 109,246 | 3.3 | -4.3 |
| 49 | ஏனைய தனிப்பட்ட சேவைகள் செயற்பாடுகள் | 1,052,980 | 983,900 | 996,144 | 457,945 | 448,808 | 3.9 | -2 |
| | **மொத்த பெறுமதி சேர்க்கப்பட்டவை, அடிப்படை விலைகளில்** | 12,190,346 | 11,826,320 | 12,298,479 | 6,029,470 | 5,832,601 | 8.0 | -3.3 |
| | **(+) பொருட்கள் மீதான வரிகள் கழி - மானியங்கள்** | 1,015,930 | 921,395 | 873,323 | 529,305 | 412,614 | 27.7 | -22 |
| | **மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) சந்தை விலைகளில்** | 13,206,276 | 12,747,715 | 13,171,802 | 6,558,775 | 6,245,215 | 9.3 | -4.8 |

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
(அ) திருத்தப்பட்ட
(ஆ) தற்காலிகமானது

ஆடைஅணிகலன் மற்றும் தோல் பொருட்கள், மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல், மற்றும் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் விநியோகம் போன்ற துறைகளைத் தவிர, கைத்தொழில்துறையின் அனைத்து துணைத் துறைகளின் வீழ்ச்சியும் இந்த சரிவிற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தன. நிதிச் சேவை செயற்பாடுகள், காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியுதவி, மற்றும் தொழில்சார் சேவைகள் ஆகியவற்றின் சுருக்கம் காரணமாக, 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 5.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 இன் முதல் பாதியில் சேவைகள் துறையும் 0.6 சதவிகிதம் சுருங்கியது.

பெறுமதி சேர் நியதிகளில் பொருட்கள் மீதான வரிகளற்ற மானியங்கள் 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 27.7 சதவிகிதம் அதிகரித்ததை ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 22.0 சதவிகிதம் சரிவடைந்துள்ளது.

**விவசாயம்**

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.0 சதவீதத்தைக் கொண்டிருந்த விவசாயத் துறையானது, 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 8.8 சதவீதமாகவிருந்த நேர்மறை வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 7.6 சதவீத எதிர்மறை வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது முக்கியமாக

**வரைபு 2.3 விவசாயத்துறை வகுதி - முதல் அரையாண்டு 2022**




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

நெல், காய்கறிகள், தேயிலை, கடல் மீன்பிடித்துறை மற்றும் விலங்கு உற்பத்தி போன்ற துணைத் துறைகளின் சுருக்கத்தின் விளைவினால் ஏற்பட்ட சரிவு ஆகும். இருப்பினும், தெங்குப் பயிர்செய்கை, நறுமணப் பொருட்கள், நன்னீர் மீன்பிடித்தல், தாவரப் பல்பகுதியாக்கம், ஆண்டு முழுதும் பயிர்செய்யப்படும் பிற பயிர்கள் மற்றும் ஏனைய குடிபானப் பயிர்கள் ஆகியவை நேர்மறையான வளர்ச்சியைப் பதிவு செய்தன.

**நெல்**

2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பதிவான 6.6 வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் நெல்லின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி 24.0 வீதத்தால் சுருங்கியது. மொத்த நெல் உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 5.1 மில்லியன் மெட்ரிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2022 இல் 2.9 மில்லியன் மெட்ரிக் தொன்களாக கூர்மையான வீழ்ச்சியைப் பதிவு செய்தது: 2021/22 பெரும்போக பருவத்தின் உற்பத்தி 1.9 மில்லியன் மெட்ரிக் தொன்களைப் பதிவுசெய்ததுடன் உரவகை மற்றும் இரசாயனப்பொருட்களின் விநியோகத்தில் பற்றாக்குறை காரணமாக 2022 சிறுபோக பருவத்தில் 1.0 மில்லியன் மெட்ரிக் தொன்களைக் கொண்டிருக்கும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2020/21 பெரும்போக பருவத்தில் 770,240 ஹெக்ரெயார்களுடன் ஒப்பிடுகையில் 2021/22 பெரும்போக பருவத்தில் மொத்த விதைப்பு 775,846 ஹெக்ரெயார்களாக அதிகரித்துள்ளது.

**தேயிலை, இரப்பர் மற்றும் தென்னை**

தேயிலை மற்றும் இரப்பர் உப துறைகளின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி முறையே 17.5 சதவீதமாகவும் 13.4 சதவீதமாகவும குறைந்துள்ள அதே சமயம், 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, 2022 இன் முதல் பாதியில் எண்ணெய்ப் பயிர்களின் உப துறை 13.5 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தேயிலை உற்பத்தி 192.4 மில்லியன் கிலோவாக இருந்தது, 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 234.7 மில்லியன் கிலோவுடன் ஒப்பிடும்போது இது 18.0 சதவீத வீழ்ச்சியாகும். இதற்கான முக்கிய காரணங்கள் இரசாயன உரத்தை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து விவசாய உரங்களின் விலை உயர்வடைந்தமையும் இர்'யா-உக்ரைன் மோதல் மற்றும் ரூபாயின் பாரிய பெறுமானத்தேய்வு என்பனவாகும். எவ்வாறாயினும், ரூபாயின் பெறுமதி தேய்வு மற்றும் உலகளாவிய பொருட்களின் விலை உயர்வு காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கொழும்பு தேயிலை ஏலத்தில் மாதாந்த சராசரி தேயிலை விலை கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 1,617.70 வரை 153.5 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேபோன்று, அந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட பூஞ்சை இலை உதிர்வு நோயின் தாக்கம் காரணமாக முதல் எட்டு மாதங்களில் இரப்பர் உற்பத்தி 13.8 சதவீதம் சரிந்து 48.5 மில்லியன் கிலோ கிராமைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாயின் செங்குத்தான சரிவு காரணமாக, கொழும்பு இரப்பர் ஏலத்தில் லேற்றெக்ஸ் க்ரீப் 1எக்ஸ் இன்

சராசரி விலை 2021 இன் இறுதியில் ரூபா 700.25 இலிருந்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 814.00 வரை 16.2 சதவீதத்தினால் அதிகரித்தது. தேங்காய் உற்பத்தியைப் பொறுத்தவரை, 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 2,035.2 மில்லியன் காய்களைப் பதிவுசெய்த அதேவேளை, 2022 ஆம் ஆண்டில் நிலவிய சாதகமான காலநிலை காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 12.3 சதவீதம் அதிகரித்து 2,284.6 மில்லியன் காய்களைப் பதிவுசெய்தது.

### தானியவகை, காய்கறிகள், பழவகைகள், நறுமணப்பொருட்கள் மற்றும் மருந்தாக்கப் பயிர்கள்

2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் முக்கியமாக உரத் தட்டுப்பாடு மற்றும் பிறவற்றின் காரணமாக பெறுமதி சேர் அடிப்படையில் தானியங்களின் உப துறையின் வளர்ச்சி 19.7 சதவிகிதம் சுருங்கியது. இதேபோல், 2022 முதல் பாதியில் காய்கறிகள் மற்றும் பழங்களின் வளர்ச்சி முறையே 11.1 சதவீதமாகவும் 6.1 சதவீதமாகவும் குறைந்துள்ளது. வாசனைத் திரவியங்கள், நறுமணப் பொருட்கள், மருந்து மற்றும் மருந்தாக்கப்பயிர்களின் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி, 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 5.2 சதவிகித வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 2.6 சதவிகிதத்தினால் மாத்திரம் அதிகரித்துள்ளது.

### மீன்பிடி மற்றும் கால்நடைத்துறை

பெறுமதி சேர் நியதியில், கடல் மீன்பிடி மற்றும் கடல் மீன்வளர்ப்பு உப துறையானது 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 0.2 சதவிகிதம் என்ற சிறிய விரிவாக்கத்துடன் ஒப்பிடும்போது, 2022 இன் முதல் பாதியில் 7.5 சதவிகிதம் சுருங்கியது. எவ்வாறாயினும், நன்னீர் மீன்பிடித்தல் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு துணைத் துறையானது 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 16.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 இன் முதல் பாதியில் 1.4 சதவீதத்தினால் விரிவடைந்தது. 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 284.2 மெட்ரிக் தொன்னாக இருந்த மொத்த மீன் உற்பத்தி 9.7 சதவீதத்தினால் குறைவடைந்து 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 256.6 மெட்ரிக் தொன்களைப் பதிவுசெய்தது. 2021 இன் முதல் பாதியில் 15.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 2022 முதல் பாதியில் விலங்கு உற்பத்தி உபதுறை பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையில், 6.5 சதவீதத்தினால் குறைந்துள்ளது.

### கைத்தொழில் மற்றும் தயாரிப்புத்துறை

வுநந 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 12.4 வீதமான நேர்மறை வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 7.1 சதவிகித எதிர்மறையான வளர்ச்சியை கைத்தொழில்துறை பதிவு

**வரைபு 2.4 கைத்தொழில் துறை வகுதி - முதல் அரையாண்டு 2022**




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

செய்துள்ளது. கட்டுமானம் (8.9 சதவீதம்), உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி (9.9 சதவீதம்) மற்றும் சுரங்கம் மற்றும் அகழ்வு (13.1 சதவீதம்) ஆகியவற்றின் வீழ்ச்சி இதற்கு முக்கிய காரணமாகும். உலோகம் அல்லாத பிற கனிமப் பொருட்களின் உற்பத்தி (15.0 சதவீதம்), இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்துப் பொருட்கள் (11.1 சதவீதம்), இரப்பர் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களின் உற்பத்தி (14.1 சதவீதம்) மற்றும் பிற உற்பத்தி, பழுதுபார்ப்பு மற்றும் நிறுவல் போன்ற துணைத் துறைகள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் (6.4 சதவீதம்) 2022 முதல் பாதியில் சுருக்கமடைந்துள்ளன. இதேபோல், அடிப்படை உலோகங்கள் மற்றும் புனையப்பட்ட உலோகப் பொருட்களின் உற்பத்தி (16.9 சதவீதம்), நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தி (56.6 சதவீதம்), தளபாடங்களின் உற்பத்தி (6.7 சதவீதம்), தளபாடங்கள் தவிர்ந்த மரம் மற்றும் மரச்சாமான்கள் உற்பத்தி (12.0 சதவீதம்) காகிதப்

**வரைபு 2.5 உற்பத்தித்துறை வகுதி - முதல் அரையாண்டு 2022**




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

பொருட்களின் உற்பத்தி, ஊடகத் தயாரிப்புகளின அச்சிடுதல் மற்றும் மீளுருவாக்கம் (4.2 சதவீதம்), இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி (2.8 சதவீதம்) மற்றும் கழிவுநீர், கழிவுகள், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் (1.1 சதவீதம்) ஆகியவை 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. எவ்வாறாயினும், புடைவை உற்பத்தி, ஆடை மற்றும் தோல் தொடர்பான

பொருட்கள் (9.1 சதவீதம்), நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் (9.6 சதவீதம்) ஆகியவை 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பின்னடைவினைப் பதிவு செய்துள்ளன.

மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல் 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் மதிப்பு கூட்டப்பட்ட அடிப்படையில் 2.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 11,107 கிகா வொட்களாக இருந்த மொத்த மின் உற்பத்தி, 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 3.3 சதவீதத்தினால் சரிவடைந்து 10,744 கிகா வொட்களாக இருந்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் தொழிற்சாலைகளுக்கான மின்சார விற்பனையானது, முக்கியமாக எரிபொருள் மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறையுடன் தொழில்துறை நடவடிக்கைகளின் மந்தநிலை காரணமாக 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில 6.9 சதவிகிதத்தினால் குறைவடைந்து 2,957 கிகா வொட்களைப் பதிவுசெய்தது. நீரியல்:அனல் (எரிபொருள்): வெப்பம் (நிலக்கரி): மரபுசாரா புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் காற்றலை ஆகியவற்றின் உற்பத்திக் கலவையானது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 28:18:38:16 எனும் விகிதங்களுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 28:19:37:16 என்ற அளவில் ஓரளவு பாதகமான இயக்கத்தைக் காட்டியது.

**சேவைகள்**

சேவைகள் துறையானது, 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 5.6 சதவிகித வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், முக்கியமாக நிதிச் சேவை நடவடிக்கைகள் மற்றும் துணை நிதிச் சேவைகள் (12.0 சதவீதம்), காப்புறுதி, மீள்காப்புறுதி, மற்றும் ஓய்வூதிய நிதி (10.5 சதவீதம்), தொழில்சார் சேவைகள் (7.5 சதவீதம்) ஆகியவற்றின் சுருக்கம் காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 0.6 சதவிகிதத்தினால் சுருங்கியது. சேமிப்புக்கிடங்கு உள்ளடங்கலாக போக்குவரத்து (0.9 சதவீதம்), வசிப்பிடத்தின் உரிமை உட்பட நிலைச் சொத்து (காணி விற்பனை)செயற்பாடுகள் (0.5 சதவீதம்), பிற தனிப்பட்ட சேவை நடவடிக்கைகள் (2.0 சதவீதம்), மனித சுகாதார செயற்பாடுகள், குடியிருப்பு பராமரிப்பு (4.3 சதவீதம்) மற்றும் நிரலாக்க மற்றும் ஒளிபரப்பு போன்ற துணைத் துறைகள் செயல்பாடுகள் (8.6 சதவீதம்) 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் சுருங்கியது. இருப்பினும், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் (1.3 சதவீதம்), தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் சேவை நடவடிக்கைகள் (28.4 சதவீதம்), பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு (2.9 சதவீதம்), தகவல் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் (3.7 சதவீதம்), கல்வி (2.9 சதவீதம்), தொலைத்தொடர்பு (8.3 சதவீதம்), மற்றும் அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் (7.4 சதவீதம்) 2022 முதல் பாதியில் வளரச்சியடைந்தன.

**மொத்த மற்றும் சில்லறை விற்பனை, சரக்கு போக்குவரத்து, கிடங்கு மற்றும் பயணிகள் சேவைகள்**

பெறுமதி சேர் நியதிகளில், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 2.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 1.3 சதவீதத்தால் விரிவடைந்துள்ளது, 2021 இன் முதல் பாதியில் 8.9 சதவீத விரிவாக்கத்தினைக் கொண்டிருந்த போக்குவரத்துத் துறை 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 0.9 சதவீத எதிர்மறை வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் புதிய வாகனப் பதிவுகளின் மொத்த எண்ணிக்கையானது, 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் 25,505 எனும் எண்ணிக்கையை விட 34.6 சதவீதம் குறைந்து 16,690 எனும் எண்ணிக்கையைக் கொண்டிருந்தது. அந்நிய செலாவணி திரவத்தன்மையை சமாளிப்பதற்காக அரசாங்கம் விதித்துள்ள வாகனங்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் இதற்கு முக்கிய காரணமாகும்.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மோட்டார் கார்களின் பதிவு 60.7 சதவீதத்தால் குறைந்துள்ள அதே நேரத்தில் முச்சக்கர வண்டிகள், சரக்கு போக்குவரத்து வாகனங்கள் மற்றும் தரை வாகனங்களின் பதிவு முறையே 98.5 சதவிகிதம், 48.7 சதவிகிதம் மற்றும் 43.9 சதவிகிதம் குறைந்துள்ளது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மோட்டார் சைக்கிள்கள், பேருந்துகள் மற்றும் இரட்டை நோக்குடைய வாகனங்களின் பதிவு முறையே 17.2 சதவீதம், 13.9 சதவீதம் மற்றும் 13.8 சதவீதம் என்றவாறு அதிகரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கையாளப்பட்ட மொத்த கொள்கலன்கள் 5.2 மில்லியன் இருபது அடி சமமான (ரீஈயூ) அலகுகளாக இருந்தது. இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 5.4 மில்லியன் (ரீஈயூ) அலகுகளுடன் ஒப்பிடும்போது 2.5 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. இதேபோல் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உள்நாட்டு, மீள்கப்பலேற்றல் மற்றும் மீளக்களஞ்சியப்படுத்தலுக்காக கையாளப்பட்ட கொள்கலன்கள் முறையே 11.0 சதவீதம், 0.8 சதவீதம் மற்றும் 0.4 சதவீதத்தினால் குறைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 82.2 மில்லியன் மெட்ரிக் தொன்களுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கையாளப்பட்ட மொத்த சரக்குகளின் எண்ணிக்கையும் 4.7 சதவீதத்தினால் குறைந்து 78.4 மில்லியன் மெட்ரிக் தொன்களைப் பதிவு செய்தது. 2022 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தில் வழங்கல் துறையிலான இடையூறுகள் இந்த சரிவிற்கு பங்களித்திருக்க முடியும்.

**தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள்**

தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் உப துறையானது, 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 7.1 சதவிகித சுருங்கலிலிருந்து 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 28.4 சதவிகிதம் விரிவடைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 526,232 சுற்றுலாப் பயணிகளாக அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 37,924 ஆகும். எனவே, 2021 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொ. 98.8 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 946.4 மில்லியனாக சுற்றுலாத்துறையின் வருவாய் அதிகரித்துள்ளது.

### தொலைதொடர்பு, தகவல் தொழில்நுட்ப ஆலோசனை, அஞ்சல் சேவைகள்

இந்தத் துறையில் வெளிநாட்டு நாணயம் தொடர்பான செலவுக் கூறுகளின் அதிகரிப்புக்கு மத்தியில் 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தொலைதொடர்பு உபதுறையின் பெறுமதி சேர் சேவைகள் 8.3 சதவீத மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. மின்சாரத் தடைகள், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் அந்நிய செலாவணி ஒழுங்குவிதிகள் உட்பட தொழிற்பாட்டுச் சூழலில் பல சவால்கள் இருந்தபோதிலும், 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தகவல் தொழில்நுட்ப நிரலாக்க ஆலோசனை மற்றும் தொடர்புடைய சேவைகள் 3.7 சதவீதம் விரிவடைந்துள்ளன. இதேபோல், 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தபால் மற்றும் கூரியர் சேவைகள் 7.4 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

**வரைபு 2.6 சேவைகள் துறை வகுதி - முதல் அரையாண்டு 2022**




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

**அட்டவணை 2.2 : சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்**

| சுட்டி | 2018 | 2019 | 2020 | 2021(அ) | 2021(அ) | 2022(அ) |
|---|---|---|---|---|---|---|
| **துறைமுக சேவைகள்** | | | | | **சன - செப்** | **சன - செப்** |
| வருகை தந்த கப்பல்கள் (இல) | 4,874 | 4,707 | 4,337 | 4,180 | 3,143 | 2,964 |
| மொத்த சரக்கு கையாடல் (மெ.தொ '000) | 104,934 | 106,979 | 102,908 | 109,369 | 82,235 | 78,411 |
| மொத்த கொள்கலன் கையாடல் (TEU '000) | 7,047 | 7,228 | 6,855 | 7,249 | 5,370 | 5,235 |
| இடைமாற்றம் செய்யப்பட்டவை (TEU '000)(ஆ) | 5,704 | 5,955 | 5,765 | 6,050 | 4,327 | 4,291 |
| **தொலைதொடர்பாடல் சேவை** | | | | | **சன - யூன்** | **சன - யூன்** |
| நிலையான தொலைபேசி இணைப்பு (எண். '000) | 2,485 | 2,300 | 2,613 | 1,264 | 1,252 | 1,266 |
| கையடக்க தொலைபேசி (எண். '000) | 32,528 | 32,884 | 28,739 | 29,959 | 29,049 | 29,561 |
| கம்பியல்லா தொலைபேசி (எண். '000) | 1,269 | 1,055 | 1,367 | 1,587 | 1,618 | 1,765 |
| இணைய, மின்னஞ்சல் வசதி (எண் '000) | 10,563 | 13,408 | 17,524 | 22,236 | 20,629 | 22,516 |
| **சுகாதாரத் துறை** | | | | | **சன - யூன்** | **சன - யூன்** |
| தனியார் வைத்தியசாலைகள் | 191 | 207 | 217 | 233 | 227 | 243 |
| அரசாங்க வைத்தியசாலைகள் | 612 | 603 | 609 | 618 | 609 | 617 |
| கட்டில்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 76,824 | 77,964 | 77,121 | 78,228 | 77,121 | 78,228 |
| வைத்தியர்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 19,692 | 18,130 | 19,615 | 18,992 | 18,992 | 20,209 |
| தாதிகள் எண்ணிக்கை (அரசாங்கம்) | 34,714 | 38,276 | 37,634 | 38,743 | 38,743 | 39,091 |
| **நிதித் துறை** | | | | | **2021 செப் இறுதி** | **2022 செப் இறுதி** |
| வங்கிக் கிளைகள், பிற விற்பனை நிலையங்கள் | 6,882 | 7,387 | 3,619 | 7,414 | 7,412 | 7,417 |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 43 | 42 | 40 | 39 | 39 | 37 |
| விசேட குத்தகைக் கம்பனிகள் | 5 | 4 | 3 | 3 | 3 | 2 |
| | | | | | **சன - யூன்** | **சன - யூன்** |
| பாவனையிலுள்ள கடன் அட்டைகள் | 1,710,671 | 1,854,103 | 1,984,525 | 2,054,985 | 22,045,716 | 2,082,685 |

**அட்டவணை 2.2 : சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்**

| சுட்டி | 2018 | 2019 | 2020 | 2021(அ) | 2021(அ) | 2022(அ) |
|---|---|---|---|---|---|---|
| **சுற்றுலாத்துறை** | | | | | **சன - செப்** | **சன - செப்** |
| சுற்றுலாப் பயணிகளின் வருகை | 2,333,796 | 1,913,702 | 507,704 | 194,495 | 37,924 | 526,232 |
| சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அடொ.மில்.) | 4,381 | 3,607 | 682 | 507 | 99 | 946 |
| அறை பயன்பாட்டு விகிதம் | 72.8 | த.இ. | 15.0 | 19 | த.இ. | த.இ. |
| **போக்குவரத்து சேவைகள் (புதிய பதிவு)** | | | | | **சன - செப்** | **சன - செப்** |
| பேருந்துகள் | 2,957 | 1,613 | 578 | 281 | 237 | 270 |
| கார்கள் | 80,776 | 38,232 | 21,021 | 3,495 | 2,905 | 1,141 |
| லொறிகள் (இ) | 16,931 | 3,738 | 3,941 | 4,432 | 3,241 | 1,663 |
| மோட்டார் சைக்கிள்கள் | 339,763 | 284,301 | 151,634 | 8,011 | 6,031 | 7,067 |
| முச்சக்கர வண்டிகள் | 20,063 | 15,490 | 7,150 | 2,093 | 2,080 | 32 |
| **நில வாகனங்கள் மற்றும் இழுவை வண்டிகள்** (ஈ) | 10,282 | 7,666 | 8,302 | 14,764 | 10,415 | 5,841 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள்புதுப்பிக்கப்பட்டமை உள்ளடங்கலாக
(இ) பிரத்தியேக நோக்கம் கொண்ட வாகனங்கள், மோட்டார் லொறி மற்றும் ஏனைய லொறிகள் உள்ளடங்கியுள்ளது.
(ஈ) நில வாகனங்கள், கைநில வாகனங்கள், இழுவை வண்டிகள் உள்ளடங்கலாக
த.இ. - தகவல் இல்லை

**அட்டவணை 2.3 : சுற்றுலாத் துறையின் செயலாற்றுகை**

| மாதம் | சுற்றுலாப் பயணிகளின் வருகை | | | | | சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்.) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022(அ) | 2018 | 2019 | 2020 | 2021(ஆ) | 2022(அ) |
| சனவரி | 238,924 | 244,239 | 228,434 | 1,682 | 82,327 | 448.5 | 460.3 | 307.0 | 4.4 | 148.0 |
| பெப்ரவரி | 235,618 | 252,033 | 207,507 | 3,366 | 96,507 | 442.3 | 475.0 | 278.9 | 8.8 | 173.6 |
| மார்ச் | 233,382 | 244,328 | 71,370 | 4,581 | 106,500 | 438.1 | 460.5 | 95.9 | 11.9 | 191.5 |
| ஏப்ரல் | 180,429 | 166,975 | - | 4,168 | 62,980 | 338.7 | 314.7 | - | 10.9 | 113.3 |
| மே | 129,466 | 37,802 | - | 1,497 | 30,207 | 243.0 | 71.2 | - | 3.9 | 54.3 |
| யூன் | 146,828 | 63,072 | - | 1,614 | 32,856 | 275.6 | 118.9 | - | 4.2 | 59.1 |
| யூலை | 217,829 | 115,701 | - | 2,429 | 47,293 | 408.9 | 218.1 | - | 6.3 | 85.1 |
| ஆகஸ்ட் | 200,359 | 143,587 | - | 5,040 | 37,760 | 376.1 | 270.6 | - | 13.1 | 67.9 |
| செப்தெம்பர் | 149,087 | 108,575 | - | 13,547 | 29,802 | 279.8 | 204.6 | - | 35.3 | 53.6 |
| ஒக்தோபர் | 153,123 | 118,743 | - | 22,771 | 42,026 | 287.4 | 223.8 | - | 59.3 | 75.6 |
| நவம்பர் | 195,582 | 176,984 | - | 44,294 | | 367.1 | 333.6 | - | 115.4 | |
| டிசெம்பர் | 253,169 | 241,663 | 393 | 89,506 | | 475.2 | 455.5 | 0.5 | 233.3 | |
| **மொத்தம்** | **2,333,796** | **1,913,702** | **507,704** | **194,495** | **568,258** | **4,380.7** | **3,606.8** | **682.4** | **506.9** | **1,022.0** |

மூலம் : இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை

(அ) தற்காலிகமானது

(ஆ) திருத்தியது

## நிதிச் சேவைகள், காப்புறுதி மற்றும் நிலைச்சொத்து (காணி விற்பனை) மற்றும் பிற சேவைகள்

நிதி மற்றும் நிதிசார் துணைத் துறையின் பெறுமதி சேர் சேவைகள் 2021 ஆம் ஆண்டின் முதல் பாதியில் அதிகரித்த 8.1 சதவிகிதத்தினை ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 12.0 சதவிகிதம் குறைந்துள்ளது. காப்புறுதி உப துறையும் 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 10.5 சதவிகிதம் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. காப்புறுதித் துறையின் மொத்த சொத்துக்கள் 2021, யூன் மாத இறுதியில் ரூபா 836.9 பில்லியனிலிருந்து 2022, யூன் மாத இறுதியில் ரூபா 902.7 பில்லியன் வரை 7.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

குடியிருப்பு உரிமை உட்பட நிலைச் சொத்து செயற்பாடுகள் 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 5.5 சதவிகிதம் அதிகரித்த நிலையில், 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 0.5 சதவிகிதம் சுருங்கியது. பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு மற்றும் கல்வி உப துறைகள் ஒவ்வொன்றும் 2.9 சதவிகிதம் விரிவடைந்துள்ள அதே நேரத்தில், தொழில்முறைச் சேவைகள் மற்றும் மனித சுகாதார நடவடிக்கைகள் மற்றும் வதிவிடப் பராமரிப்பு ஆகியவை 2022 முதல் பாதியில் முறையே 7.5 சதவிகிதம் மற்றும் 4.3 சதவிகிதத்தினால் குறைவடைந்துள்ளன.

### வேலையின்மை

2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பதிவு செய்யப்பட்ட 4.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2022 இன் இரண்டாவது காலாண்டில் வேலையின்மை விகிதம் 4.6 சதவீதமாக அதிகரித்துள்ளமை பொருளாதார நடவடிக்கைகளின் மந்தநிலையைப் பிரதிபலிக்கிறது. 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 51.2 சதவீதமாக இருந்த ஊழியப் படை பங்கேற்பு விகிதம் 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 50.1 சதவீதமாகக் குறைந்துள்ளது.

**வரைபு 2.7 தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம்**




மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

**அட்டவணை 2.4 : மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%)**

| துறை | 2017 | 2018 | 2019 | 2020 | 2021(ஆ) | முதல் காலாண்டு 2021(ஆ) | முதல் காலாண்டு 2022(அ) |
|---|---|---|---|---|---|---|---|
| **விவசாயம்** | **-1.8** | **6.3** | **0.5** | **-1.4** | **2.5** | **8.8** | **-7.6** |
| தேயிலை | 4.4 | 2.0 | -3.3 | -6.5 | 8.5 | 25.5 | -17.5 |
| நெல் | -9.7 | 45.2 | 6.2 | 7.7 | -5.3 | 6.6 | -24.0 |
| இறப்பர் | 4.3 | 1.8 | -7.8 | 0.2 | 6.2 | 21.7 | -13.4 |
| தானியங்கள் | -10.0 | 2.1 | -9.0 | 59.8 | 8.4 | 31.1 | -19.7 |
| மரக்கறிகள் | -5.5 | 0.5 | -2.9 | 8.9 | -1.7 | -3.6 | -11.1 |
| கால்நடை உற்பத்திகள் | 11.2 | 4.1 | -4.5 | -3.7 | 13.2 | 15.6 | -6.5 |
| காடாக்கம், விறகு | 12.0 | -13.6 | -3.3 | -1.8 | -1.0 | 6.0 | -3.5 |
| மீன்பிடி | 0.5 | 0.2 | -4.4 | -17.0 | 1.5 | 2.5 | -6.0 |
| **கைத்தொழில்** | **13.0** | **-1.1** | **-4.1** | **-5.3** | **5.6** | **12.4** | **-7.1** |
| அகழ்வு, சுரங்கமறுத்தல் | 11.7 | -2.7 | -1.2 | -10.9 | 1.4 | 9.0 | -13.1 |
| தயாரிப்புச் செயற்பாடுகள் | 4.8 | 3.8 | 2.0 | -2.6 | 1.2 | 14.6 | -6.2 |
| ஏனைய கைத்தொழில்கள் | 4.6 | 7.1 | 4.3 | -1.5 | 0.02 | -2.7 | 2.4 |
| நிர்மாணம் | 27.3 | -8.0 | -14.8 | -9.4 | 4.1 | 12.4 | -8.9 |
| **சேவைகள்** | **3.6** | **4.3** | **2.9** | **-1.9** | **3.3** | **5.6** | **-0.6** |
| மொத்த, சில்லறை வர்த்தகம் | 3.8 | 4.7 | 3.6 | 0.9 | 1.7 | 2.5 | 1.3 |
| போக்குவரத்து, களஞ்சியசாலை | 3.3 | 2.1 | 2.0 | -6.1 | 0.9 | 8.9 | -0.9 |
| தங்குமிட வசதி, உணவுச் சேவைச் செயற்பாடுகள் | 3.1 | 5.1 | -6.0 | -40.8 | 1.5 | -7.1 | 28.4 |
| தகவல், தொடர்பாடல் | 11.1 | 7.2 | 12.0 | 11.2 | 18.7 | 18.6 | 3.8 |
| நிதி, காப்புறுதிச் செயற்பாடுகள் | 7.5 | 16.6 | 1.2 | 6.9 | 7.1 | 8.4 | -11.8 |
| ஆதன விற்பனை செயற்பாடுகள் | 7.3 | 5.6 | 5.1 | -1.0 | 4.4 | 5.5 | -0.5 |
| தொழிற்துறை சேவைகள் | 1.9 | 3.8 | 5.4 | -3.3 | 4.9 | 8.0 | -7.5 |
| கல்வி, தேகாரோக்கியம், சமூகப் பணிச் செயற்பாடுகள் | 5.4 | 1.4 | 4.6 | 2.5 | 3.7 | 5.1 | -0.2 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு | -4.3 | 1.9 | 0.8 | 1.7 | 1.6 | 1.2 | 2.9 |
| ஏனைய சேவைகள் (சுய சேவைகள் நீங்கலாக) | 2.9 | 1.5 | 2.0 | -6.6 | 1.2 | 3.9 | -2.0 |
| **மொ.உ.உ.** | **6.5** | **2.3** | **-0.2** | **-3.5** | **3.3** | **9.3** | **-4.8** |

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

(ஆ) திருத்தியது

## 2.3 நாணயத் துறை அபிவிருத்திகள்

2021, ஓகத்து மாதத்தில் கொள்கை விகிதங்களின் அதிகரிப்பிற்குப் பிறகு 2022, மார்ச்சு மாதத்தில் கொள்கை விகிதங்களை 100 அடிப்படை புள்ளிகளால் அதிகரிப்பதன் மூலம், மத்திய வங்கி தொடர்ந்து நாணயக் கொள்கையை இறுக்கியது. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கத்துடன் கொள்கை விகிதங்களைக் கணிசமானளவு உயர்த்தியதன் மூலம் 2022, ஏப்பிரலில் நாணயக் கொள்கை மேலும் இறுக்கப்பட்டது. 2022, ஏப்பிரலில் மத்திய வங்கி நிலையான வைப்பு வசதி விகிதம் (ளுனுகுசு) மற்றும் நிலையான கடன் வசதி விகிதம் (ளுடுகுசு) ஆகியவற்றினை முன்னெப்போதுமில்லாத வகையில், 700 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 13.5 மற்றும் 14.5 சதவீதமாக அதிகரித்த அதே நேரத்தில் நிலையான ஒதுக்க விகிதம் (ளுசுசு) 4.00 சதவீதத்தில் பராமரிக்கப்பட்டது. பணவீக்க எதிர்பார்ப்புகளின் பாதகமான தாக்கத்தினைக் கருத்தில் கொண்டு, 100 அடிப்படைப் புள்ளிகளால் கொள்கை விகிதங்களை அதிகரித்து, 2022 யூலையில் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மீண்டும் கடுமையாக்கியது.

**வரைபு 2.8 : விளைவு வீதங்கள், நாணய சராசரி, தனியார்த்துறை கடன் வளர்ச்சி**




மூலம் : இலங்கை மத்திய வங்கி




மூலம் : இலங்கை மத்திய வங்கி

2021 ஆம் ஆண்டின் இறுதியில் 9.87 சதவீதமாகக் காணப்பட்ட சராசரியாக நிறையளிக்கப்பட்ட கடன் விகிதம் (யுறுடுசு), 2022, ஓகத்து இறுதியில் 16.86 சதவீதமாக அதிகரித்தது. அதே காலகட்டத்தில் சராசரியாக நிறையளிக்கப்பட்ட வைப்பு விகிதம் (யுறுனுசு) 4.94 சதவீதத்திலிருந்து 10.49 சதவீதமாக அதிகரித்துள்ளது. மேலும் 2021, திசெம்பர் இறுதியில் ரூபா 10,647 பில்லியனாகக் காணப்பட்ட விரிந்த பணம் (ஆ2டி) 12.6 சதவீதத்தினால் அதிகரித்து 2022, ஓகத்து மாத இறுதியில் ரூபா 11,987 பில்லியனினைப் பதிவுசெய்தது. தனியார் துறைக்கான கடன் 11 சதவீதம் அதிகரித்து 2022 ஓகத்து மாத இறுதியில் ரூபா 7,576.9 பில்லியனாக இருந்த அதேசமயம், 2021 ஆம் ஆண்டின் இதே காலத்தில் ரூபா 6,824.6 பில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்கத்திற்கான தேறிய கடனும் (ஹேஊபு) 2022, செத்தெம்பர் மாத இறுதியில் ரூபா 7,043.4 பில்லியனினைப் பதிவுசெய்து 2022 ஆம் ஆண்டில் 20.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

### பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (CCPI, 2013=100) ஆண்டுக்கு ஆண்டு (Y-o-Y) மாற்றத்தால் அளவிடப்படும் பிரதான பணவீக்கம் 2021 செத்தெம்பர் மாதத்தில் 5.7 சதவீதத்திலிருந்து 2022 செத்தெம்பரில் 69.8 சதவீதமாக அதிகரித்துள்ளது. லு-ழ-லு பணவீக்கத்திலான இந்த அதிகரிப்பு, கூர்மையான ரூபாயின் பாரிய பெறுமதித் தேய்வு மற்றும் இறக்குமதிகளுக்கான அந்நிய செலாவணியின் கடுமையான பற்றாக்குறை ஆகியவற்றினால் ஏற்பட்ட உணவு மற்றும் உணவு அல்லாத வகைகளின் மாதாந்த அதிகரிப்புகளால் உந்தப்பட்டது. அதன்படி, உணவுப் பணவீக்கம் (Y-o-Y). 2021 செத்தெம்பர் மாதத்தில் 10.0 சதவீதத்திலிருந்து 2022 செத்தெம்பரில் 94.9 சதவீதமாக அதிகரித்த அதே சமயம், உணவு

**வரைபு 2.9 தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப் பணவீக்க அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

அல்லாத பணவீக்கம் (Y-o-Y) 2021 செத்தெம்பர் மாதத்தில் 3.8 சதவீதத்திலிருந்து 2022, செத்தெம்பர் மாதத்தில் 57.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. இருப்பினும், 2022 ஒற்றோபரில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் இன் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் பணவீக்கம் 380 அடிப்படைப் புள்ளிகளால் 66.0 சதவீதம் வரை குறைந்துள்ளது.

**அட்டவணை 2.5 : தலைக்குரிய பணவீக்கம், மைய பணவீக்கம் மற்றும் உணவுப் பணவீக்கம் (அடிப்படை : 2013 = 100)**

| மாதம் | தலைக்குரிய பணவீக்கம் (%) | | | | மைய பணவீக்கம் (%) | | | | உணவுப் பணவீக்கம் (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | |
| | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 |
| சனவரி | 3.0 | 14.2 | 4.3 | 6.9 | 2.7 | 9.9 | 3.1 | 5.0 | 6.8 | 25.0 | 10.9 | 13.3 |
| பெப்ரவரி | 3.3 | 15.1 | 4.1 | 7.9 | 2.6 | 10.9 | 3.0 | 5.7 | 7.9 | 25.7 | 10.3 | 14.8 |
| மார்ச் | 4.1 | 18.7 | 4.0 | 9.1 | 3.1 | 13.0 | 3.0 | 6.5 | 9.6 | 30.2 | 10.1 | 16.5 |
| ஏப்பிரல் | 3.9 | 29.8 | 3.9 | 11.3 | 3.0 | 22.0 | 3.0 | 8.1 | 9.0 | 46.6 | 9.7 | 19.7 |
| மே | 4.5 | 39.1 | 3.9 | 14.2 | 3.2 | 28.4 | 3.0 | 12.2 | 9.9 | 57.4 | 9.7 | 23.7 |
| யூன் | 5.2 | 54.6 | 4.1 | 18.4 | 3.2 | 39.9 | 3.0 | 13.3 | 11.3 | 80.1 | 9.9 | 29.7 |
| யூலை | 5.7 | 60.8 | 4.2 | 23.1 | 3.7 | 44.3 | 3.1 | 16.7 | 11.0 | 90.9 | 9.9 | 36.5 |
| ஆகஸ்ட் | 6.0 | 64.3 | 4.3 | 28.0 | 4.1 | 46.6 | 3.2 | 20.3 | 11.5 | 93.7 | 9.8 | 43.5 |
| செப்தெம்பர் | 5.7 | 69.8 | 4.5 | 33.4 | 5.0 | 50.2 | 3.3 | 24.1 | 10.0 | 94.9 | 9.7 | 50.6 |
| ஒக்தோபர் | 7.6 | 66.0 | 4.8 | 38.3 | 6.3 | 49.7 | 3.6 | 27.8 | 12.8 | 85.6 | 10.0 | 56.7 |
| நவம்பர் | 9.9 | - | 5.3 | - | 7.0 | - | 4.0 | - | 17.5 | - | 10.6 | - |
| திசெம்பர் | 12.1 | - | 6.0 | - | 8.3 | - | 4.4 | - | 22.1 | - | 11.7 | - |

மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

### 2.4 பங்குச் சந்தை

2022 ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களில் நிலவிய சாதகமற்ற வர்த்தகச் சூழலுக்கு மத்தியில், சந்தைக் குறியீடுகளின் அசைவினால் அளவிடப்படும் பங்குச் சந்தை செயலாற்றுகை 2022, யூலை வரை கீழ்நோக்கிய போக்கைக் காட்டியது. அனைத்துப் பங்குகள் விலைச்சுட்டெண்ணானது ஆண்டின் தொடக்கத்தில் 12,226 இலிருந்து 38.7 சதவீதத்தினால் குறைந்து 2022 யூன் இறுதியில் 7,342 ஆகக் காணப்பட்ட அதே நேரத்தில் ளுஸ்ரீ ளுடு20இ 4,233 இலிருந்து 2,334 ஆக வீழ்ச்சியடைந்தது. 2022 இன் முதல் ஒன்பது மாதங்களை எடுத்துக்கொண்டால், அனைத்துப் பங்குகள் விலைச் சுட்டெண் சனவரி 19 ஆம் திகதி அன்று 13,462 ஆக உயர்வடைந்து ஏப்பிரல் 26 ஆம் திகதி அன்று 6,884 ஆக குறைந்த அதே நேரத்தில் ளுஸ்ரீ ளுடு20 சனவரி 24 ஆம் திகதி அன்று 4,627 புள்ளிகளையும், ஏப்பிரல் 26 ஆம் திகதி அன்று 2,125 புள்ளிகளையும் பதிவு செய்தது.

எவ்வாறாயினும், அனைத்துப் பங்குகள் விலைச் சுட்டெண் (ASPI) மற்றும் S&P SL20 ஆகிய இரண்டும் அதிகரிக்கத் தொடங்கியதால், 2022 யூலை தொடக்கத்தில் சந்தை மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியது. 2022 யூலை தொடக்கத்தில் 7,457 ஆக இருந்த ASPI மூன்றாம் காலாண்டின் முடிவில் 9,931 ஐ எட்டிய அதே நேரத்தில் S&P SL20 குறியீடு 2022, யூலை தொடக்கத்தில் 2,380 புள்ளிகளிலிருந்து மூன்றாம் காலாண்டின் முடிவில் 3,165 புள்ளிகளைப் பதிவு செய்தது.

சந்தை மூலதனமாக்கலினைப் பொறுத்தவரை, 2022, செத்தெம்பர் இறுதியில் ரூபா 4,341 ஆக அதிகரித்தது. 2021 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா 4,216, தொகையுடன் ஒப்பிடும்போது, இது 2.96 சதவிகித சிறியதொரு அதிகரிப்பாகும். 2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் உரிமைப்பங்குகளின் வெளிநாட்டுக் கொள்முதல், 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 28.6 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்ட தொகையை விட 68.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 48.3 பில்லியனினைப் பதிவுசெய்தது. மேலும் வெளிநாட்டு விற்பனைகள் 2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் ரூபா 33 பில்லியனினை மாத்திரம் கொண்டிருந்ததெனினும் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் வெளிநாட்டு விற்பனைகள் ரூபா 74 பில்லியனினை அடையப்பெற்றிருந்தன.

**அட்டவணை 2.6: மூலதனச் சந்தை அசைவுகள்**

| குறிகாட்டிகள் | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | செப் இறுதியில் 2021 | செப் இறுதியில் 2022(அ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனைத்து பங்கு விலைச்சுட்டெண் (1985 = 100) | 6,228 | 6,369 | 6,052 | 6,129 | 6,774 | 12,226 | 9,460 | 9,931 |
| S&P SL 20 குறிகாட்டி | 3,496 | 3,672 | 3,135 | 2,937 | 2,638 | 4,233 | 3,535 | 3,165 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ. பில்லியன்) | 2,745 | 2,899 | 2,840 | 3,599 | 2,961 | 5,489 | 4,216 | 4,341 |
| விற்பனை நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 295 | 296 | 297 | 289 | 283 | 296 | 287 | 294 |
| வருடாந்த புரள்வு (ரூ. பில்லியன்) | 176 | 221 | 200 | 171 | 397 | 1173 | 793 | 567 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூ. மில்லியன்) | 74,200 | 94,627 | 100,315 | 68,173 | 104,186 | 86,689 | 73,554 | 33,034 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 74,583 | 112,285 | 77,067 | 56,395 | 53,144 | 34,087 | 28,648 | 48,305 |
| தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | 384 | 17,658 | -23,248 | -11,778 | -51,041 | -52,602 | -44,906 | 15,271 |

மூலங்கள் : கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம், இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

## 2.5 வெளித்துறை அபிவிருத்திகள்

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தொழிலாளர்களின் பணம் அனுப்புதல் மற்றும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளுடன் அந்நியச் செலாவணி சந்தையில் ஏற்பட்ட இடையூறுகள் உட்பட குறைந்த வரவுகள் காரணமாக இலங்கையின் வெளித் துறை மந்தமான செயலாற்றுகையை வெளிப்படுத்தியது.

2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில், தொடர்ந்து ஏழாவது மாதமாக மாதாந்த இறக்குமதிச் செலவினம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் குறைந்துள்ள அதேவேளை 2022 ஏப்பிரலில் இருந்து ஏற்றுமதியிலிருந்தான மாதாந்த வருமானம் அதிகரித்தது. அதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 5,999 மில்லியனுடன் ஒப்பிடுகையில். 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொ. 4,104 மில்லியன்களாகச் சுருங்கியது, 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ 8,938.5 மில்லியன்களாக இருந்த வர்த்தகப் பற்றாக்குறை முக்கியமாக கைத்தொழில்துறை ஏற்றுமதியின் வருவாய் அதிகரிப்பின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொ. 9,981.1 மில்லியன் வரை 11.7 சதவீதத்தினால் அதிகரித்தது. கைத்தொழில்துறை ஏற்றுமதியின் வருவாய் 15.9 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 8,000.6 மில்லியினைப் பதிவுசெய்த அதே சமயம், விவசாய ஏற்றுமதி வருவாய் மற்றும் கனிம ஏற்றுமதி வருவாய் முறையே 2.4 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 1,939.8 மில்லியன்களாகவும், 28.6 சதவீதம் குறைந்து 24.1 மில்லியன்களாகவும் உள்ளது. கைத்தொழில்துறை ஏற்றுமதி வருவாய், மொத்த தொழில்துறை ஏற்றுமதி வருவாயில் 57.2 சதவீத பங்கினை வகித்த புடைவை மற்றும் ஆடை ஏற்றுமதியின் அதிக பங்களிப்புடன், 2022 முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 1 பில்லியனினைத் தாண்டி 4.6 பில்லியன் வருவாயை ஈட்டியது. இதற்கிடையில், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த இறக்குமதி செலவினம் ஐ.அ.டொ. 14,085.2 மில்லியனாகும். இது, 2022, ஓகத்து மாதத்தில் அவசரமற்ற இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக. 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 14,937.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 5.7 சதவிகித வீழ்ச்சியாகும். எவ்வாறாயினும் சில கட்டுப்பாடுகள் 2022 செத்தெம்பரில் தளர்த்தப்பட்டன. இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 8.0 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 9,497.4 மில்லியானாக இருந்ததுடன் நுகர்வோர் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் முறையே 25.7 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 2,146.7 மில்லியனாகவும் 25.1 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 2,433.0 மில்லியனாகவும் பதிவுசெய்யப்பட்டன.

2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொ. 2,927 மில்லியன் பற்றாக்குறையைப் பதிவுசெய்துள்ள ஒட்டுமொத்த கொடுப்பனவு மீதிகள் (BoP), 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 2,573 மில்லியன் பற்றாக்குறையைப் பதிவு செய்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வரவுகளாக ஐ.அ.டொ. 1,798 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளன. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் 2022 செத்தெம்பர்

**வரைபு 2.10 வர்த்தக மீதி, நாணயமாற்று வீத அசைவுகள்**







மூலம் : இலங்கை மத்திய வங்கி

மாத இறுதியில் ஐ.அ.டொ. 6.0 பில்லியன் ஆகக் காணப்பட்ட அதேவேளை, மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 2022, செத்தெம்பர் இறுதியில் உள்ளவாறு சீனாவின் ஐ.அ.டொ. 1.4 பில்லியன் ஏறயி வசதி உட்பட 1.8 பில்லியனினைக் கொண்டிருந்தது. 2022, நவம்பர் 04 அன்று உள்ளவாறு, அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி 44.9 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

### ஏற்றுமதிகள்

ஏற்றுமதிகளிலிருந்தான வருமானம் 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 8,938.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில், முக்கியமாக கைத்தொழில்துறை ஏற்றுமதிகளின் அதிகரித்த வருமானம் காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 11.7 சதவிகிதம் அதிகரித்து ஐ.அ.டொ. 9,981.1 மில்லியன்களைப் பதிவுசெய்தது. கைத்தொழில்துறை ஏற்றுமதி வருவாய் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 6,903.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 15.9 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 8,000.6 மில்லியன்களாக 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பதிவுசெய்யப்பட்டது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட அனைத்து முக்கிய ஏற்றுமதி சந்தைகளுக்கும் ஏற்றுமதிகள் மேம்படுத்தப்பட்டதன் மூலம், புடைவை மற்றும் ஆடைகளின் வருவாய் முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 3,893.3 மில்லியனிலிருந்து 17.6 சதவீதம் அதிகரித்து, ஐ.அ.டொ. 4,577.2 மில்லியனினை ஈட்டியுள்ளது. மேலும், பெற்றோலியப் பொருட்களின் வருவாய் 26.2 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 439.9 மில்லியன்களாகவும், இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் 16.7 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 427.9 மில்லியன்களாகவும், இரத்தினக்கல், வைரம் மற்றும் ஆபரணங்கள் 63.2 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 325.7 மில்லியன்களாகவும், இரசாயனப் பொருட்கள் 5.2 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 171.4 மில்லியன்களாகவும். மற்றும் அடிப்படை உலோகம் மற்றும் அவை சார்ந்த பொருட்கள் 2022 முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொ. 134.6 மில்லியனாக 20.9 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது. இதற்கிடையில், இரப்பர், தென்னை மற்றும் சிறு விவசாயப் பொருட்களில் இருந்து வருமானம் அதிகரித்துள்ளபோதிலும், தேயிலை, காய்கறிகள் மற்றும் பதனிடப்படாத புகையிலை ஆகியவற்றின் வருமானம் வீழ்ச்சியடைந்ததால், விவசாய ஏற்றுமதிகளின் வருமானம் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 1,986.7 மில்லியன்களாக இருந்து 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொ. 1,939.8 மில்லியன்களாக 2.4 சதவீதம் குறைந்துள்ளது. இரப்பர், தென்னை மற்றும் சிறு விவசாயப் பொருட்களின் வருமானம் முறையே 0.9 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 32.7 மில்லியனினையும் 0.4 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 314.0 மில்லியனினையும் 33.0 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 138.9 மில்லியனினையும் கொண்டிருந்தது. சராசரி தேயிலை விலைகள் அதிகமாக இருந்த போதிலும் தேயிலை ஏற்றுமதியின் அளவு குறைவதன் மூலம் தேயிலையின் வருவாய் 5.0 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 986.6 மில்லியனிலிருந்து ஐ.அ.டொ. 937.1 மில்லியனினைப் பதிவுசெய்தது. தாதுக்கள், கசடுகள் மற்றும் சாம்பல் ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட டைட்டானியம் தாதுக்கள் மற்றும் சிர்கோனியம் தாதுக்களின் வருவாய் குறைந்ததன் காரணமாக கனிம ஏற்றுமதி வருவாய் 28.6 சதவீதம் சரிந்து ஐ.அ.டொ. 24.1 மில்லியனினையே ஈட்டியுள்ளது. இதற்கிடையில், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மற்ற வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள் 11.2 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 16.6 மில்லியன் வருவாயை ஈட்டியுள்ளன.

**வரைபு 2.11 ஏற்றுமதிகளின் வகுதி**




மூலம் : இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2.7 : வெளிநாட்டு வர்த்தகம்**

ரூபா.மில்லியன்

| வகை | 2019 | 2020 | 2021 (ஆ) | சன - செப் 2021 (ஆ) | சன - செப் 2022 (அ) |
|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | 11,940 | 10,047 | 12,502 | 8,939 | 9,981 |
| **விவசாய ஏற்றுமதிகள்** | 2,462 | 2,336 | 2,730 | 1,987 | 1,940 |
| தேயிலை | 1,346 | 1,241 | 1,324 | 987 | 937 |
| பிற விவசாய உற்பத்திகள் | 1,116 | 1,095 | 1,405 | 1,000 | 1,003 |
| **கைத்தெழில் ஏற்றுமதிகள்** | 9,427 | 7,672 | 9,705 | 6,903 | 8,001 |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 5,597 | 4,423 | 5,435 | 3,893 | 4,577 |
| உணவு, குடிபானம், புகையிலை | 447 | 464 | 587 | 398 | 406 |
| இறப்பர் உற்பத்திகள் | 866 | 786 | 1,050 | 773 | 755 |
| இயந்திர மற்றும் உபகரணங்கள் | 400 | 338 | 501 | 367 | 428 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 521 | 374 | 506 | 349 | 440 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 1,596 | 1,288 | 1,625 | 1,124 | 1,395 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | 34 | 25 | 45 | 34 | 24 |
| **வகுக்கப்படாதவை** | 18 | 14 | 23 | 15 | 17 |
| **இறக்குமதிகள்** | 19,937 | 16055 | 20,637 | 14,938 | 14,085 |
| **நுகர்வுப் பொருட்கள்** | 3,957 | 3,402 | 3,849 | 2,890 | 2,147 |
| உணவும் குடிபானமும் | 1,427 | 1,554 | 1,667 | 1,262 | 1,228 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 2,530 | 1,847 | 2,182 | 1,628 | 919 |
| **இடைநிலைப் பொருட்கள்** | 11,369 | 9,077 | 12,309 | 8,791 | 9,497 |
| பெற்றோலியம் | 3,892 | 2,543 | 3,743 | 2,597 | 3,694 |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 2,909 | 2,335 | 3,067 | 2,206 | 2,407 |
| கோதுமை மற்றும் சோளம் | 346 | 384 | 418 | 291 | 189 |
| ஏனையவை | 4,222 | 3,814 | 5,081 | 3,697 | 3,207 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | 4,603 | 3,563 | 4,463 | 3,249 | 2,433 |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 2,490 | 2,176 | 2,810 | 2,049 | 1,571 |
| கட்டிடப் பொருட்கள் | 1,509 | 1,036 | 1,249 | 901 | 747 |
| போக்குவரத்து உபகரணம் | 597 | 348 | 399 | 295 | 113 |
| ஏனையவை | 8 | 3 | 6 | 4 | 3 |
| **வகுக்கப்படாதவை** | 8 | 14 | 17 | 8 | 8 |
| **வர்த்தகப் பற்றாக்குறை** | -7,997 | -6,008 | -8,136 | -5,999 | -4,104 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தியது

### இறக்குமதிகள்

இறக்குமதி செலவினங்களைப பொறுத்தவரையில், நுகர்வோர் மற்றும் முதலீட்டுப் பொருட்களிலிருந்து குறைந்த இறக்குமதி செலவினங்கள் பதிவாகியமையால், 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொ. 14,085.2 மில்லியனானது 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொ. 14,937.5 மில்லியனினை விட 5.7 சதவிகிதம் குறைவானதாகவுள்ளது. உணவு மற்றும் பானங்கள் மற்றும் உணவு அல்லாத நுகர்வோர் பொருட்கள் ஆகிய இரண்டின் இறக்குமதி செலவினங்களின் சரிவு காரணமாக நுகர்வோர் பொருட்களின் மீதான இறக்குமதி செலவு 25.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொ. 2,146.7 மில்லியன்களாகக் காணப்பட்டது. பாற்பொருட்கள், காய்கறிகள், சர்க்கரை மற்றும் தின்பண்டங்கள் மற்றும் கடல் உணவுகள் ஆகியவற்றின் இறக்குமதி செலவினங்கள் குறைந்துள்ளதால், உணவு மற்றும் பானங்கள் மீதான இறக்குமதி செலவு 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 1,261.7 மில்லியனிலிருந்து 2.7 சதவீதத்தினால் குறைந்து ஐ.அ.டொ. 1,227.7 மில்லியனினைப் பதிவுசெய்தது. தனிப்பட்ட வாகனங்கள், மருத்துவ மற்றும் மருந்தாக்கப்பொருட்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றின் இறக்குமதி செலவினங்களின் குறைவு காரணமாக உணவு அல்லாத நுகர்வோர் பொருட்களின் மீதான செலவு ஐ.அ.டொ. 919.0 மில்லியனாக 43.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், ஆடைகள் மற்றும் அணிகலன்கள் மீதான இறக்குமதி செலவு, ஐ.அ.டொ. 156.8 மில்லியனிலிருந்து 8.4 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 169.9 மில்லியனினைக் கொண்டிருந்தது. இதற்கிடையில், இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி செலவினம் 8,790.8 மில்லியனிலிருந்து ஐ.அ.டொ. 9,497.4 மில்லியனாக 8.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. முக்கியமாக எரிபொருள், புடைவை மற்றும் புடைவை சார்ந்த பொருட்கள் இறக்குமதிக்கான செலவு அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும். மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் சராசரி இறக்குமதி விலைகள் அதிகமாக இருப்பதால், இறக்குமதி அளவு குறைவதன் காரணமாக எரிபொருள் இறக்குமதிக்கான செலவினம் 42.3 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 3,694.3 மில்லியனினைக் கொண்டிருந்தது.

இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், கட்டுமானப் பொருட்கள், போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் பிற முதலீட்டு பொருட்கள் உட்பட அனைத்து துணைப்பிரிவுகளிலும் இறக்குமதி செலவினம் குறைந்ததன் காரணமாக முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொ. 2,433.0 மில்லியனாகக் காணப்பட்டது. 2021ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஐ.அ.டொ. 3,248.8 மில்லியனினை விட, இது 25.1 சதவீத வீழ்ச்சியாகும். இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதிச் செலவு 23.4 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 1,570.7 மில்லியன்களாகவும், கட்டுமானப் பொருட்கள் 17.0 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 747.1 மில்லியன்களாகவும், போக்குவரத்து உபகரணங்கள் 61.8 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 112.5 மில்லியனாகவும் உள்ளன.

**வரைபு 2.12 இறக்குமதிகளின் வகுதி**




மூலம் : இலங்கை மத்திய வங்கி

### சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பீடு

2021 ஆம் ஆண்டில் 37,924 நபர்களைப் பதிவு செய்த சுற்றுலாப் பயணிகளின் வருகையானது, இலங்கை கொவிட் -19 தொற்றுநோயிலிருந்து மீண்டதன் மூலம் 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 526,232 நபர்களாக அதிகரித்துள்ளது. அதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொ. 98.8 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சுற்றுலாத்துறையின் வருமானம் ஐ.அ.டொ. 946.4 மில்லியன்களாக அதிகரித்துள்ளது. அதேசமயம், 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 4,577.5 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் 43.8 சதவீதம் குறைந்து ஐ.அ.டொ. 2,574.1 மில்லியன்களாக உள்ளது.

### 2.6 உலகப் பொருளாதார முன்னோக்குகைகள்

உக்ரைன்-இரஷ்யா மோதல்கள், உயர்வான பணவீக்கத்தினால் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு நெருக்கடி மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் சீனா ஆகிய மூன்று பெரிய பொருளாதாரங்களின் மந்தநிலை ஆகியவற்றினாலும் கொவிட்-19 தொற்றுநோயின் பாதிப்பு காரணமாகவும் உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகள் மேலும் பாதிப்படைந்துள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாத வெளியீடான உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின்படி, உலகளாவிய வளர்ச்சி 2021 இல் 6.0 சதவீதத்திலிருந்து 2022 இல் 3.2 சதவீதமாகவும், 2023 இல் 2.7 சதவீதமாகவும் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2001 முதல், உலகளாவிய நிதி நெருக்கடியைத் தவிர்த்து, மிகப்பெரிய பொருளாதாரங்களில் குறிப்பிடத்தக்க மந்தநிலை காரணமாக பலவீனமான வளர்ச்சி விவரக்குறிப்பாகக் கருதப்படுகிறது. மேலும், முன்னேறிய பொருளாதாரங்களின் பணவீக்கம் 1982 இற்குப் பிறகு, 2022 ஆம் ஆண்டில் அதன் அதிகபட்ச விகிதத்தை எட்டியது. வாழ்க்கைச் செலவு கடுமையாக உயர்ந்து வருவது கொள்கை நிச்சயமற்ற தன்மை, கடன் நெருக்கடி, சமூக அமைதியின்மை, உணவுப்

பாதுகாப்பின்மை மற்றும் உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் வன்முறைக்கு வழிவகுத்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் 2022 - ஒற்றோபர் அறிக்கையின்படி, ஐக்கிய அமெரிக்க மற்றும் ஐரோப்பிய பொருளாதாரங்களின் மந்தமான நிலைமை காரணமாக விருத்தியுற்ற பொருளாதாரங்களின் வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் 5.2 சதவீதத்திலிருந்து 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 2.4 சதவீதம் மற்றும் 1.1 சதவீதமாக குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வளர்ச்சி உண்மையான செலவிடத்தக்க வருமானம் மற்றும் அதிக வட்டி விகிதங்கள் காரணமாகக 2021 இல் 5.7 சதவீதத்திலிருந்து 2022 இல் 1.6 சதவீதமாகவும், 2023 இல் 1.0 சதவீதமாகவும் குறையும் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய பிராந்தியத்தின் வளர்ச்சி 2021 இல் 5.2. சதவீதத்தில் இருந்து 2022 இல் 3.1 சதவீதமாகவும், 2023 இல் 0.5 சதவீதமாகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பானின் வளர்ச்சி 2021 மற்றும் 2022 ஆகிய இரண்டிலும் 1.7 சதவீதமாகவும், 2023ல் 1.6 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ச்சி வாய்ப்புகளில் இந்த வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்கள் அதிகரித்த எரிசக்தி விலைகள் மற்றும் அதிக பணவீக்கத்துடன் கொள்வனவு ஆற்றல் குறைகின்றமையாகும்.

வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் 2021 ஆம் ஆண்டில் 6.6 சதவீதத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டில் 3.7 சதவீத சரிவினை எதிர்நோக்கும் எனவும் 2023 ஆண்டிலும் அத்தகையை சதவீதத்தினையே பேணும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் ஆசியாவின் வளர்ச்சி, 2021 ஆம் ஆண்டில் 7.2 சதவீதத்தில் இருந்து 2022 ஆம் ஆண்டில் 4.4 சதவீதமாகக் குறைவுறறு 2023 ஆம் ஆண்டில் 4.9 சதவீதம் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 தொடர்பான முடக்குதல்கள் மற்றும் மோசமான சொத்துச் சந்தை நெருக்கடி காரணமாக சீனாவின் வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் 8.1 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 3.2 சதவீதமாகக் குறைந்து 2023 இல் மீண்டும் 4.4 சதவீதமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், இந்தியாவிற்கான வளர்ச்சிக் கணிப்பு

**அட்டவணை 2.8 : உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் - 2022 (கணிப்பு)**

| நாடு | மொ.உ.உ. வளர்ச்சி (வருடாந்த %) | பணவீக்கம் (%) | வேலையின்மை (%) | அரசிறை பற்றாக்குறை (மொ.உ.உ %) | தேறிய கடன் (மொ.உ.உ. %) |
|---|---|---|---|---|---|
| ஆர்ஜன்டீனா | 4.0 | 72.4 | 6.9 | -3.5 | 76.0 |
| அவுஸ்திரேலியா | 3.8 | 6.5 | 3.6 | -3.4 | 56.7 |
| பிரேசில் | 2.8 | 9.4 | 9.8 | -5.8 | 88.2 |
| கனடா | 3.3 | 6.9 | 5.3 | -2.2 | 102.2 |
| சிலி | 2.0 | 11.6 | 7.9 | 0.9 | 36.2 |
| சீனா | 3.2 | 2.2 | 4.2 | -8.9 | 76.9 |
| பிரான்ஸ் | 2.5 | 5.8 | 7.5 | -5.1 | 111.8 |
| ஜேர்மனி | 1.5 | 8.5 | 2.9 | -3.3 | 71.1 |
| கிரீஸ் | 5.2 | 9.2 | 12.6 | -4.4 | 177.6 |
| இந்தியா | 6.8 | 6.9 | - | -9.9 | 83.4 |
| இந்தோனேஷியா | 5.3 | 4.6 | 5.5 | -3.9 | 40.9 |
| இத்தாலி | 3.2 | 8.7 | 8.8 | -5.4 | 147.2 |
| ஜப்பான் | 1.7 | 2.0 | 2.6 | -7.9 | 263.9 |
| கொரியா | 2.6 | 5.5 | 3.0 | -1.8 | 54.1 |
| மலேசியா | 5.4 | 3.2 | 4.5 | -4.9 | 69.6 |
| மெக்சிகோ | 2.1 | 8.0 | 3.4 | -3.8 | 56.8 |
| ரஷ்யா | -3.4 | 13.8 | 4.0 | -2.3 | 16.2 |
| சிங்கப்பூர் | 3.0 | 5.5 | 2.1 | 1.4 | 141.1 |
| தென்னாபிரிக்கா | 2.1 | 7.5 | 34.6 | -4.9 | 68.0 |
| ஸ்பெயின் | 4.3 | 8.8 | 12.7 | -4.9 | 113.6 |
| தாய்லாந்து | 2.8 | 6.6 | 1.0 | -5.6 | 61.5 |
| ஐக்கிய இராச்சியம் | 3.6 | 9.1 | 3.8 | -4.3 | 87.0 |
| ஐக்கிய அமெரிக்கா | 1.6 | 8.1 | 3.7 | -4.0 | 122.1 |
| வியட்நாம் | 7.0 | 3.8 | 2.4 | -4.7 | 40.2 |

**மூலங்கள் : உலக பொருளாதார பார்வை, சர்வதேச நாணய நிதியம், 2022 ஒக்தோபர் அரசிறை கண்காணிப்பு, சர்வதேச நாணய நிதியம், 2022 ஒக்தோபர், நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி**

த.இ. - தகவல் இல்லை

சீனாவை விட அதிகமாக உள்ளது: 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வளர்ச்சி 6.8 சதவிகிதம் மற்றும் 2023 இல் 6.1 சதவிகிதம் ஆகும். இர்'யா உட்பட வளர்ந்து வரும் மற்றும் வளரும் ஐரோப்பாவின் வளர்ச்சி 2022 ஆம் ஆண்டில் 0.0 சதவிகிதமாகவும், 2023 இல் 0.6 சதவிகிதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் போர் மற்றும் இர்'யா மீதான சர்வதேச தடைகள் காரணமாக 2021 ஆம் ஆண்டில் 4.7 சதவீதமாக இருந்த இர்'யாவின் வளர்ச்சி 2022 மற்றும் 2023 களில் முறையே 3.4 சதவீதம் மற்றும் 2.3 சதவீதமாகச் சுருங்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சீன விநியோக நேரங்கள் குறைவதால் உலகளாவிய வர்த்தகம் 2021 ஆம் ஆண்டில் 10.1 சதவீதத்திலிருந்து 2022 இல் 4.3 சதவீதமாகவும், 2023 இல் 2.5 சதவீதமாகவும் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உலக வர்த்தக வளர்ச்சியில் மேலும் மந்தநிலைக்கு வழிவகுத்த 2021 சராசரியுடன் ஒப்பிடுகையில், 2022 செத்தெம்பரில் அமெரிக்க டொலர் பெயரளவு நியதிகள் அடிப்படையில் சுமார் 13 சதவீதம் உயர்ந்துள்ளது.
உக்ரைன் மீதான இர்'யாவின் படையெடுப்பின் காரணமாக, மசகெண்ணெய் விலை, மார்ச்சு மாத தொடக்கத்தில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ. 120 ஆகவும், 2022 பெப்பிரவரி மற்றும் ஓகத்து மாதங்களுக்கிடையில் 3.5 சதவீதமாகவும் அதிகரித்தது. இருப்பினும், ஐரோப்பாவும் அமெரிக்காவும் இர்'ய எண்ணெயை வாங்குவதைக் குறைத்ததால், இர்'யா சீனாவிற்கும் இந்தியாவிற்கும் தள்ளுபடி விகிதத்தில் எண்ணெயைத் திசை திருப்பியது. எண்ணெய் விலை 2022 இல் 41.4 சதவீதம் உயர்ந்து சராசரியாக பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ. 98.2 ஆக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாறாக, இது 2025 ஆம் ஆண்டில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ. 76.3 ஆகக் குறையும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

வழங்கலில் காணப்படும் தடைகள் ஐரோப்பாவில் இயற்கை எரிவாயு விலைகள் அதிகரிக்கக் காரணமாக உள்ளன. 2022, செத்தெம்பரில் ஐரோப்பாவிற்கான எரிவாயு ஏற்றுமதியை இரஷ்யா முந்தைய ஆண்டை விட 80 சதவீதம் குறைத்தது. எரிவாயுவிலிருந்து நிலக்கரிக்கு மாறுவதைப் பிரதிபலிப்பதன் மூலம், நிலக்கரி விலையானது வரலாற்று உயர் மட்டங்களைப் பதிவு செய்து, 61.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

# அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

# 03

### 3.1 மேன்நோக்கு

வுநாட்டின் மோசமான பொருளாதார சூழ்நிலையினால் ஏற்படும் விநியோகச் சங்கிலித் தடங்கல்கள் காரணமாக, 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் வர்த்தகச் செயல்பாடுகள் சீர்குலைந்துள்ளன. ரூபாயினது பாரிய பெறுமதி வீழ்ச்சியால் ஏற்பட்ட முன்னொருபோதுமில்லாத அழுத்தம், அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க நட்டங்களுக்கு பங்களிக்கும் ஒரு காரணியாக மாறியுள்ளது. 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் உத்தரவாதக் கடன் மீதான அரசிறை அபாயங்களும் குறிப்பிடத்தக்க வகையில் சாய்வடைந்துள்ளன. இரு அரச வங்கிககளும், அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் கடன்கள் தொடர்பாக வங்கி நடவடிக்கைகளின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தும் வகையில் அதிக கடன் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன. எனவே, அரசாங்க நிதிகளுக்கு ஏற்படும் அரசிறை அபாயங்களைக் குறைப்பதற்கு, முக்கிய அரசுடைமைத் தொழில்முயற்சிகளுக்கான செயல்திறனுடையதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான ஐந்தொகை மறுசீரமைப்பு மூலோபாயமொன்று விரைவாக செயல்படுத்தப்படல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட அரசிறை இடத்தின் மீதான கூடுதல் சுமையை குறைக்கின்ற அதே நேரத்தில், அரசுடைமைத் தொழில்முயற்சிகளுக்கான மறுசீரமைப்புக்களுக்கான தேவையை, நாட்டின் கடினமான பொருளாதார நிலைமைகள் ஏற்படுத்தியுள்ளன. அந்தவகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் நட்டங்களைக் குறைக்க எரிபொருள் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட எரிசக்தி விலைகள் சரிசெய்யப்பட்டுள்ளன. இதேவேளை, அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் செயல்திறனை மிகவும் வினைத்திறனுடனும் உற்பத்தித் திறனுடனும் மேம்படுத்தி பொதுத் திறைசேரியின் நிதிச் சுமையைக் குறைப்பதற்கான வழிமுறைகளை அடையாளம் காண விசேட பிரிவொன்றினை அமைச்சரவை நியமித்துள்ளது. மிக முக்கியமாக, 2022, ஓகத்து 08 ஆம் திகதிய 04.'.2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஊடாக அனைத்து பொது நிறுவனங்களின் செலவினங்களைக் குறைக்கும் முயற்சிகளையும் தாபன நோக்கு அறிக்கை உட்பட செயலாற்றுகை சார்ந்த உடன்படிக்கைகளை உருவாக்கவும் அரசாங்கம் முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது.

முக்கிய 52 அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் மொத்த நட்டம், 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 726.9 பில்லியனினைப் பதிவுசெய்துள்ளது. இதில் 31 நிறுவனங்கள் வரிக்கு முந்தைய இலாபமாக ரூபா 134.9 பில்லியனினையும் எஞ்சிய 21 நிறுவனங்கள் தேறிய நட்டமாக ரூபா 861.7 பில்லியனினையும் அடையப்பெற்றுள்ளன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகிய மூன்று நிறுவனங்களால் மொத்த நட்டமாகிய ரூபா 854.5 பில்லியனில் 99 சதவீதம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று நிறுவனங்களும் பல ஆண்டுகளாக நட்டத்தை சந்தித்து வருகின்றன. பெரிய நிதி அபாயங்களைக் குறைக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மற்றும் இலங்கை மின்சார சபைக்கான செலவு-பிரதிபலிப்புக்கான கடனை மீறுதல் உத்தரவாத விலை நிர்ணயம் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் மறுசீரமைப்பு இதற்கு வழிவகுத்துள்ளது. பொருளாதாரச் சுருக்கநிலைமைகள் காரணமாக அறவீடு.'.பங்கிலாபம் ஆகியவற்றின் சேகரிப்பு ஓரளவு குறைவடைந்து, 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மொத்த சேகரிப்பு ரூபா 17.8 பில்லியனினைப் பதிவுசெய்தது.

### 3.2 பத்து முக்கிய அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் மீளாய்வு

இந்தப் பிரிவு, நிதி மற்றும் காப்புறுதி, மின்சாரம், நீர் மற்றும் விமானப் போக்குவரத்து போன்றவற்றை உள்ளடக்கி, முக்கிய பத்து அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் செயலாற்றுகையை மீளாய்வு செய்கிறது.

#### இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சொத்துத் தளமானது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3,803.2 பில்லியனாக இருந்து 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியில் ரூபா 4,368.9 பில்லியனாக 14.9 சதவீதத்தினால் அதிகரித்து, நாட்டின் முன்னணி வர்த்தக வங்கியாக அதன் நிலையைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டுள்ளது. அதன் வைப்புத் தளம் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,866.8 பில்லியனாகவிருந்து, 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியில் ரூபா 3,264.3 பில்லியனாக 13.9 சதவீத அதிகரிப்பினை அடையப்பெற்றுள்ளது. மொத்தக் கடன்களுக்கான ஐஐஐ ஆம் நிலைக் கடன்களின் விகிதமானது (முன்னர் செயலாற்றுகையற்ற கடன் விகிதம்) 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 5.1 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்து மாத இறுதியில் 6.2 சதவிகிதம் அதிகரித்தது. இது பொருளாதார செயற்பாடுகளின் வீழ்ச்சி மற்றும் நிதித் துறைப் பாதிப்புக்களின் தாக்கத்தைக் பிரதிபலிப்பதாகவுள்ளது. இலங்கை வங்கியின் வரிக்கு முந்தைய இலாபம், 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 36.9 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 27.0 பில்லியனாகக் குறைவடைந்துள்ளது.

#### மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சொத்துத் தளம் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,647.6 பில்லியனாக் காணப்பட்டு 2022 ஓகத்து மாத இறுதியில் ரூபா 2,934 பில்லியனாக 10.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வங்கியின் வைப்புத் தொகை 2022 ஆம் ஆண்டின் ஓகத்து மாத இறுதியில் ரூபா 2,216.6 பில்லியனாக இருந்தது. இது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,034.7 பில்லியன் தொகையுடன் ஒப்பிடும்போது மிதமானவொரு அதிகரிப்பாகும். கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,798.7 பில்லியனாகவிருந்து 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியில் 5.9 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 1,693.1 பில்லியனினைப் பதிவுசெய்தது. செயலாற்றுகையற்ற கடன் விகிதம் 2022 ஓகத்து மாத இறுதியில் 4.8 சதவீதம் அதிகரித்துள்ளது. இது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 3.2 சதவீதமாகும். மக்கள் வங்கியானது 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் ரூபா 16.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரிக்கு முந்தைய இலாபமாக ரூபா 15.7 பில்லியனினைப் பதிவுசெய்துள்ளது.

#### தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் சொத்துத் தளம், 2022 ஓகத்து மாத இறுதியில் ரூபா 1,611.6 பில்லியன் ஆகும். இது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,579 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2.06 சதவீத அதிகரிப்பாகும். சொத்துக்களின் அதிகரிப்பு முக்கியமாக வாடிக்கையாளர் வைப்புக்களின் மூலம் நிதியளிக்கப்பட்டது. வாடிக்கையாளர் வைப்புக்கள் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 1,428.4 பில்லியன் தொகையிலிருந்து 2022 ஓகத்து மாத இறுதியில் ரூபா 1,459.8 பில்லியனாக 2.2 சதவீதத்தினால் சற்று அதிகரித்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், தேசிய சேமிப்பு வங்கியானது ரூபா 31.4 பில்லியன் பெறுமதியான வைப்புத்தொகையைத் திரட்டியுள்ளது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் பங்கு, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 538.9 பில்லியனிலிருந்து 2022 ஓகத்து மாத இறுதியில் ரூபா 561.5 பில்லியன் வரையான மிதமான அதிகரிப்பினைப் பெற்றுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி, 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 18.9 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 6.6 பில்லியன் தொகையை மாத்திரம் வரிக்கு முந்தைய இலாபமாக அடையப்பெற்றுள்ளது.

#### வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், 2021 ஆம் நிதியாண்டில் ரூபா 11.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 9.5 பில்லியனினை வரிக்கு முந்தைய இலாபமாகப் பதிவு செய்தது. மேலும், 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மொத்த வருவாய் ரூபா 44.7 பில்லியனாக மேம்பட்டுள்ளது. இது, 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 38.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 15.2 சதவீத அதிகரிப்பாகும். 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் நிலவிய சாதகமான காப்புறுதி சந்தை நிலைமைகளை மூலதனமாக்கியதன் மூலம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதன் சொத்துத் தளத்தை ரூபா 272.2 பில்லியனாக விரிவடையச் செய்துள்ள அதேசமயம், 2022 ஓகத்து மாத இறுதியில் ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத நிதிகள் முறையே ரூபா 156.1 பில்லியனாகவும் ரூபா 22.2 பில்லியனாகவும் காணப்பட்டன.

அட்டவணை 3.1 மின்னுற்பத்தி கொள்ளளவு வகுதி

| | 2021 சன - ஆகஸ் | | | 2022 சன - ஆகஸ் (தற்காலிக) | | |
|---|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | | | உற்பத்தி | |
| | கொள்திறன் (மெ.வோ) | மொத்த மின்னுற்பத்திச் சதவீதம் | கி.வோ. மணி | கொள்திறன் (மெ.வோ.) | மொத்த மின்னுற்பத்திச் சதவீதம் | கி.வோ. மணி |
| நீர் மின்னுற்பத்தி | 1,383 | 28 | 3,227 | 1,418 | 28 | 3,134 |
| அனல் மின்னுற்பத்தி - இ.மி.ச. எ.பொ. | 654 | 8 | 911 | 654 | 10 | 1,132 |
| அனல் மின்னுற்பத்தி - ஐ.பி.பி. எ.பொ. | 457 | 10 | 1,184 | 550 | 9 | 1,028 |
| காற்று - இ.மி.ச. | 31 | 2 | 204 | 104 | 2 | 246 |
| அனல் மின்னுற்பத்தி - நிலக்கரி | 900 | 38 | 4,440 | 900 | 37 | 4,095 |
| என்.சி.ஆர்.இ. மற்றும் காற்று | 699 | 12 | 1,363 | 729 | 11 | 1,209 |
| வீட்டுக் கூரை மீதுள்ள சூரிய மின்கலம் | 309 | 2 | 249 | 515 | 3 | 345 |
| **மொத்தம்** | **4,433** | **100** | **11,578** | **4,870** | **100** | **11,189** |

மூலம் : இலங்கை மின்சார சபை மற்றும் பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்

### இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சார சபையின் மொத்த வருமானமாக 2022 ஆம் ஆண்டின் ஓகத்து மாத இறுதியில் ரூபா 172.0 பில்லியன் ஈட்டப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 164.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது இது 4.6 சதவீத அதிகரிப்பாகும். உலக சந்தையில் நிலக்கரி மற்றும் எரிபொருளின் மிகப்பெரிய விலை ஏற்றத்தாழ்வுகள் மற்றும் ரூபாயின் பெறுமதி காரணமாக நேரடி உற்பத்தி செலவு, 2022 சனவரி முதல் ஓகத்து வரை ரூபா 104.7 பில்லியனில் இருந்து ரூபா 209.5 பில்லியன் வரை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. அதன்படி, சம்பந்தப்பட்ட காலத்தில் விற்பனைப் புள்ளியில் ஒரு அலகுக்கான ஆகுசெலவு கிலோவொட் ஒன்றிற்கு ரூபா 29.17 ஆக அதிகரித்த அதேசமயம் முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியில் கிலோவொட் ஒன்றிற்கு ரூபா 17.33 ஆகக் காணப்பட்டது. இவ்வாறாக, 2022 இன் முதல் எட்டு மாதங்களில் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 108.7 பில்லியன் பாரிய செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் தொடர்புடைய காலகட்டத்தில் இது ரூபா 1.9 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. இதற்கிடையில், பாரியளவில் எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட அந்நியச் செலாவணித் தட்டுப்பாடுகள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நிலையம் இயங்காமை ஆகியவற்றின் காரணமாக மின்சாரத் தேவையை சமாளிப்பதற்கு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் தினசரி மின்வெட்டுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் உற்பத்தி கலவையைப் பொறுத்தமட்டில், நீரியல்: அனல் (எரிபொருள்): அனல் (நிலக்கரி): மீளப் புதுப்பிக்கத்தக்க வலு மற்றும் காற்றலை எனும் விகிதம் 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தின் 28:18:38:16 உடன் ஒப்பிடும்போது, 28:19:37:16 ஆக மாறியுள்ளது.

இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டினதும் பாதகமான திரவநிலைகளைக் கருத்தில் கொண்டு, பொதுத் திறைசேரியானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இலங்கை மின்சார சபை செலுத்தவேண்டிய நிலுவையிலுள்ள கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஒரு உரிமைப்பங்கு உட்செலுத்தலாக இலங்கை மின்சார சபைக்கு 2022, ஓகத்து வரை ரூபா 80.0 பில்லியனினை வழங்கியுள்ளது. இருந்தபோதிலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன மின் உற்பத்தியாளர்களுக்கு இலங்கை மின்சார சபையிடம் நிலுவையிலுள்ள மொத்தக் கடப்பாடுகள், எரிபொருள் விலைகளின் அதிகரிப்பு காரணமாக 2022, ஓகத்து மாத இறுதியில் மீண்டும் ரூபா 148.1 பில்லியனினை எட்டியுள்ளது. மேலும், மேலதிகப் பற்று வசதி மற்றும் கடன்களின் அதிகரிப்பு காரணமாக, அரச வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் 2022 ஓகத்து மாத இறுதியில் ரூபா 168.1 பில்லியனாக அதிகரித்தது. அதேசமயம், கருத்திட்டக் கடன்கள் உட்பட வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகையானது 2022 ஓகத்து மாத இறுதியில் ரூபா 395.5 பில்லியனினைக் கொண்டிருந்தது.

செலவு-பிரதிபலிப்பு விலைச் சூத்திரங்கள் நடைமுறைப்படுத்தப்படாததன் காரணமாக இலங்கை மின்சார சபை எதிர்கொள்ளும் கடுமையான நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, நெறிப்படுத்துநர் என்றவகையில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது 2022 ஓகத்து முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து வாடிக்கையாளர் பிரிவினருக்கும் சராசரியாக 75 சதவிகிதம் மின்சாரக் கட்டணத்தை அதிகரித்தது.

### இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனம்

வு2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் இறக்குமதிகள் ஐ.அ.டொ. 2.2 பில்லியன்களாக அதிகரித்தது. சர்வதேச சந்தையின் சராசரி பிரெண்ட் மசகெண்ணெய் விலை 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ. 67 ஆக இருந்து 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொ. 105 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனைச் செலவானது, சர்வதேச எண்ணெய் விலையின் அதிகரித்து வரும் போக்குடன் மட்டுப்படுத்தப்பட்ட வழங்குநர்களிடமிருந்து அதிக விலைக்கு கொள்வனவு செய்ததமை காரணமாக 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 737.4 பில்லியனினைப் பதிவுசெய்தது. 2021 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் ரூபா 358.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது, இது 106 சதவீதத்தினாலான அதிகரிப்பாகும். நாட்டில் நிலவும் நிதிக் கொந்தளிப்பு காரணமாக வங்கிகளின் அதிகரித்த முறையில் காணப்படும் தீர்க்கப்படாத கடன் கடிதங்களுடன், பெற்றோலியப் பொருட்களின் போட்டித்தன்மை வாய்ந்த கொள்முதல் செயல்முறைகளில் குறுக்கீடு ஆகியவற்றினை இது பிரதிபலிக்கின்றது.

சர்வதேச எண்ணெய் விலைகளின் இந்த அதிகரித்து வரும் போக்கு மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறைவான விலைக்குப் பெற்றோலிய உற்பத்திகளை விற்க நேர்ந்தமை ஆகியவை 2022 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் கணிசமான நட்டத்தினை உருவாக்கியுள்ளது. எவ்வாறாயினும், செயல்பாட்டு நட்டத்தினையும் நிதிக் கட்டுப்பாடுகளையும் குறைப்பதற்கான ஒரு மூலோபாய நடவடிக்கையாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 2022 மே மாத இறுதியில் செலவு-

பிரதிபலிப்பு விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்தியது. விலைகள் அடிக்கடி சரி செய்யப்பட்டாலும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாத இறுதியில் ரூபா 52.0 பில்லியன் செயற்பாட்டு நட்டத்தினைப் பதிவுசெய்தது. 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 19.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது இத்தொகையானது பாரிய ஒரு அதிகரிப்பாகும்.

ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையின் அடிமட்டத்தை மோசமாகப் பாதித்தது. 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் நாணய மாற்று விகித தாக்கமானது, 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 44.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 546.0 பில்லியனினைப் பதிவுசெய்தது. இதேவேளை, அமெரிக்க டொலர் பெறுமதியில் கடன்களைத் தீர்க்க வேண்டிய அழுத்தத்துடன், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செலவு 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுக்கு ரூபா 57.6 பில்லியனாகவும் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 16.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 260 சதவீத அதிகரிப்பாகவும் காணப்பட்டது.

நாட்டின் நிதித்துறையிலான அபாயகரமான சூழ்நிலையின் பிரதிபலிப்பாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2022 ஓகத்து மாத இறுதியில் ரூபா 1,051.0 பில்லியன் திரட்டப்பட்ட நட்டமொன்றினைப் பதிவு செய்தது. இதன் விளைவாக 2022, ஓகத்து மாத இறுதியில் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றிற்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையாக ரூபா 1,042.0 பில்லியனினைப் பதிவுசெய்தது. மேலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிக்காக இந்தியக் கடன் திட்டத்திலிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 228.8 பில்லியனினை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டியுள்ளது.

மேலும், இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றின் பலவீனமான நிதி நிலைமை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகைக் கணக்கில் குவியத் தாக்க நெரிசலை ஏற்படுத்தியது. இரு நிறுவனங்களும் உள்ளடங்கலாக தீர்க்கப்படாத தொகை ரூபா 206.6 பில்லியன் ஆகும்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின படுகடன் அதிகரிப்பு அதன் எதிர்கால முதலீடுகளை திசைதிருப்பியது. உலக வழங்குநர்கள் சில்லறை விற்பனைத் தொழிற்பாடுகளுக்கு நுழைவதற்கும், உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் மீதான இரு உடைமையை அகற்றுவதற்கும், மற்றும் எரிசக்தித் துறையை தாராளமயமாக்குவதற்கும் பெற்றோலியப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம், 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதனுடன் இணைந்தவகையில், பெற்றோலியம் உற்பத்தி செய்யும் நாடுகளிலுள்ள நிறுவனங்களிடமிருந்து ஆர்வ வெளிப்படுத்துகைகளைக் கோருவதன் மூலம் இலங்கையில் எரிபொருள் சந்தையைத் திறக்க அரசாங்கம் கொள்கை வழிகாட்டலை வழங்கியுள்ளது. இதன்படி, நீண்ட கால உடன்படிக்கைகளின் கீழ் இலங்கையில் பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்தல், விநியோகம் செய்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்காக அவர்களின் நிதியைப் பயன்படுத்தி சாத்தியமானதொரு வணிக மாதிரியை நிலைநிறுத்துவதற்கான சாத்தியக்கூறுகளுக்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட நிறுவனம் இலங்கையின் அந்நிய செலாவணிச் சந்தையை சார்ந்திருக்காமல் ஒப்புக் கொள்ளப்பட்ட காலப்பகுதியொன்றிற்காக அதன் சொந்த அந்நிய செலாவணியைப் பயன்படுத்தி பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்யும் திறனைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அல்லது கூட்டுத்தாபனத்தினால் திறக்கப்படும் எரிபொருள் நிலையங்கள் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்ரொரேஜ் டெர்மினல்ஸ் லிமிட்டெட்டின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி, நாட்டிற்குள் பெற்றோலியப் பொருட்களின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் வசதிக் கட்டணத்தின் அடிப்படையில் நீண்ட கால ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

**இலங்கை துறைமுக அதிகார சபை**

இலங்கை துறைமுக அதிகாரசபை 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதம் வரை சுமார் 1,494,883 ரீஈயு கொள்கலன் சரக்குகளையும் 6,397,640 மெட்ரிக் தொன் வழமையான சரக்குகளையும் கையாண்டது.

2022 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த வருவாய் ரூபா 36.7 பில்லியன் ஆகவும் மொத்தச் செலவினம் ரூபா 20.6 பில்லியனாகவும் பதிவுசெய்யப்பட்டது. தொழிற்பாட்டு இலாபம் 16.1 பில்லியன் ஆகும். வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட இலாபமாகிய ரூபா 19.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், குறித்த காலப்பகுதியில் இலங்கை துறைமுக அதிகாரசபை பதிவு செய்த இலாபம் ரூபா 31.2 பில்லியன் ஆகும். மேலும், துறைமுக அதிகாரசபை 2022 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ரூபா 4.3 பில்லியன் அந்நியச் செலாவணி ஈட்டுகையைப் பதிவுசெய்தது.

### தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, தேசிய கொள்கைக்கு இணங்க சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது 2025 ஆம் ஆண்டிற்கான இலக்குகளை அடைவதற்கு, மக்களின் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான அவர்களின் கடமைப்பாட்டில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் அதேவேளை மொத்த குழாய் நீர் வழங்கல் 55.50 சதவீதப் பரப்பெல்லையைப் பூர்த்திசெய்துள்ளதுடன், பாதுகாப்பான நீர் வழங்கலில் 95.6 சதவீதத்தினையும் மற்றும் குழாய்வழி கழிவுநீரகற்றலில் 2.08 சதவீதத்தினையும் 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பூர்த்தி செய்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 17.2 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 18.3 பில்லியன் வருவாயைப் பதிவு செய்துள்ளது. இருப்பினும், இச் சபையானது 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 1.8 பில்லியன் தொழிற்பாட்டு நட்டத்தினைப் பதிவு செய்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் 2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் விற்பனைச் செலவு 7.6 சதவீதம் அதிகரித்து ரூபா 12.7 பில்லியனாகவும் மற்றும் நிருவாகச் செலவு 9.7 சதவீதம் அதிகரித்தமையும் ஆகும். எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் செலவு தொடர்பான பிற பிரச்சினைகள் இதற்கு வழிவகுத்துள்ளன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2022 ஆம் ஆண்டின் இந்த எட்டு மாத காலப்பகுதியில் 185,614 புதிய இணைப்புகளுடன் மொத்தமாக 2.83 மில்லியன் இணைப்புகளை வழங்க முடிந்தது. மேலும் 553 மில்லியன் கன மீற்றர் நீர் உற்பத்தியையும் 413 மில்லியன் கன மீற்றர் நீர் விற்பனையையும் மேற்கொள்ள முடிந்துள்ளது. இதேசமயம், வருவாய் அல்லாத நீர் சதவீதம் 25.43 சதவீதத்திலிருந்து 2022 ஓகத்து மாத இறுதியில் 24.88 சதவீதமாக அதிகரித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அபிவிருத்தி கருத்திட்டங்களின் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு பொதுத் திறைசேரி தனது ஒத்தழைப்பினை தொடர்ந்து வழங்கியுள்ள அதேசமயம் 2022 ஆம் ஆண்டின் ஓகத்து மாத இறுதி வரை, பொதுத் திறைசேரி மேற்கூறிய கருத்திட்டங்களுக்கு உரிமைப் பங்கின் பங்களிப்பாக ரூபா 12.9 பில்லியனினை வழங்கியுள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சமர்ப்பித்த முன்மொழிவின் அடிப்படையில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிக் கடப்பாடுகளைக் கருத்தில் கொண்டு செலவு-பிரதிபலிப்பு நீர் கட்டணத் திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது. இக் கட்டணத் திருத்தம் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்டதுடன், அத்தகைய கட்டணத் திருத்தங்கள் இதன் பிறகு ஆண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

### வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமானப்போக்குவரத்து சேவைகள் (இலங்கை) நிறுவனம்

இந்த நிறுவனமானது 2022 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ரூபா 10.4 பில்லியன் வானூர்தி அல்லாத வருவாய் உள்ளடங்கலாக ரூபா 13.7 பில்லியன் வருவாயினை ஈட்டியுள்ளது. முக்கியமாக தனிநபர் ஊதியம் மற்றும் மின் கட்டண உயர்வு காரணமாக சம்பந்தப்பட்ட காலத்தில் உரப்பட்ட மொத்தச் செலவு ரூபா 8.0 பில்லியனாக அதிகரித்தது. அதன்படி, வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமானப்போக்குவரத்து சேவைகள் நிறுவனம் 2022 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ரூபா 5.6 பில்லியன் தொழிற்பாட்டு இலாபத்தினைப் பதிவுசெய்தது. எனினும், நாணயப் பரிமாற்ற நட்டத்தின் தாக்கம் காரணமாக, வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவனம், 2022 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் வரிக்கு முந்தைய நட்டமாக ரூபா 1.1 பில்லியனினைக் கொண்டிருந்தது.

இதேசமயம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் முனையம் - 2 கருத்திட்ட நிர்மாணம் தற்போதைய இடைக்கால படுகடன் கொள்கையின்படி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 2022ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்கள் வரை ரூபா 170.4 பில்லியன் வருவாயைத் தோற்றுவித்துள்ளது. முக்கியமாக விமான எரிபொருள் விலையில் குறிப்பிடத்தக்க உயர்வு, விமான நிலையம், வான்போக்குவரத்து மார்க்கங்கள் மற்றும் பயணிகள் செலவுகள் மற்றும் நாணயப் பரிமாற்ற நட்டம் காரணமாக மொத்தச் செலவு ரூபா 284.2 பில்லியனினைப் பதிவுசெய்தது. விலைகளின் துரித அதிகரிப்பு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு 2022∴2023 நிதியாண்டின் முதல் அரைப் பகுதியில் ரூபா 113.8 பில்லியன் செயல்பாட்டு நட்டத்தினை ஏற்படுத்தியது.

பல ஆண்டுகளாகத் திரண்டுள்ள நட்டங்களைக் கருத்தில் கொண்டு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் அரசாங்கப் பங்குகளை விலக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கிணங்க, அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் மீள்கட்டமைப்புப் பிரிவின் உதவியுடன் மறுசீரமைப்பு செயல்முறையொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

## அட்டவணை 3.2 52 பிரதான அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் இலாபமீட்டல் தன்மை

ரூபா.மில்லியன்

| | தொழில்முயற்சிகள் | 2020* | 2021* | 2022.08.31 அன்றுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான (தற்காலிக) |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை மத்திய வங்கி | 23,552 | 43,190 | 27,033 |
| 2 | மக்கள் வங்கி | 21,227 | 30,387 | 15,697 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 15,645 | 28,555 | 6,575 |
| 4 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 790 | 621 | 185 |
| 5 | எச்.டி.எப்.சி. வங்கி | 1,381 | 1,199 | 390 |
| 6 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 2,061 | 1,927 | 431 |
| 7 | ஊழியர் நம்பிக்கை நிதிய சபை | 32,500 | 33,159 | 26,814 |
| 8 | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 7,972 | 11,725 | 9,459 |
| 9 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 8,866 | 5,936 | 2,583** |
| 10 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 265 | 310 | 95** |
| 11 | விவசாயம் மற்றும் கமநல காப்புறுதிச் சபை | 1,257 | 1,780 | 579 |
| 12 | இலங்கை மின்சார சபை | -60,486 | -21,450 | -108,670 |
| 13 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 2,371 | -82,208 | -632,044 |
| 14 | இலங்கைத் துறைமுக அதிகார சபை | 20,328 | 25,601 | 31,189** |
| 15 | தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை | 643 | -2,996 | -1,324 |
| 16 | விமான நிலைய, விமான சேவைகள் கம்பனி (இலங்கை) | -3,733 | -755 | -1,113** |
| 17 | வரையறுக்கப்பட்ட இலங்கை எயார்லைன் (அ) (2022 ஏப்பிரல் - செப்தெம்பர்) | -45,230 | -170,751 | -113,767 |
| 18 | இலங்கைப் போக்குவரத்துச் சபை | -2,105 | -3,143 | 2,114 |
| 19 | இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம் | -1,066 | -1,020 | -522 |
| 20 | மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம் | 261 | 250 | -41 |
| 21 | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் | -257 | 43 | 31 |
| 22 | மில்கோ லிமிட்டெட் | 230 | 330 | -412*** |
| 23 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | - | 158 | -14*** |
| 24 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | -150 | -232 | 22 |
| 25 | மக்கள் தோட்ட அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | -351 | -481 | 50 |
| 26 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 214 | 468 | 400 |
| 27 | சிலாபம் பெருந்தோட்டக் கம்பன | 283 | 511 | 321** |
| 28 | களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை கம்பனி | 43 | -15 | 247 |
| 29 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | 15 | 16 | 1 |
| 30 | லங்கா மினரல்ஸ் சான்ட்ஸ் லிமிட்டெட் | 69 | 1,205 | 3,124 |
| 31 | லங்கா பொசுப்பேற்று லிமிட்டெட் | 150 | 117 | -7** |
| 32 | கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டெட் (அ) | 14 | 4 | 41 |
| 33 | அபிவிருத்தி லொத்தர் சபை | 2,994 | 2,954 | 2,202 |
| 34 | தேசிய லொத்தர் சபை | 1,435 | 1,003 | 638 |
| 35 | அரச மருந்தாக்கல், உற்பத்திக் கூட்டுத்தாபனம் | 1,161 | 1,238 | 808 |
| 36 | இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் | 9 | -21 | -21 |
| 37 | அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 2,546 | 3,157 | -2,080 |
| 38 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை | 174 | -258 | -10 |
| 39 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு லிமிடெட் | -251 | -344 | -234 |
| 40 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | -236 | -224 | -338 |
| 41 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | -2 | 9 | -111 |
| 42 | இலங்கை கைப்பணிச் சபை | -98 | -35 | 33 |
| 43 | அரச மரக் கூட்டுத்தாபனம் | 464 | 1,236 | 201 |

## அட்டவணை 3.2 52 பிரதான அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் இலாபமீட்டல் தன்மை

ரூபா.மில்லியன்

| | தொழில்முயற்சிகள் | 2020* | 2021* | 2022.08.31 அன்றுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான (தற்காலிக) |
|---|---|---|---|---|
| 44 | எஸ்டிசி ஜெனரல் ரேடிங் கம்பனி | -120 | 63 | 12 |
| 45 | லங்கா சதொச லிமிட்டெட் | -1,381 | -880 | -360 |
| 46 | அரச அச்சகக் கூட்டுத்தாபனம் | -44 | -208 | -213 |
| 47 | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | -48 | -63 | -60 |
| 48 | இலங்கை மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனம் | -236 | -140 | -97 |
| 49 | இலங்கை உரக் கம்பனி லிமிட்டெட் | 268 | 124 | 12 |
| 50 | கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி லிமிட்டெட் | 241 | 260 | 138 |
| 51 | ஹோட்டல் டிவலப்பர்ஸ் லங்கா பிஎல்சி | -877 | -947 | -297 |
| 52 | லங்கா சீனிக்கம்பனி லிமிட்டெட் | 1,171 | 1,577 | 3,435 |
| | **மொத்தம்** | **33,929** | **-87,058** | **-726,875** |

மூலம் : அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்
* வரைவு
** 2022.07.31 அன்றுள்ளவாறான இலாபமீட்டல் தன்மை (சன - யூலை 2022)
***2022.06.30 அன்றுள்ளவாறான இலாபமீட்டல் தன்மை (சன - யூன் 2022)
(அ) 2022 மார்ச் 31 நிதியாண்டு முடிவு (31 மார்ச் 2022)

## அட்டவணை 3.3 அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் அறவீடுகள் / பங்கிலாபம்

ரூபா.மில்லியன்

| | உண்மையான | | 2022.08.31 அன்றுள்ளவாறு | மதிப்பிடப்பட்ட | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | | 2023 | 2024 |
| **அறவீடு** | 14,769 | 25,919 | 12,931 | 30,039 | 30,639 |
| தேசிய சேமிப்பு வங்கி | 1,000 | 3,500 | - | 2,100 | 2,142 |
| இலங்கை வங்கி | 1,250 | 1,500 | - | 6,500 | 6,630 |
| மக்கள் வங்கி | 2,500 | 1,977 | - | 1,750 | 1,785 |
| தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 5,000 | 8,500 | 7,200 | 9,000 | 9,180 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | - | - | - | - | - |
| அரச மரக் கூட்டுத்தாபனம் | - | 100 | 150 | 100 | 102 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 782 | 1,824 | 1,508 | 2,500 | 2,550 |
| புவிச் சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் | - | 2,000 | 650 | 1,500 | 1,530 |
| தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை | - | 15 | 35 | 30 | 31 |
| இலங்கை முதலீட்டுச் சபை | 156 | - | 416 | 450 | 459 |
| பிணையங்கள் மற்றும் பரிவரத்தனை ஆணைக்குழு | - | - | - | - | - |
| இலங்கை ஏற்றுமதி வரவுக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | - | 25 | - | 20 | 20 |
| மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் | - | 25 | - | - | - |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்திப் பணியகம் | - | - | - | 50 | 51 |
| சிவில் விமானப் போக்வரத்து அதிகார சபை | - | 50 | 500 | 500 | 510 |
| அரச மருந்தாக்கல், உற்பத்திக் கூட்டுத்தாபனம் | - | 100 | 100 | 100 | 102 |
| அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | - | - | 128 | 100 | 102 |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையம் | - | 110 | 290 | 200 | 204 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | - | - | 1,200 | 750 | 765 |
| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | - | - | 10 | - | - |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் | - | - | - | 50 | 51 |
| இலங்கை நில மீட்பு மற்றும் மேம்பாட்டு ஆணைக்குழு | - | - | - | 5 | 5 |
| இலங்கை துறைமுக அதிகார சபை | - | - | - | 1,499 | 1,529 |
| தேசிய மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகார சபை | 81 | 147 | 400 | 250 | 255 |

## அட்டவணை 3.3 அரசுடமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் அறவீடுகள் / பங்கிலாபம்

ரூபா.மில்லியன்

| | உண்மையான | | 2022.08.31 அன்றுள்ளவாறு | மதிப்பிடப்பட்ட | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | | 2023 | 2024 |
| தேசிய வணிக மேலாண்மை நிறுவனம் | - | 16 | 33 | 35 | 36 |
| இலங்கை ஆயுர்வேத மருத்துவ கூட்டுத்தாபனம் | - | 5 | - | 10 | 10 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை | 4,000 | 4,000 | - | 1,000 | 1,020 |
| நில சீர்திருத்த ஆணையகம் | - | 1,100 | - | 500 | 510 |
| தேசிய லொத்தர் சபை | - | 900 | 261 | 500 | 510 |
| முதுகலை மேலாண்மை நிறுவனம் | - | - | 50 | 20 | 20 |
| குடியிருப்பு மேலாண்மை ஆணையகம் | - | 25 | - | 10 | 10 |
| இலங்கை தர நிர்ணய நிறுவனம் | - | - | - | 10 | 10 |
| ஏனையவை | - | - | - | 500 | 510 |
| **பங்கிலாபங்கள்** | 2,854 | 4,672 | 4,851 | 5,633 | 5,700 |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 60 | 60 | 60 | 61 |
| இலங்கை வங்கி | 346 | 346 | 346 | 350 | 354 |
| மக்கள் வங்கி | 316 | 316 | 316 | 300 | 304 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1 | 1 | 1 | 2 | 2 |
| வர்த்தக வங்கி | - | - | 0.17 | 2 | 2 |
| இலங்கை காப்புறுதி கூட்டுததாபனம் | 695 | 899 | 1,511 | 900 | 911 |
| விமான நிலைய, விமான சேவைகள் லிமிடெட் | - | - | - | 100 | 101 |
| இலங்கை கனிப்பொருள் மணல்கள் | - | 700 | 359 | 500 | 506 |
| இலங்கை பொஸ்பேர்ட் லிமிடெட் | - | 20 | 20 | 15 | 15 |
| லங்கா லெய்லண்ட் லிமிடெட். | 2 | 3 | - | 3 | 3 |
| ரக்ணா ஆரக்சக லங்கா லிமிடெட் | - | - | - | 50 | 51 |
| மாந்தை உப்பு லிமிடெட் (தேறிய உப்புக் கம்பனி) | 2 | 15 | - | 11 | 11 |
| லங்கா பேர்டிலைஸர் லிமிடெட் | 304 | 29 | 15 | 35 | 35 |
| வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் பேர்டிலைஸர் கம்பனி | - | - | 10 | 10 | 10 |
| பரந்தன் கெமிகல் கம்பனி லிமிடெட் | 10 | 3 | 50 | 30 | 30 |
| ஶ்ரீ லங்கா டெலிகொம் ீடுஉ | 947 | 1,331 | 1,805 | 2,100 | 2,125 |
| டி லா ரு லங்கா லிமிடெட் | - | 345 | - | 130 | 132 |
| இலங்கை மின்சாரக் கம்பனி | - | 327 | 218 | 250 | 253 |
| **இலங்கை கைத்தொழில் பெருந்தோட்டங்கள்** | 82 | 82 | - | 25 | 25 |
| **சிலோன் எக்றொ இன்டஸ்றீஸ்** | 77 | 95 | 24 | 30 | 30 |
| **லங்கா லொஜிஸ்ரிக் லிமிடெட்** | - | - | - | - | - |
| **லங்கா திரிபோஷ லிமிடெட்** | - | - | - | 10 | 10 |
| **எஸ்டிசீ பொது வர்த்தகக் கம்பனி** | - | - | 11 | 15 | 15 |
| **பெருந்தோட்டக் கம்பனிகள்** | 12 | 98 | 95 | 155 | 157 |
| **ஏனையவை** | - | 2 | 10 | 550 | 557 |
| **மொத்தம்** | 17,623 | 30,591 | 17,782 | 35,672 | 36,339 |

மூலம் : அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

# 2023 வரவு செலவுத் திட்ட தயாரிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள்

# 04

## 2023 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள்

2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் பரந்த பொருளாதார மற்றும் அரசிறை மதீப்பீடுகள் என்பன, தொடர்ச்சியான அனுமானங்கள், பகுப்பாய்வுகள் மற்றும் உத்தியோகத்தர்களின் தீர்ப்புகளின் அடிப்படையில் அமைந்தவை, மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), பணவீக்கம், வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள் மற்றும் வேலையின்மை போன்ற வருமானம் மற்றும் செலவு மதீப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய விபரங்களை இந்தப் பிரிவு வழங்குகின்ற அதேவேளை மதீப்பீடுகள் தொடர்பான செயற்பாடுகளை பாதுகாக்கக்கூடிய விடயங்களையும் இது வழங்குகின்றது.

### மொத்த உள்நாட்டு உற்பத்தி

இலங்கை தற்போது வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருகின்றது. வெளிநாட்டு செலாவணி கையிருப்பு குறைவால் ஏற்பட்ட பன்முக நெருக்கடியானது வெளிநாட்டு நாணயமாற்று பணப்புழக்கத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது மற்றும் எரிபொருள், எல்.பி எரிவாயு மருந்துகள் மற்றும் மூலப்பொருட்கள் தட்டுப்பாடு, பணவீக்கம் மற்றும் உணவுப் பொருட்களின் விலை உயர்வு என்பவற்றிற்கும் கடன் சுமைகள், வெளிநாட்டு கடன் செலுத்துகைகளின், தற்காலிகமான நிறுத்தல் போன்றவற்றிற்கும் வழிவகுத்தது. 2022 ஆம் ஆண்டில் முதல் அரையாண்டில் நெருக்கடிகள் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் சீர்குலைந்ததன் காரணமாக பொருளாதாரம் 4.8 சதவீதமாகச் சுருங்கியது. எரிபொருள் வழங்குவதற்கும் தடையின்றி எல்.பி எரிவாயு வழங்குவதற்குமாக அறிமுகப்படுத்தப்பட்ட ரேஷன் முறையினால் இந்த அறிக்கை தொகுக்கும் வேலையில் நெருக்கடிகளின் தாக்கங்கள் ஓரளவு குறைந்திருந்தாலும் வெளிநாட்டு நாணய மாற்று தட்டுப்பாடு, பொருட்களின் பற்றாக்குறை, உள்ளீடுகளின் விலை உயர்வு மற்றும் மின்வெட்டு என்பன தொடர்வதற்கு வழி வகுக்கின்றது. இந்த வழங்கல் தொடர்பான கட்டுபாடுகள் உற்பத்தியை மோசமாக பாதிக்கும், வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் என்பனவற்றிற்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்றது. கேள்விப் பக்கத்திலிருந்து தனியார் நுகர்வு மற்றும் பொது முதலீடு ஆகியவை உயர் பணவீக்க அமைப்பிற்கு மத்தியில் மட்டுப்படுத்தப்படும். மேலும், 2023 இல் பெரும்பாலான நாடுகளில் முன் கணிக்கப்பட்ட மந்த நிலைமை மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய பிரதேசம் மற்றும் சீனாவின் முக்கிய பொருளாதாரங்களின் மந்த நிலமை என்பவற்றால் இலங்கையின் ஏற்றுமதிக்கான கேள்வி மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகை என்பனவும் பாதிக்கப்படும். இந்நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடியின் அழுத்தங்கள் அடுத்து வரும் ஆண்டு வரை தொடரும் என்றும், 2023 இல் பொருளாதாரம் 3.0 சதவீதம் சுருங்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### நுகர்வோர் விலைகள்

2023 முதல் நாணய உதவிகளின் நிறுத்தத்துடன் இந்த அறிக்கை தொகுக்கும் நேரம் பணவீக்கம் 60 சதவீதத்திற்கு மேல் இருந்த நிலையிலிருந்து மிதமான அளவில் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் உலகளாவிய ரீதியில் பொருட்களின் விலை உயர்வினால் பணவீக்கம் 2023 இல் சராசரியாக சுமார் 30 சதவீதம் இரட்டை இலக்கத்தில் இருக்கும். உலகளாவிய பணவீக்கம் 2022 இன் பிற்பகுதியில் உச்சத்தை எட்டும். எனவே 2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் 4.7 சதவீதமாகக் குறைவதற்கு முன்பு 2023 இல் உயர்வடையும். கச்சா எண்ணெய் விலை 2023 இல் சராசரியாக ஐ.அ. டொலர் 92.˙.டிடிட ஆக இருக்கும் என்றும் 2024 இல் ஐ.அ. டொலர் 80.˙.டிடிட ஆக குறைவடையும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகளால் வேலையின்மை விகிதம் 4.6 சதவீத அதிகரிப்பையும் தொழிற்படை பங்களிப்பு விகிதம் 50.2 சதவீத வீழ்ச்சியையும் பதிவுசெய்துள்ளது. இருப்பினும் பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான அதிகரிப்புடன், வேலையின்மை விகிதம் 2023 இல் 5 சதவீதத்திற்கும் குறைவாக காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. விவசாயத் துறையானது உரத்திற்கான உறுதியான அணுகுமுறையுடன் புத்துயிர் பெறும் மற்றும் எதிர்பார்க்கப்படும் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதன் மூலம் கைத்தொழிற்துறை பெரிதும் மீட்கப்படும். இத்தகைய அபிவிருத்திகள் 2023 இல் வேலைவாய்ப்பை உருவாக்க உதவும்.

### வெளிநாட்டுத்துறை

அதிக விலை மட்டுப்படுத்தப்பட்ட நிதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக உற்பத்திக்கான தடைகள் மற்றும் இறக்குமதி பொருட்களுக்கான கேள்விக் குறைப்பு காரணமாக ஏற்றுமதியின் அதிகரிப்புடன் 2022 முதல் ஒன்பது மாதங்களில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொ. 4,104 மில்லியன் வர்த்தக பற்றாக்குறையிலிருந்து முன்னேறி, வர்த்தகப் பற்றாக்குறையானது 2023 இல் மேலும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், முதலீடு மற்றும் இடைநிலைப் பொருட்களுக்கான அதிகரித்த தேவையை பூர்த்தி செய்ய சில இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் வெளியிடப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் தொழிலாளர்களின் பண அனுப்புகைகள் 2023 இல் அதிகரிக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை செயற்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் (குனுஐ) உள்வருகை மீண்டும் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், மாற்று விகிதம் அதிகமாக இருக்கும் ஆனால் பெரும்பாலும் நிலையானதாக இருக்கும்.

### நாணய திரட்டுக்கள்

நாணய வழங்கல்கள் பொருத்தமான அளவில் பராமரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தனியார் துறையின் முதலீட்டை இலகுபடுத்துகின்ற அதேவேளை அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்பு (ளுழுநுள), எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான செலவு மீட்பு விலை பொறிமுறைகளின் பயன்பாடு, அரசாங்கத்தின் நிகர கடன் படிப்படியாகக் குறைத்தல் மற்றும் வருமான அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு முயற்சிகளுடன் 2023 இல் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### வருமானம்

வருமான மதீப்பீடுகளுக்கு பயன்படுத்தப்படும் அனுமானங்கள் இணைப்பு III இல் கொடுக்கப்பட்டுள்ளது.

### செலவு

செலவு மதீப்பீடுகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை பின்வருமாறு:

- ஊழியர்களுக்கான வருடாந்த அதிகரிப்புகள் காரணமாக, சாதாரன வருடாந்தர சம்பள உயர்வை அனுமதிக்கும் போது அரச துறையில் ஏறக்குறைய 1.4 மில்லியன் ஊழியர்கள் இருப்பார்கள் என்ற அனுமானத்தின் அடிப்படையில் சம்பளம் மற்றும் ஊதியங்கள் தொடர்பான செலவின மதிப்பீடுகள் காணப்படுகின்றன. அத்தியவசியமாக கருதப்படாத புதிய ஆட்சேர்ப்புக்களை நிறுத்துவதன் காரணமாக புதிய ஆட்சேர்ப்புக்கள் குறைவாக காணப்படுமென எதிர்பார்க்கபடுகின்றது.
- ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பான செலவினங்களுக்கான மதிப்பீட்டில், ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை சுமார் 730,000 என கருதப்படுகின்றது.
- அதிகரித்த உள்நாட்டு வட்டி விகிதங்கள் மற்றும் இலங்கை ரூபாவின் நாணய பெறுமதி இறக்கம் காரணமாக வட்டி கொடுப்பனவுகளுக்கான செலவினங்களில் அதிகரிப்பு காணப்படும்.
- எரிபொருள் மற்றும் எழுது பொருட்கள் போன்ற பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் மின்சாரம் மற்றும் நீர் போன்ற பயன்பாட்டு சேவைகளின் விலை அதிகரிப்பு காரணமாக பொருட்கள் சேவைகளுக்கான செலவுகள் அதிகரிக்கும்.
- பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களில் இருந்து ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்களைப் பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட சமூக பாதுகாப்பு அமைப்புக்களால் மானியங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான செலவுகள் அதிகரிக்கும். தகுதியுடைய அனைத்து பயனாளிகளையும் உள்ளடக்கி அதன் இலக்கை மேம்படுத்துவதன் மூலமும் பண உதவித் தொகையை அதிகரிப்பதன் மூலமும் சமுர்த்தி திட்டத்தின் வரம்பு விரிவுபடுத்தப்படும். பள்ளிச் சிறார்கள் (சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள்) மற்றும் ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கு ஆதரவளிக்கும் மற்றும் திட்டங்கள் அத்துடன் சிறந்த ஊட்டச் சத்தை நோக்கமாக கொண்ட திட்டங்கள் (எ.கா. - கர்ப்பிணித் தாய்மார்களை இலக்காகக் கொண்ட ஊட்டச்சத்து திட்டம்) மற்றும் ஆரோக்கியம் (எ.கா. - இலவச மருந்து) என்பன அதிகரித்த செலவில் தொடரப்படும், மேலும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன் உரமானியத் திட்டமும் தொடரப்படும்.
- அரச துறையில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் மூலமான தீர்வுகளை ஊக்குவிப்பதான முயற்சிகள் தொடரும்.
- பொருளாதார நெருக்கடிகளின் அழுத்தத்தினால் அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் அதிகரிக்கும். இருப்பினும் இத்தகைய மாற்றல்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. மற்றும் முக்கிய அரசுடமை நிறுவனங்களின் மீள்கட்டமைப்புடன் நடுத்தர காலத்திற்கு குறைக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.
- நிதிக்கட்டுப்பாடுகள் காரணமாக பொது முதலீடுகள் அத்தியவசிய செலவினங்களுக்கு மட்டுப்படுத்தப்படும். முன்னுரிமையற்ற மற்றும் அத்தியவசியமற்ற செலவுகள் குறைக்கப்படவிருப்பதனால், பொது முதலீடுகள் 2023 இல் மொ.உ. உற்பத்தியில் 4.0 சதவீதமாக இருக்கும்.
- பொது முதலீட்டுச் செயற்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளை திறம்பட மேற்கொள்வதற்கும், நகல் செயல் முறைகளைத் தவிர்க்கவும், நிறுவனங்களுக்கிடையே நெருக்கமான ஒத்துழைப்புகளும் மேலும் கடுமையான கண்காணிப்பும் உறுதி செய்யப்படும்.
- நிதி மற்றும் பணப்புழக்க முகாமைத்துவத்தில், பொறுப்பு கட்டுப்பாட்டு பொறிமுறைகள் செயற்படுத்தப்படும்.

### கடன் பெறுகைகள்

நடுத்தர காலத்தில் அரசாங்க கடன் மொ.உ.உற்பத்தி விகித்தில் படிப்படியாகக் குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்க மறுசீரமைப்பு செயன்முறைகளுடன், வருமான வரி, பெறுமதிசேர் வரி, பந்தயம் மற்றும் சூதாட்டதீர்வை மற்றும் வரி அல்லாத வருமானம் ஆகியவற்றின் மீதான வருமான அதிகரிப்பு நடவடிக்கைகள், வரவு செலவு பற்றாக் குறையையும் அதன் மூலம் கடன் மட்டத்தையும் குறைக்கும். மேலும் அரசாங்கத்தின் நிதித் தேவைகள் மிகக் குறைந்த செலவில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்யும் வகையில் கடன்முகாமைத்துவம் மேம்படுத்தப்படும்.

**மதிப்பீடுகளுக்கான பாதிப்புகள்**

பொருளாதார எதிர்வுகூறல்கள் பின்வரும் சவால்களால் பாதிக்கப்படக்கூடும்.

- ரஷ்யா - உக்ரைன் மோதல்களின் தொடர்ச்சியான தாக்கங்களால் உலக பொருளாதாரத்தில் மந்த நிலைமை.
- இறக்குமதிச் செலவுகள், உள்நாட்டு நுகர்வோர் விலைகள், உற்பத்தி செலவுகள் மற்றும் வரவு செலவுத்திட்ட செலவுகள் ஆகியவற்றை கடுமையாகப் பாதிக்கக்கூடிய உயர்ந்த உலகளாவிய பொருட்களின் விலைகள் இலங்கைப் பொருட்களுக்கான வெளிநாட்டுக் கேள்வியையும் பாதிக்கலாம்.
- உள்நாட்டு உற்பத்தி, சர்வதேச வர்த்தகம், உள்நாட்டு விலைகள் மற்றும் ஒட்டு மொத்த வளர்ச்சியைப் பாதிக்கும் வெளிப்புற தாக்கங்களை சீர்செய்வதற்கான அதிக செலவுகள்.
- விவசாயம், நீர் மின் உற்பத்தி மற்றும் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தை மோசமாக பாதிக்கும் இயற்கை பேரழிவுகள் மற்றும் சாதகமற்ற வானிலை ஆகியவற்றுடன் தொடர்புடைய அபாயங்கள்.
- நிர்வாகம் மற்றும் கொள்முதல் செய்வதில் தடைகள் மற்றும் தாமதங்கள்.
- பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களைப் பெறுவதில் தாமதம் உட்பட நிதி நிலைமையில் பொருள் விளைவை ஏற்படுத்தக்கூடிய அபாயங்கள்.
- உலக சந்தையில் பெற்றோலியம் மற்றும் பொருட்களின் விலைகளின் அதிக ஏற்ற இறக்கமானது பரந்த பொருளாதாரத்தின் ஸ்திரத் தன்மையை மற்றும் வளர்ச்சியை பாதிக்கும் அதேவேளை அரசாங்கத்தின் வருமானம் மற்றும் செலவுகளையும் பாதிக்கும்.
- உள்நாட்டு மற்றும் உலகளாவிய பணவீக்கத்தின் வளர்ச்சியுடன் மீண்டெழும் செலவுகளும் அதிகரிக்கின்றது.
- அரசுடமை நிறுவனங்களின் குறைவான செயற்திறன் மற்றும் அரசுடமை நிறுவனங்களின் மறுசீரமைப்பு செயன்முறையின் முன்னேற்றம்.

**இணைப்பு I**

**2022 செப்தெம்பர் 30 வரையில் பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் விபரப்பட்டியல்**

| தொடர் இல. | வங்கி அல்லது / நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா. மில்லியன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | ஆசிய அபிவிருதி வங்கி | இலங்கை மின்சார சபை | 147,964.12 | 166,459.64 |
| | | பிராந்திய அபிவிருத்தி வங்கி | 18,495.52 | |
| 2 | ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) | இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி | 66,583.85 | 66,583.85 |
| 3 | இலங்கை வங்கி | கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனம் | 500.00 | 895,605.35 |
| | | இலங்கை மின்சார சபை | 5,000.00 | |
| | | இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் | 250.00 | |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 610,352.00 | |
| | | சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 835.00 | |
| | | ஜனதா எஸ்டேட் அபிவிருத்தி சபை | 200.00 | |
| | | லங்கா கோல் கம்பனி பிரைவட் லிமிட்டெட் | 22,000.00 | |
| | | இலங்கை லிட்ரோ கேஸ் லிமிடெட் | 8,000.00 | |
| | | நெஷனல் ஸயகூல் ஒப் பிஸ்னஸ் மெனெஜ்மென்ட் லிமிடெட் | 8,600.00 | |
| | | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | 72,913.84 | |
| | | நொத்தேச லிமிடெட் | 38.63 | |
